620

கலைக்கதிர்

ஜூன் '55

1620
2-55



18 JUL 1955
MADRAS

உணவு உற்பத்தியின் முன்னணியில் நிற்பவை

DPF பம்புகள்



மோட்டாருடன் இணைக்கப்பட்ட 'DPF' பம்பு

'DPF' பம்புகளின் விசேஷ அம்சங்கள்

குறைந்த செலவில் அதிக தண்ணீர்
★ நீடித்த உழைப்பு
★ நிசப்தமான ஓட்டம்
★ குறைந்த கவனிப்பு

பால் பேரிங்குகள் பொருத்தப்பட்ட 'DPF' பம்புகள் 2" முதல் 6" வரை எல்லா சைஸ்களிலும் கிடைக்கும்.



DPF பெல்ட் டிரைவ் பம்பு

தண்டாயுதபாணி பவுண்டரி லிட்.,

பாப்பநாய்க்கன்பாளையம்,
கோயமுத்தூர்.

போன்: 219

தந்தி: மோட்டார்பம்பு

குமரன் மில்ஸ் லிமிடெட்,

புதுப்பாளையம், கோயமுத்தூர்.

(மேட்டுப்பாளையம் ரோட்)

1935-ல் ஸ்தாபிக்கப்பெற்றது.

●

மூலதனம், மானேஜ்மெண்டு, தொழிலாளர்

ஆக எல்லாம் நம் இந்திய மயம்

முதல்தரமான இந்த மில்லில் தயாராகும்

சுதேசி நூலையே வாங்குங்கள்

20, 40, 60 நெ. நூல் தயாரிக்கப்படுகிறது

குணம் நிறைந்த சரக்கை உற்பத்தி செய்வதே

நிர்வாகஸ்தர்களது நோக்கம்.

●

கோவையில் சிறப்பாக விளங்கும் மில்களின் வரிசையில்

இந்த மில்லும் சேர்ந்திருக்கிறது.

கல்வி, தொழில் அனுபவம் நிறைந்தவர்களால்

நிர்வகிக்கப் பெற்று வருகின்றது.

வருடா வருடம் பங்குதாரர்கள் நல்ல

டிவிடெண்டு பெற்று வருகிறார்கள்

●

Managing Agents :—

N. APPUSWAMY NAIDU & CO.

Managing Director :—

G. V. MUTHUSWAMY, B. Sc.

OFFICE OF THE REGISTRAR OF B... 1955 MADRAS

இன்ஷ்யூரன்ஸ்

ஆயுள், நெருப்பு, கப்பல், மோட்டார் விபத்து

முதலிய இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள், மற்றும் லாபகரமான ஏஜன்சி நிபந்தனைகள் பற்றிய விபரங்களுக்கு எழுதவும்.

பயனீர்

பயர் & ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ்
கம்பெனி லிமிடெட்.

தலைமை ஆபீஸ் : ஜெயில் ரோடு, கோயமுத்தூர்.

தந்தி : "PROTECTION" போன் : "121"

"கலைக்கதிர்"

கலையின் களஞ்சியம்
சிந்தனைச் செல்வம்

★ கண்ணுக்கும், கருத்துக்கும் விருந்து
★★ கலைநலம் மிக்கது; எழில் மிகப்பெற்றது
★★★ பார்த்தால் படிக்கத் தூண்டும்
★★★★ படித்தபின் பாதுகாக்க எண்ணம் வரும்

ஆண்டுச் சந்தா ஐந்து ரூபாய்

கலைக்கதிர்

பீளமேடு போஸ்டு, கோயமுத்தூர்.

கலைக்கதிர்

மலர்—7 ★ ஜூன் – 1955 ★ இதழ்—6

ஆசிரியர் :

ஜி. ஆர். தாமோதரன்,

B. Sc. Elec., B. Sc. Mech. (Durham), M. I. E. E. (London), A. M. I. E. (India) M. P.

❋

இந்த இதழில் :

அன்பின் ஆணை	திரு டி. வி. மாணிக்கம்	2
ஏன் இந்தத் தயக்கம் ?	,, டாக்டர் மு. வ.	3
சிறப்புமிக்க செயற்கை வைரங்கள்	,, 'யூசிஸ்'	9
விந்தை எறும்புகள்	,, ஆர். இருசப்பிள்ளை	10
அல்லல் அருள் ஆள்வார்க்கு இல்லை	,, கு. நடேச உடையார்	13
தற்காப்பின் எல்லை	,, ''இராதா''	19
அதிசயப் பிறப்பு	,, ரா. சுப்பிரமணியம்	22
ஒளிதரும் தாவரங்கள்	,, வி. டி. ஜான்	25
கடலைப்பற்றி	,, ச. மு. பிள்ளை	28
ஊன் உண்ணுமை	,, சீனி. வேங்கடசாமி	32
மனிதன்-மந்திரம்-சடங்கு	,, ம. ரா. பூபதி	37
பாடும் மீன்	,, கே. அமரசிங்கம்	43
வானம் கருத்தால்	,, K. S. மகாதேவன்	46
வினாக்களும் விடைகளும்	... ...	52
மருத்துவ உலகிலே	,, தமிழாக்கம் வி. ஞானி	53
உள்ளத்தின் உண்மை	,, T. E. சண்முகம்	56
காதல் படும் பாடு	,, தா. ஏ. ஞானமூர்த்தி	60
நூல் அரங்கு	... ...	66
இது செய்தி	,, ...	68

'கலைக்கதிர்' இதழில் வெளியிடும் கட்டுரை, கதை முதலியவற்றின் கருத்துகட்கு அவற்றை எழுதியவர்களே பொறுப்புடையவர்கள்.

அன்பின் ஆணை

திரு. டி. வி. மாணிக்கம்

*

மெல்லென வருவாய்! போவாய்!
    மெய்யினை உருக்கும் பார்வை!
முல்லையின் சிரிப்பு! மேக
    முழுமதி முகத்தில் நாணம்!
"நில்!" என நிறுத்தி உன்றன்
    நீள்விழி நிமிர்ந்து நோக்கி,
"சொல்! உன(து) எண்ணம் என்ன?
    சுந்தரி!" எனக்கேட் போமா?

அல்லது, "மேலும் என்னை
    அலைக்கழித்(து) உயிரை வாட்டிக்
கொல்லவும் நினைவு தானோ?
    கூறடி! இதயம் உன்றன்
பல்லவி பாடி நித்தம்
    பதைப்பதேன்? நெஞ்சம் கல்லோ?
சொல்லடி பாவாய்! என்றன்
    சுந்தரி!" எனக்கேட் போமா?

என்றெலாம் ஓடும் உள்ளம்!
    எதிர்உனைக் கண்ட போதோ
அன்றெலாம் எண்ணி எண்ணி
    ஆயிரம் கவிதை கோத்துத்
தென்றலாய்த் திரிந்த நெஞ்சம்
    "திக்"கெனும்! கால்கள் பின்னும்!!
"நன்று! நான் இதற்(கு)என் செய்ய?!
    நவில்!" என நகைக்கின் றுயோ?

நகைத்திடல் நன்றோ, இதோ—
    நங்கையே எனினும் ஒன்று.
திகைத்(து)என(து) உள்ளம் செய்த
    தீவிரப் புரட்சி தன்னில்
பகைத்தவை அன்னம், வாழ்வு,
    பஞ்சணை மெத்தை. செய்தி
மிகைத்தவை அல்ல; நெஞ்சில்
    மிஞ்சிடும் அன்பின் ஆணை!

ஏன் இந்தத் தயக்கம்?

'தமிழிலே கலைச் சொற்கள் உருவாக வேண்டும். அவற்றை அமைத்து நூல்கள் பல வெளிவரவேண்டும், அந்த நிலை வந்த பிறகுதான் தமிழ் கல்லூரிகளில் போதனை மொழியாக முடியும்'— இவ்வாறு இன்று ஆசிரியர்கள் முதல் அரசியலார் வரையில் பலரும் கூறத் தலைப்பட்டுவிட்டனர்.

தமிழ்நாடு முன்னேற முயலும்போதெல்லாம் இதற்கென்றே தனிவகையான முட்டுக் கட்டைகள் தோன்றிவருகின்றன. தமிழ்நாட்டு அறிஞர்களே பெரும்பாலும் அவற்றுக்குக் காரணமாக இருக்கின்றனர். இது மிக வருந்தத் தக்கது. நாட்டின் ஆட்சிமொழியாகவும் பல்கலைக் கழக அறிவுமொழியாகவும் தமிழ் வளர்வதற்கு அரியதொரு வாய்ப்புக் கிடைத்தபோதும் இந்த முட்டுக்கட்டை முன் வந்துவிட்டது.

தமிழில் கலைச் சொற்கள் உருவாகத் தேவை இல்லை என்று கூறவில்லை. அவற்றை அமைத்து நூல்கள் வெளிவர வேண்டா என்றும் கூறவில்லை. ஆனால், இவ்வளவும் குறைவின்றி அமையும் வரையில் தமிழ் போதனை மொழியாக ஆதல் கூடாது என்று சொல்வதுதான் வருந்தத் தக்கதாகும்.

டாக்டர் மு. வ.

எந்தத் துறையிலும் நல்ல நூல்கள் வெளிவர வேண்டுமானால் அதற்கு முன்பே அந்தத் துறையில் சிந்தனை வளர்ந்திருக்க வேண்டும். சிந்தனை வளர்ந்த பிறகுதான் செம்மையான நூல்கள் எழமுடியும். இன்று விஞ்ஞானத் துறையில் நூல்கள் இல்லையே என்று குறைகூறுவோர் தமிழில் அந்தத் துறையில் சிந்தனை வளர்த்தவர் இல்லையே என்பதை உணரவேண்டும்.

விஞ்ஞானத் துறையில் தாய்மொழியில் சிந்தனை வளராமைக்குக் காரணம் என்ன? கற்றுத் தேர்ந்த ஆசிரியர்கள் ஆங்கிலத்தின் வாயிலாகவே விஞ்ஞான நூல்களைக் கற்றார்கள். மாணவர்களுக்குக் கற்பிக்கும் போதும் ஆங்கிலத்தின் வாயிலாகவே கற்பிக்கின்றார்கள்; கற்கும் மாணவர்களும் ஆங்கிலத்தின் வாயிலாகவே கற்கின்றார்கள். ஆகவே, அறிவை வளர்க்கும் பொறுப்புடைய கல்வி உலகம் தாய்மொழியில் சிந்தனை வளர்வதற்கு ஒரு சிறு வாய்ப்பும் தரவில்லை; வாய்ப்புத் தராமலே இருந்துவிட்டு இன்று தாய்மொழியைக் குறைகூறுகிறார்கள். ஆங்கிலத்திற்கு உள்ள ஆற்றலும் வளமும் தமிழுக்கு இல்லை என்று கூசாமல் குறைகூறுகிறார்கள்.

ஆங்கிலம் அந்த ஆற்றலும் வளமும் பெற்றது எவ்வாறு? உலகத்தின் விஞ்ஞானிகளெல்லாம் இங்கிலாந்தில் பிறந்தவர்களா? ஆங்கில மொழியில் எழுதியவர்களா?—இரண்டும் இல்லை. ஆங்கில நாட்டிலும் ஒரு சில விஞ்ஞானிகள் பிறந்தார்கள்; ஆங்கிலத்தில் எழுதினார்கள். பெரும்பாலோர் பிற நாட்டாரே; பிற மொழியினரே. அவ்வாறு

இருக்க ஆங்கிலம் அறிவு மொழியாக ஆற்றலும் வளமும் பெற்றது எவ்வாறு? ஆங்கிலப் பல்கலைக் கழகங்கள் தம் தாய்மொழியாகிய ஆங்கிலத்தின் வாயிலாகவே பிறநாட்டு நல்லறிஞர் கருத்துக்களை உணரத் தலைப்பட்டதே காரணம் ஆகும். ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் போன்ற பல்கலைக் கழகங்கள் ஆங்கில மொழியின் வாயிலாகவே ஜெர்மன் விஞ்ஞானியின் கருத்துக்களை மாணவர்களுக்குக் கற்பித்தன. ஆங்கில மாணவர் அக் கருத்துக்களைச் சிந்தனை செய்து ஆங்கில மொழியில் பேசவும் எழுதவும் வல்லவராக விளங்கினர். வகுப்புக்களில் பேசவும் தேர்வுக்கூடத்தில் எழுதவும் அவர்கள் பெற்ற அந்த ஆற்றலே பிற்காலத்தில் மேடைகளில் எடுத்துரைக்கவும் நூல்களில் செம்மையாக எழுதவும் துணை செய்தது; காலப் போக்கில் ஆங்கிலமொழி பல விஞ்ஞான நூல்களையும் பெற்று வளம் நிரம்புவதற்குக் காரணம் ஆயிற்று.

இந்த முறையைத் தமிழ் அறிஞர்கள் போற்றி வருவார்களானால், நாட்டுக்கும், நாட்டு மொழிக்கும் நன்மை செய்தவர் ஆவார்கள். ஆனால், ஏழெட்டு நூற்றாண்டுகளாக அடிமைப்பட்டுப் பிறர்க்கு அடங்கி வாழ்ந்த இனம் ஆகையால், தமிழர்க்குப் போதிய உரிமை உணர்ச்சி இன்னும் பிறக்கவில்லையோ என்று எண்ணவேண்டி இருக்கிறது. தமிழிலே கற்பிக்கலாம், தட்டுத் தடுமாறியேனும் கருத்துக்களை உணர்த்தலாம் என்ற துணிவு ஆசிரிய உலகத்துக்குப் பிறக்கவில்லை. நம் அறிவு தெளிவும் உரமும் பெறவேண்டுமானால் எவ்வளவு குறைகள் இருந்தபோதிலும் தாய்மொழியின் வாயிலாகவே கற்று உணர முற்படுவோம் என்ற வேட்கை மாணவர் உலகத்துக்குப் பிறக்கவில்லை. இடையிடையே இரண்டொரு சொற்கள் தாய் மொழியில் பேசுதல் தம் மதிப்பைக் குறைத்துவிடுமோ என்று அஞ்சுகின்றனர் ஆசிரியர்கள். தாய் மொழிக்குக் காலத்தைச் செலவிடுதல் ஆங்கிலத் திறனைக் குறைத்துவிடுமோ என்று தயங்குகின்றனர் மாணவர்கள். தொடக்கப்பள்ளி ஆசிரியரே யாயினும் 'சைலன்ஸ்' என்று ஆங்கிலத்தில் கூற விரும்புகின்றனரே யல்லாமல், 'அமைதி' என்ற சொல்லைப் பயன்படுத்த மனங் கொள்ளவில்லை. ஒருகால் அவர் மொழிப்பற்றுக் கொண்டு துணிந்து கூறிவிடினும் மாணவர்களின் செவியைச் 'சைலன்ஸ்' என்ற சொல் ஈர்க்கும் அளவிற்கு 'அமைதி' என்ற சொல் வயப்படுத்த முடியவில்லை. அவ்வாறே 'ப்ரசென்ட் சார்' என்று மாணவர்கள் சொல்லும்போது ஆசிரியர்களின் திருவுளம் மகிழும் அளவிற்கு 'உள்ளேன் ஐயா' என்ற ஒலியால் மகிழ்வதில்லை; நேர்மாறாக மருள்வதும் உண்டு. இந்தச் சிறு சிறு செய்திகளுக்கும் தமிழ் அறிவு மொழியாவதற்கும் தொடர்பு இல்லைபோல் தோன்றலாம்; தொடர்பு உண்டு. இரண்டுக்கும் அடிப்படையானது ஒரே வகை மனப்பான்மையே. கதர்ச் சட்டைக்கும் நாட்டு விடுதலைக்கும் எவ்வளவு தொடர்பு உண்டோ அவ்வளவு தொடர்பு இவற்றிற்கும் உண்டு. சிறு சிறு நிகழ்ச்சிகளில் தமிழைப் பேசவும் கேட்கவும் கூசும் மனம்தான் போதனை மொழியாகத் தமிழ் வரமுடியாது என்னும் அளவிற்கு எண்ணுகின்றது. இரண்டிற்கும் அடிப்படையான காரணம் நெடுங்காலம் இருந்து வந்த அடிமைத்தனத்தால் அமைந்துள்ள தாழ்வு மனப்பான்மையே ஆகும். தமிழர் கடைகளில் உள்ள ஆங்கில விளம்பரப் பலகைகள், வீட்டுப் பெயர்கள், தமிழர்கள் எழுதும் கடிதங்களில் உள்ள பெயர்க் குறிப்புக்கள், முகவரி முதலியவை இதே மனப்பான்மையைத்தான் புலப்படுத்துகின்றன. இந்தியாவில் வேறு எந்தப் பகுதியிலும் இந்நிலைமை இல்லை. ஆங்கில மொழி அளிப்பது பெருமை என்றும் தாய்மொழியால் பெறுவது சிறுமை என்றும் எண்ணும் நெஞ்சத்தை இந்தப் பலகைகள் முதலிய

வற்றில் காணலாம். நியூயார்க்கி லிருந்து வந்து சென்னையில் விமானத்தில் இறங்கும் மலையாளி இன்னொரு மலையாளியைக் கண்டவுடனே மலையாள மொழியில் கொஞ்சிக் குலவ, தமிழ்நாட்டுத் தென்னந் தோப்பில் பொழுதுபோக்கும் தமிழர் இருவர் ஆங்கில மொழியிலல்லவா பேசி மகிழ்கின்றார்! அரைகுறையாக ஆங்கிலம் படித்த தமிழர்களும் தமிழ்ச் செய்தித்தாளை வாங்கிப் படிக்க மனம் இல்லாமல் நாட்டு நன்மையின்மீது சவாரி செய்யும் ஆங்கிலச் செய்தித் தாளையே வாங்கிப் படிக்க விழைகின்றனர். செய்திகளையும் தாய்மொழியின் வாயிலாக உணரமுடியாது என்று இவர்கள் நெஞ்சம் அஞ்சுகின்றது எனலாம். அல்லது தமிழ்ச் செய்தித் தாளைக் கையில் ஏந்தியிருந்தால் ஆங்கிலம் அறியாதவர் என்று பிறர் தவருக எண்ணிவிடுவரோ என்று தயங்குவதாக இருக்கலாம்.

இவ்வாறு அஞ்சியும் தயங்கியும் தமிழர்கள் பெற்ற நன்மை ஏதேனும் உண்டா? முற்காலத்தைப் போல் திறமை வாய்ந்த ஆசிரியர்கள் இக்காலத்தில் இல்லை என்று பெற்றோர்கள் குறைகூறுகின்றனர். முற்காலத்தைப் போல் மாணவர்கள் ஆர்வம் கொண்டு அறிவு வளர்ப்பதில்லை என்று ஆசிரியர்கள் குறைகூறுகின்றனர். கல்வியின் தரம் குறைந்துவிட்டது என்று அதிகாரிகள் இருசாராரையும் குறைகூறுகின்றனர். அதிகாரிகள் முன்போல் கடமையைச் செய்வதில்லை என்று அரசியலார் குறைகூறுகின்றனர். உரிமை உரிமை என்று பேசி மாணவர் உலகைக் கெடுத்து விட்டனர் என்று அரசியலாரை அனைவரும் குறை கூறுகின்றனர். ஆங்கிலக் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்குப் புது வழி காணவேண்டும் என்று அறிஞர்கள் முற்பட்டுள்ளனர். சீர்குலைவும் குழப்பமுமே எங்கும் உள்ளன.

ஆங்கிலத்தின் தரத்தை உயர்த்துவது என்றால் என்ன? தமிழர் ஒவ்வொருவரும் ஆங்கில மொழியில் பேசவும் எழுதவும் வல்லவராகச் செய்வதா? ஒரு நாட்டு மக்கள் அனைவரும் பிற மொழியில் வல்லவராக முடியுமா? இத்தகைய முயற்சி எந்த நாட்டிலேனும் வெற்றி பெற்றதுண்டா? நூற்றைம்பது ஆண்டுகள் இருந்த ஆங்கில ஆட்சியிலேனும் வெற்றியைக் கண்டதுண்டா? ஆங்கில ஆட்சியில் நூற்றுக்கு எழுவர் படித்தவர். அவர்களிலும் நூற்றுக்கு ஒருவர் அல்லது இருவரே ஆங்கிலம் கற்றவர். ஆயிரத்துக்கு ஒருவர் அல்லது இருவரே ஆங்கிலத்தில் உரையாட வல்லவர். பதினாயிரத்துக்கு ஒருவர் அல்லது இருவரே மேடையில் ஆங்கிலத்தில் முழங்க வல்லவர். நூறாயிரத்தில் ஒருவர் அல்லது இருவரே ஆங்கிலத்தில் பிழையின்றி எழுத வல்லவர். கோடியில் ஒருவர் அல்லது இருவரே ஆங்கிலேயரும் பாராட்டத் தகுந்த வகையில் அந்த மொழியைக் கையாள வல்லவர். வல்லவர் என்று குறிக்கப்படும் இந்தப் பெருமக்களின் வாழ்க்கையை ஆராய்ந்தால் ஓர் உண்மை விளங்கும். தாய்மொழியைத் தியாகம் செய்த காரணத்தால்தான் இவர்கள் ஆங்கிலத்தில் புலமைபெற முடிந்தது என்பது அந்த உண்மை. இளமையிலேயே ஆங்கிலப் (கான்வென்ட்) பள்ளியில் சேர்ந்து ஆங்கிலத்திலேயே அரிச்சுவடி தொடங்குவது, தமிழ் அறியாத ஆங்கிலேயருடனே பழகுவது, வீட்டிற்கு வரும் நாட்களிலும் கூடுமானவரையில் தமிழில் பேசாமல் இருப்பது, பெற்றோர்க்கும் நண்பர்க்கும் ஆங்கிலத்திலேயே கடிதம் எழுதுவது, திருக்குறள் முதலான தமிழ்ப் புத்தகங்களைப் பற்றி ஒன்றும் அறியாமலே வளர்தல், ஆங்கில நடையுடைகளையே போற்றித் தமிழ்மட்டும் பேசுவோரிடத்தே பழகாதிருப்பது,.........இவ்வளவும் செய்து தாய்மொழியைத் தியாகம் செய்த ஒருசிலர் தான் ஆங்கிலேயர் போற்றும் அளவிற்கு ஆங்கிலத்தில் வல்லமை பெறமுடிந்தது. இந்த நிலைமையோ இதற்கு அடுத்த நிலை

மையோ தமிழர் அனைவரும் பெறவேண்டும் என்று எதிர்பார்ப்பது வீண் கனவாகும். ஆங்கிலம் மட்டுமல்ல—வடமொழி, இந்தி முதலான எந்த மொழியிலும் தமிழர் ஒரு சிலர் உயர்ந்த தரம் பெறமுடியும். அதற்கு வழி தமிழைப் புறக்கணித்து அந்தந்த மொழியைமட்டுமே இடைவிடாமல் படிப்பதே யாகும். இத்தகையவர்—மகாகனம் சீனிவாச சாஸ்திரியார், சர் இராமசாமி முதலியார் போன்றவர் — ஒருசிலர் நாட்டுக்கு என்றும் தேவையே. அவர்களைத் தமிழ்நாடு என்றுவேண்டுமானாலும் படைத்துக்கொள்ள முடியும். மேற்கூறிய முறையில் ஒருசிலர்க்குப் பாதுகாப்பான கல்வி அளித்துப் பிற மொழியில் வல்லவர்களாகச்செய்து நாடு அவர்களைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். ஆனால், நாட்டிலுள்ள எல்லோரும் அப்படி ஆகவேண்டும் என்று முயல்வது வீண் கனவாகும். கிங் காங் போல நாட்டுக்கு ஒருவர் இருவர் இருக்கலாம்; ஆனால் எல்லோரும் வேளைக்கு இருபத்தேழு கோழியைப் பதம்பார்க்க வேண்டும் என்று திட்டம் வகுப்பது அறிவுடைமை அன்று.

தாய்மொழிக் கல்வி இயற்கையானதாகும். தமிழ் மண்ணில் வாழை வளமுற வளர்வதுபோல், சிறிது இடம் கொடுத்தாலும் இளைஞரின் மூளையில் தாய்மொழி விரைந்து வளர்ந்துவிடும். இதற்குப் பெரிய ஆராய்ச்சி வேண்டாம். இன்றைய நிலையையே எண்ணிப் பார்த்தால் போதும். இவ்வளவு தாழ்வு மனப்பான்மையும், ஆங்கில மோகமும் குடிகொண்டுள்ள இந்தக் காலத்திலேயே மாணவர் உலகத்தில் தமிழ் வளர்ந்துள்ள வேகம் வியத்தற்குரியதாகும். ஆங்கிலத்துக்கு எல்லாச் சிறப்பும் இருந்த அந்தக் காலத்தில் பேச்சிலும், எழுத்திலும் வல்லவர் பதினாயிரத்தில் ஒருவர், நூறாயிரத்தில் ஒருவர் என்று அருகி நிற்றல் கண்டோம். அதே கண்களால் இன்று என்ன காண்கின்றோம்? ஒவ்வோர் ஊரிலும், ஒவ்வொரு கல்லூரியிலும், பள்ளியிலும், ஒவ்வொரு வகுப்பிலும் தங்கு தடையின்றித் தமிழ்பேசும் ஆற்றலுடைய மாணவர் பலரைக் காண்கின்றோம். அழகான கையெழுத்துப் பத்திரிகை நடத்திக் கதைகளும், கட்டுரைகளும் எழுத முன் வரும் இளைஞர் பலரைக் காண்கின்றோம். 'நீ பேசு, சிறிது பேசு, எப்படியாவது பேசு' என்று ஆங்கில மேடைக்கு அழைக்கும் நிலைமை போய், 'எனக்கு இடம் கொடுங்கள், நான் சிறிது பேசவேண்டும், எப்படியாவது இடம் கொடுங்கள்' என்று இளைஞர்கள் வேண்டி நெருக்குகின்ற தமிழ் மேடையைக் காணுகின்றோம். ஆங்கில ஆசிரியர் எழுதிக்கொடுத்ததை நெட்டுருச் செய்து மேடையில் ஒப்புவிக்க முடியாமல் திணறிய காட்சி போய், தமிழாசிரியர் சொல்லிக்கொடுத்த இரண்டொரு குறிப்புக்களையே நீள வளர்த்துக்கொண்டு நெடுகப் பேசும் இளைய மூளைகளைக் காணுகின்றோம். பல புத்தகங்களைக் கொடுத்து, அவற்றைப் படித்து, ஒரு சிறு கட்டுரையாவது எழுது என்று வற்புறுத்தும் ஆங்கில நிலைமை போய், கட்டுக் கட்டாகத் தமிழ்க் கதைகளும், நாடகங்களும், கட்டுரைகளும் எழுதிக் குவித்து வைத்துக் கொண்டு, 'இவற்றை வெளியிட்டு ஆதரிப்பார் இல்லையே!' என்று ஏங்கும் இளைஞர் பலரை இன்று ஊர்தோறும் காணுகின்றோம். எவ்வளவு பெரிய மாறுதல்! உயர்நிலைப்பள்ளிகளில் தமிழை முதல் மொழி என்று திரு. அவினாசிலிங்கம் செட்டியார் ஆக்கியவுடனே இத்தகைய மாறுதல் வேகமாக ஏற்படத் தொடங்கிவிட்டது. பல்கலைக் கழகங்களில் விஞ்ஞானம் முதலிய கலைகள் கற்பிக்கும் மொழியாகத் தமிழை உயர்த்தும் நிலைமை வந்துவிட்டால் தமிழ் இளைஞர்கள் பலர் அந்தக் கலைகளில் சிந்திக்கும் நிலைபெற்று விளங்குவர் என்பது திண்ணம். அதன் பயனாக அறிவுக் கூர்மைக்குப் பெயர்பெற்ற இந்த நாட்டில் சர். சி. வி. இராமன், டாக்டர் கிருஷ்ணன்

போன்ற விஞ்ஞானிகள் மிகப் பலர் தோன்றித் தமிழிலே அரிய விஞ்ஞான நூல்கள் எழுதுவர் என்பதும் திண்ணம்.

ஆனால், இந்த மாறுதலை விளைவிப்பதற்கு நாட்டின் தலைவர் சிலர் உளங்கொளல் வேண்டும். அதற்கு அஞ்சாமையும் துணிவும் வேண்டும்.

மராட்டியரிடையே, குஜராத்தியரிடையே நல்லகாலமாக இதற்கு வேண்டிய சூழ்நிலை அமைந்துவிட்டது. ஆங்கிலேயர் வென்று கைப்பற்றிய நாள்வரையில் உரிமையோடு வாழ்ந்த இனம் மராட்டிய இனம். அதனால் அவர்களின் உரிமை உணர்ச்சி மங்கவில்லை, மடியவில்லை. ஆங்கிலத்தில் எவ்வளவு தேர்ச்சியும் புலமையும் பெற்றவர்களும் அந் நாட்டில் தாய் மொழிக் கடமையை மறக்கவில்லை. திலகர், கோகலே போன்ற பெருமக்கள் ஆங்கிலத்தில் வல்லுநர்; ஆயினும் மராத்திக்கே ஆக்கம் தேடினர்; இன்றும் ஜெயகர் உள்ளார். அவர் பூனாப் பல்கலைக் கழகத் தலைவர். ஆங்கில நாட்டின் பெரு மதிப்புக்கு உரிய 'ரைட் ஆனரபில்' என்னும் பட்டம் பெற்று, இன்று உயிருடன் வாழும் இந்தியர் அவர் ஒருவரே. ஆயினும் ஆங்கில மொழிக்கு அவரைவிடக் கடமைப்பட்ட இந்தியர் வேறு எவரும் இல்லை எனலாம். அத்தகையவர் அங்கே என்ன செய்தார், செய்கின்றார்? பக்கத்து நாட்டில் குஜராத்தில் முன்ஷிபோன்றவர்களின் முயற்சியால் குஜராத்தி மொழி போதனை மொழியாக அமைவதற்கு முன்னே பூனாப் பல்கலைக் கழகத்தில் மராத்தி மொழி போதனை மொழியாக விளங்குமாறு செய்துவிட்டார். ஏன்? கல்வியின் இயல்பையும் கற்கும் மாணவர் தன்மையையும், மூளையின் இயற்கையையும் அவர் நன்கு உணர்ந்தவர். ஒன்பதாம் வயது முதல் இருபத்தைந்தாம் வயதுவரை ஒருவன் ஆங்கிலத்தை எவ்வளவு போற்றிக் கற்றுவந்த போதிலும் ஆங்கிலச் சொற்கள் பலவற்றை கற்கமுடியுமே தவிரக் கருத்துக்களிலோ கலைகளிலோ தெளிவு பெற்றவனாக முடியாது என்பதை நன்கு உணர்ந்தவர். ஆங்கிலச் சொற்களையும் வாக்கியங்களையும் நெட்டுருச் செய்து இளைஞர்கள் காலத்தைப் போக்குவதால் நாட்டுக்கு நன்மை விளையாது என்பதைத் தெளிந்தவர் அவர். பத்து ஆண்டுகள் ஆங்கில மொழியின் வாயிலாக விஞ்ஞானத்தைக் கற்பதைவிட ஐந்து ஆண்டுகளின் அளவில் தாய்மொழியின் வாயிலாகக் கற்றுப் பல மடங்கு தெளிவுபெற முடியும் என்பதை ஜப்பான் முதலிய நாடுகளின் வரலாற்றால் அறிந்தவர் அவர். ஆதலின், கலைச் சொற்கள் அமைக்கப்படும் வரையில், நூல்கள் இயற்றப்படும் வரையில் காத்திருத்தல் கூடாது என்று மராத்தியைப் போதனை மொழி ஆக்கிவிட்டார்.

ஒரு தலைமுறை இடர்ப்பாடு இருக்கலாம். ஒன்றுமே செய்யாமல் இருத்தலை விட இடர்ப்பட்டு முன்னேறுதல் நல்லது. கற்பிக்கும் ஆசிரியர் கையில் ஆங்கில விஞ்ஞான நூல்களே இருக்கலாம்; கற்கும் மாணவர்களின் கையிலும் அந்த நூல்களே இருக்கலாம். அந்த நூல்களை வைத்துக் கொண்டே ஆசிரியர் தாய்மொழியில் பேசி உணர்த்தலாம்; மாணவரும் தாய்மொழியில் கேட்டு உணரலாம். தேர்வுக்கூடத்திலும் மாணவர்கள் தாய்மொழியிலேயே எழுதலாம்; ஒருசில ஆங்கிலச் சொற்களைக் கலந்தும் எழுதலாம். சிறிது தடுமாறலாம். அதனால் தீங்கு ஒன்றுமில்லை. தனக்கு என்று கருத்தே இல்லாமல் நெட்டுருச்செய்து தடுமாறுவதைவிடக் கருத்துக்கள் நிரம்ப வைத்துக்கொண்டு ஒருசில சொற்கள் இல்லாமல் தடுமாறுதல் மேலானதாகும். முன்னைய தடுமாற்றம் மூளையை வளரவொட்டாமல் மங்கச் செய்வது; பின்னைய தடுமாற்றம் மூளையைத் தூண்டி வளர்ச்சிக்குத் துணைசெய்வது. ஆதலின் இந்தத் தடுமாற்றத்தை மகிழ்ந்து வர

வேற்க வேண்டும். ஷேக்ஸ்பியரின் 'மாக்பெத்' என்னும் நாடகத்தின் சிறப்பைக் குறித்து மாணவன் ஆங்கிலத்தில் படிக்கின்றான்; ஆசிரியரும் ஆங்கிலத்தில் கற்பிக்கின்றார். ஆயினும் ஆங்கிலத்தில் எழுதுவதென்றால், எழுதவேண்டுமென்று கட்டாயப்படுத்தும் போதும், அவனுடைய மூளை ஏ. சி. பிராட்லேயின் வாக்கியங்களை நினைந்து அழுகின்றது. மூன்று நான்கு பக்கங்கள் எழுதுவதற்கும் பெரும் பாடு படுகின்றான். ஆனால், ஆங்கிலத்தில் படித்த அதே மாக்பெத் நாடகத்தைப்பற்றி வேடிக்கையாகத் தமிழில் எழுதத் தொடங்கிவிட்டாலோ அவனுடைய கை நிற்பதில்லை. வேண்டாத அளவுக்கும் அவனுடைய கட்டுரை நீண்டுவிடுகின்றது. இதை உணர்ந்துதான் ஹோமர், தாந்தே போன்ற பிறமொழிப் புலவர்களின் காவியங்களையும் ஆங்கிலப் பல்கலைக் கழகங்கள் ஆங்கிலத்தின் வாயிலாகவே கற்பித்து, ஆங்கிலத்திலேயே கட்டுரை எழுதச் செய்கின்றன. ஆகவே, நூல்கள் எந்த மொழியில் இருப்பினும் இருக்க, கற்பித்தலும், கற்றலும் தாய்மொழியில் இருத்தல் கடமை என்ற தெளிவுதான் இன்று தமிழ் நாட்டு அறிஞர்க்கு வேண்டும். ஒரு தலைமுறை வரையில் இந்த நிலைக்கு இடம் கொடுப்போமானால், அடுத்த தலைமுறையிலே விஞ்ஞான நூல்கள் பல தாய்மொழியிலேயே இயற்றப்பட்டுவிடும். இந்தத் தலைமுறையில் தாய்மொழியில் சிந்தனை வளர இடம் கொடுப்போம். அடுத்த தலைமுறையில் நூல்கள் எழ வழிவகுத்தவர்களாவோம். இந்த நாட்டில் அறிவுக்குப் பஞ்சம் இல்லை. தொன்று தொட்டு மூளைவளம் உடைய நாடு இது. ஆதலின் நம்பிக்கை கொள்வோம். துணிவோம்.

ஐயகர் போன்ற அறிஞர்கள் துணிந்துவிட்டனர். நீந்தக் கற்றுக்கொள்ளும் வரையில் நீரில் கால்வைக்க மாட்டோம் என்று அவர்கள் தயங்கவில்லை. நமக்கு மட்டும் ஏன் இந்தத் தயக்கம்?

—*—

நாவலர் கூற்று

"ஒரு மொழி கற்பதே அருமையாய் இருக்க, இரு மொழி பயில, பொருளும் முயற்சியும் போதிய காலமும் பெறுவதெப்படி? எந்த நாட்டிலும், எல்லாரிடையுமே, அவரவர் தாய்மொழி தழையக் காண்போம். இந்தியப் பெருநிலம், வந்த அயலாருக்கு அடிமைப்பட்டதால், ஆள்பவர் ஆங்கிலம் ஆதிக்கம்பெற்றது. தாய்மொழிக் கல்வி ஆதரவின்றித் தளர நேர்ந்தது. அறிவு நூல் ஆக்கம் செறியப்பெறாமல் குறுகி, நம் மொழிகள் வறுமையுற்றன. அடிப்படை, நடுத்தர, முடிநிலைக் கல்விகள் எல்லாம், நாட்டு மொழியில், முன் நடந்து வளர்ந்தன. அரசியல் நோக்கமும், பொருள் தொழில் ஆக்கமும் ஆங்கிலப் பயிற்சியால் ஓங்கிய நிலையில், தாய்மொழி வளர்ச்சி ஓய்ந்து தேய்ந்தது. உயர்தரக் கல்வி தாய்மொழிகளில் இனி இயலுமோ என ஐயுறுவாரோடு, கூடாது என்று கூறுபவர்கூட நம்மவரிடையே நாளும் காண்கின்றோம்."

—ச. சோ. பாரதி.

சிறப்புமிக்க செயற்கை வைரங்கள்

'யூசிஸ்'

இயற்கை அன்னை பல்லாண்டுகளாகத் தன்னகத்தில் வைத்து விளைவிக்கும் உண்மையான வைரத்தை விஞ்ஞானிகள் இப்பொழுது ஆராய்ச்சிக் கூடங்களில் சில நிமிடங்களில் தயாரிக்கின்றனர். நியூயார்க்கிலுள்ள ஜெனரல் எலக்டிரிக் கம்பெனியின் விஞ்ஞானிகள் இத்துறையில் வெற்றி அடைந்திருக்கின்றனர். உலக வரலாறு முதன் முதலாக இப்பொழுதுதான் செயற்கை வைரம் கண்டிருக்கிறது.

இச் செயற்கை வைரங்களுக்கும் இயற்கை வைரங்களுக்கும் வேற்றுமையே இல்லை என்பது ஆராய்ந்து கண்ட உண்மை. எக்ஸ்ரே பரிசோதனை, ரசாயன ஆராய்ச்சி, திண்மை ஆராய்ச்சி ஆகியவையால் இது உறுதி செயயப்பட்டுள்ளது. இந்தச் செயற்கை வைரத்தால் மற்ற வைரங்களையும் அறுக்கலாம்; இவ்வாறு வைரங்களை அறுப்பதற்கு மனிதன் இதற்குமுன் வேறொரு பொருளும் கண்டுபிடித்ததில்லை.

ஆயினும் இன்று செய்திருக்கும் செயற்கை வைரங்கள் இயற்கை வைரக் கற்களைப்போல அழகுசெய்யும் மணிகளாக விளங்கவில்லை. அவை சிறியவை. அறுப்பது, வர்ணம் தீட்டுவது முதலிய அவசியமான தொழில்களுக்கு வேண்டிய கருவிகள் தயாரிப்பதற்குப் பயன்படும் சாதாரண வைரங்களைப் போன்றவை.

தாம் வாழும் உலகத்தைப்பற்றித் தெரிந்துகொள்ள மக்கள் எடுத்துக்கொள்ளும் முயற்சியில் வைர உற்பத்தி ஒரு முன்னேற்றமாகுமென ஜெனரல் எலக்டிரிக் கம்பெனியில் ஆராய்ச்சித் தலைவராக உள்ள டாக்டர் சி. கய் சூட்ஸ் என்பவர் சமீபத்தில் பத்திரிகை நிருபர்களிடம் பேசுகையில் சொன்னார். நகைகளில் பொருத்தும் மணிகளாக உள்ள இயற்கை வைரங்களைப்போன்ற அளவும், நிறமும் பூரணமான படிக அமைப்பு முடைய செயற்கை வைரங்களை நாம் தயாரிக்க முடியுமென இப்பொழுது கருதுவதற்கில்லை என்றும் அவர் சொன்னார்.

சுத்தக் கரியுள்ள ஒரு பொருளை மிகச் சிறிய ஒரு அறையினுள் வைத்து, அந்த அறையின் உஷ்ணத்தையும் அமுக்கத்தையும் மிகமிக அதிகமாக்கிச் செயற்கை வைரம் தயாரிக்கிறார்கள்.

செயற்கை முறைப்படி தயாரிக்கப்பட்ட வைரங்களில் மிகப் பெரியது 1/16 அங்குல நீளமானதே.

ஜெனரல் எலக்டிரிக் கம்பெனி விஞ்ஞானிகள் முதன் முதலில் தயாரித்த வைரம் இதுவே. இச் சிறு வைரத்தை உருவாக்க 16 மணி நேரம் ஆயிற்று. இதற்குரிய ஆராய்ச்சிக்கு அக் கம்பெனிக்கு லட்சக் கணக்கான டாலர் செலவாயிற்று. ஆயினும் இதற்குப் பின் ஒவ்வொரு வைரமும் தயாரிக்க 2 அல்லது 3 நிமிடமே தேவைப்பட்டது.

செயற்கை வைரம் செய்யும் சிறிய அறையின் அளவு பென்சில் ரப்பரின் மேற் பகுதியில் பாதிதான் இருக்கும். ஆனால் அச் சிறிய இடத்தினுள் வைக்கப்படும் சுத்தக் கரிப்பொருள் சூரியனின் நடுப்பாகத்தி லிருக்கும் உஷ்ணத்தின் பாதி அளவு (அதாவது 5000 டிக்ரி பாரன்ஹீட்) உஷ்ணமும், ஒரு சதுர அங்குலத்துக்கு 15,00,000 பவுண்டுக்கும் அதிகமான அமுக்க நிலையும்பெற்று வைரமாக மாறுகிறது. தரைக்கு 240 மைலுக்குக் கீழேயுள்ள இடங்களில் இவ்வளவு அமுக்கந்தான் உண்டு என விஞ்ஞானிகள் கணக்கிட்டிருக்கிறார்கள். இத்தகைய அமுக்கத்தில் 5000 டிகிரி பாரன்ஹீட் வெப்ப நிலையை ஏற்படுத்தியது இன்றுதான் உலகிலேயே முதன் முறை.

விந்தை எறும்புகள்

திரு. இருசப் பிள்ளை, B. A. (Hons.)

அன்று மாலை 4-30 மணிக்கு என் உள்ளம் களிப்புக் கடலில் மூழ்கி இருந்தது. நல்ல கருத்தினை மாணவரிடையே பரப்பி விட்டேன் என்ற மகிழ்ச்சி. புறநானூற்று வீரர்களையும், தன்னலமற்ற வள்ளல்களையும் பற்றிச் சொற்பொழி வாற்றுகையில் இன்றைய தமிழ்நாடு, தமிழினம் என்ற எண்ணம் வந்தது, என் உணர்ச்சி வேகம் பொங்கி எழுந்தது. "மாணவர்களே பாராண்ட பரம்பரை தமிழ்ப் பரம்பரை. உலகிற்கு நாகரிகம் என்றால் என்ன என்று தெரியாத காலத்தே நாகரிகம் பெற்றிருந்த இனம் தமிழினம். ஆனால் இன்று அவ் வினத்தினைப் போன்று எவ்வகையிலும் பிற்பட்ட இனம் உலகில் வேறு எங்கும் இருக்கமுடியாது. காரணம் தங்கட்கு இடையே உள்ள சிறு பூசல்களுக்காக நாட்டின் நலத்தினையே அடகுவைக்கும் பண்பும் அறைபோகும் இழிசெயலும் தமிழரிடை எப்படியோ வளர்ந்துவிட்டன. தனி மனிதன் நலம்வேண்டி நாட்டின் நலத்தினில் நாட்டம்கொள்ளாப் பண்பும் வளர்ந்து விட்டது. நிலை இப்படியே செல்லுமானால் 'தமிழரினம்'என்றதொரு இனம் இருந்ததா என்று கேட்கக்கூடிய நிலை வந்துவிடும். வீரர்களே இன்று தமிழன்னை நம்பால் வேண்டுவ தெல்லாம் ஒற்றுமை; சிறு பூசல்கள்,பிணக்குகள் இவைகளை விடுத்து நாட்டின் நலத்தில் நாட்டம், தமிழன் தமிழனை நேசிக்கும் பண்பு ஆகியவைதான்" என்று உணர்ச்சியோடு உள்ளக் குமுறலோடு சொன்னதனை நூற்றைம்பது மாணவர்களும் ஒருமுகமாகக் கேட்டனர். சிலர் கண்கள் கலங்கின. ஊசி விழுந்தாலும் ஒலி எழும் அமைதி நிலவியது. மணி அடித்தது. அமைதி குலைந்து வெளியிலே வருகையில் 'நல்ல கருத்தினைப் பரப்பி விட்டோம். இனி தமிழர் தமிழராக வாழ வகை உண்டு என்பதற்கு நமது மாணவர்கள் முகக்குறியே சாலும்'என எண்ணினவனாய் நடந்தேன்.

அடுத்த அடி எடுத்துவைப்பதற்குள் என் எண்ணத்திற்கோர் பேரிடி. தமிழ் நாட்டு மக்களிடையே உணர்ச்சி மிகுதியாக விருக்கிறது. அனைத்தும் கைதட்டுவதிலும் வீண்முழக்கம் செய்வதிலும் செலவிடப்படுவதனை எண்ணினேன். கல்லாதவரிலும் கற்றவரே மிகுதியாக இத்தகைய செயல்களில் ஈடுபடுவதனையும் எண்ணினேன். நம்முடைய மாணவர்கள் குறிப்பும் இப்படி வீணாகிவிடுமோ என்ற எண்ணம் என் மனத்திடைத் தோன்றியது. மனம் தளர்ந்தது; உள்ளம் வெம்பியது. வெம்பிய உள்ளத்தோடு வீடடைந்தேன். சாய்வு நாற்காலியில் சாய்ந்தேன். உள்ளம் அமைதி கொள்ளாமல் தரையை நோக்கிய வண்ணமிருந்தேன்.

"என்னய்யா தரையை நோக்கிய வண்ணம் உள்ளீர்; ஏதேனும் குழப்பமோ" என்று கேட்டுக்கொண்டே எனது நண்பர் நடேசனார் அங்கு வந்தார்.

"ஆம், தரையில் ஊர்ந்துசெல்லும் எறும்புக் கூட்டங்கள் என் உள்ளத்தை இழுத்தன" என்றேன். "பேராசிரியர் சுந்தரம் பிள்ளை எழுதிய மனோன்மணீய நாட

கத்தில் வருகின்ற நடராசனும் நீரும் இவ்வளவு இயற்கைப் பித்தர்களாக இருத்தல் கூடாது'' என்று ஏளனம் செய்தார். அது என் உள்ளத்தை வருத்தியது. "இல்லை, முதல்வகுப்பி லிருந்து கல்லூரி இறுதி வகுப்பு வரை சாலையில் ஒழுங்காகப் போக வேண்டும் என்பதனை உணர்த்தியும் உணர்ந்தும் வருகிறோம். ஆனால் அப்பழக்கத்தினை நம்மால் ஏற்று நடக்கமுடியவில்லை. இந்த எறும்புகளிடம் எப்படியோ அது படிந்துவிட்டது. மேலும் ஒற்றுமை ஒற்றுமை என்று வானளாவக் கூக்குரலிடுகின்றோம். இவ்வெறும்புக் கூட்டங்களிடையே காணப்படும் ஒழுங்கும் ஒற்றுமையும் நம்மிடம் காணப்படுவ தில்லை. இவ்வெறும்புகளைக் கண்டாயினும் நாம் திருந்துதல் வேண்டும்'' என்ற எண்ணக் குவியலே என் நாட்டம் அவ்வெறும்புக் கூட்டங்கள்மீது விழுதற்குக் காரணமா யிருந்தது'' என்று கூறினேன்.

நகைத்தார். "ஏன்'' என்றேன். "நல்ல வேளையாக அவைகளிடம் உள்ள தீய பண்புகளையும் நாம் மேற்கொள்ள வேண்டும் என்று சொல்லவில்லை. தேய்த்தால் அழிந்துவிடும் பண்பும் கண்டாரை அச்சுறுத்தும் செயலும் அவைகளிடம் உண்டு என்பதனை மறந்துவிடாதே'' என்றார். "ஆமாம், தமிழரினம் எறும்புகளைப் போலன்று. தேய்த்தால் அழிந்துபடும் கூட்டமாக இருத்தல்கூடாது என்பது உண்மை. ஆனால் எறும்பிற்குக் கண்டாரை அச்சுறுத்தும் செயல் உண்டு என்றீரே, அது விளங்கவில்லையே'' என்றேன். அதனை ஒரு பெரிய வரலாறாகவே சொல்லிமுடித்தார்.

"தென்னாப்பிரிக்க நாட்டில் டிரைவர் எறும்பு (Driver Ant) என்ற ஒருவகை எறும்புண்டு. அவைகளினிடத்தில் அமைந்துள்ள பண்புகள் மிகவும் வியத்தகு பண்புகளாம்:—

"அவ்வெறும்புகள் மற்றவற்றைப் போன்று கண்ணற்றவைகளே. அவைகளுள் ஆண்கள், பெண்கள், வேலையாட்கள் என்ற இனங்கள் உண்டு. ஆண் எறும்புகள் குளவியைப் போன்ற உருவம் உடையன; இரண்டு அங்குல நீளமும் பெரிய சிறகுகளும் பெற்று எறும்பா என ஐயுறும்படி தோன்றும். பெண்கள் வெளித் தோற்றத்திற்கு ஓர் உருளையைப் போன்று இருக்கும். தலையானது ஒரு முனையில் ஏதோ ஒட்டிக்கொண் டிருப்பது போன்று தோன்றும். பின்னர் வேலைக்கார எறும்பினைக் கண்டால் அதனுள்ளும் மூன்று பிரிவுகள் உண்டு. வேலைக்கார எறும்பின் முதற் பிரிவு அரை அங்குல நீளம் இருக்கும். தலையானது உடம்பினளவு பருமனுடையதாயிருக்கும். இவ்வகை எறும்புகளை இயக்கும் வீரர்கள் என்று சொன்னால் அது மிகைபடாது. இவ்வகை எறும்புகளே எறும்புகளின் அறிவாய்ப் பயன்பட்டுத் தொண்டாற்றுவன. இவைகளே ஒழுங்கு, பிறர்மீது போர்தொடுத்தல் முதலியன போன்ற செயல்களை முன்னின்று நடத்துவன. அடுத்த பிரிவின் உருவ அமைப்பு கால் அங்குலத்தினை மீறுது. இயக்கும் எறும்புகளை நோக்குகையில் இவைகள் ஒன்றுமில்லை. இவற்றினுடைய செயல் உயிர்ப்பிராணிகளின் உடல் தசையினைப் பிடுங்கிக் கொண்டு வருதல்தான். மூன்றாவது வகை எறும்புகள் மிக மிக நுண்ணியன. அவைகளின் தொழில் சுமக்கும் தொழில். தாய் ஒருவகை இனமாகவும் தந்தை வேறொருவகை இனமாகவும் குழந்தைகள் வெவ்வேறு விதமாகவும் பிரிந்து காணப்படுவது குறிப்பிடத் தக்கது. ஆய்ந்த ஆய்வாளர்கள்தாம் அதனை எடுத்துக் கூறினர். மேற்போக்காகப் பார்ப்பார் அனைத்தும் வேறு வேறுபட்டன என்ற முடிவுக்குத்தான் வருவார்கள்.

"இனி அவைகளின் செயலை எண்ணலாம்:— சிறுத்தை மிக வன்மையும் வளமையும் வாய்ந்த பிராணி. அதனைக் கண்டால் உயிர்த் தொகுதிகளின் பலவும் அஞ்சியொடுங்கும். அதனையும் இந்த எறும்புகள் சாகப்பண்ணி ஓரிராவிலே

உண்டுமுடித்துவிடும் என்ருல், இவைகளின் பெருமையினை இன்னும் சொல்ல வேண்டுமா! அவைகள் கண்ணற்றன என்பது உண்மை. அப்படியாயின் அவைகள் உணவிருக்கும் இடத்தினை அறியுமாறு எங்ஙனம் என்பது அடுத்து எழும் ஐயம். வேலைக்கார எறும்புகளின் முதல் வகைப்பட்ட எறும்புகள் தனித்தனியே உணவு இருக்கும் இடம் தேடி அலையும். அலைந்து அறிந்தபின் அவ்விடத்தினை எண்ணத்தில் கொண்டு தன் கூட்டத்தாரிடைச் செப்பிக் கூட்டமாகச்சென்று உணவினைப் பற்றித் திரும்பும். முதல் வகை எறும்பு உணவினைக் கண்ட ஐந்து நிமிட நேரத்தில் பெரிய எறும்புக்கூட்டம் அவ்வுணவினைச் சுற்றி இருப்பதனை நாம் காணலாம். அவ்வளவு விரைவாக அவைகள் ஒழுங்காகத் தம் பாடி வீட்டிலிருந்து போர்முனைக்கு விரைந்து வந்துள்ளன. இந்த விரைவினை மனிதனுல், ஆறறிவு படைத்த மனிதனுல் எண்ணக்கூட முடியாது. இந்த முதல்வகை எறும்புகள் தனித் தனியாக நாலா பக்கமும் சென்று உணவின் இருப்பினைப் பற்றிய செய்தியினைச் சேகரித்து வரும். ஒன்று கொண்டு வந்த உணவின் செய்தியைவிடப் பிறிதொன்று கொண்டுவந்த உணவின் செய்தி உயர்ந்த உணவினைப் பற்றியதா யிருந்தால் உயர்ந்த உணவுள்ள இடத்திற்கே அனைத்தும் படையெடுக்கும். இத்தகைய செய்திகள் அவ்வெறும்புகளைக் கண்டு அவைகளின் செயல்களைக் கூர்ந்து நோக்கிக் கூறும் அனுமானச் செய்திகள்தாம்.

"அவைகள் வரிசையாக ஊர்ந்து செல்லுகையில் காண்பதற்கே விந்தையாக உள்ளது. இவற்றுக்கு யார் இத்தகைய ஒழுங்கினைக் கற்றுக் கொடுத்தார்கள் என்ற எண்ணம் எழுகிறது. இவைகள் ஊர்ந்து செல்வதனைக் கண்டாலே வெட்டுக் கிளிகள் உள்ளம் நடுங்குமாம். எலிகள் வழியிற் பட்டனவாயின் அழிந்தன என்றுதான் சொல்ல வேண்டும். படையும் அஞ்சும் பண்புடைப் பாம்பும் இவ் வெறும்புகளால் அழிக்கப் பெறுமாம். குதிரையினும் வேகமாகச் செல்லும் ஒருவகைப் பாம்பும் இவைகளால் மொய்க்கப்பட்டால் அழிந்தொழியுமாம். இப்படிக் காண்பாரை அச்சுறுத்தும் செயல் இவைகளிடம் அமைந்துள்ளது. மனிதன் ஏமாந்து மாட்டிக்கொண்டால் அவைகள் பிடுங்கித் தின்று அவனது உயிரைப் போக்கி விடுமாம்.

"இவைகளிடத்திலே உள்ள சிறந்த பண்புகளுள் தலையாயது ஒன்று உண்டு. அதாவது வரிசையாக ஊர்ந்துசெல்லும் எறும்புகள் உணவினை அண்டியவுடன் தனித் தனியே சென்று அதனைத் தாக்காது பின் வருபவைகளும் வரட்டும் எனக் காத்திருந்து தலைவனது ஆணைபெற்று உணவின்மீது மொய்த்து உண்டு அழிக்குமாம். உயிர்ப் பிராணிகளை உண்ணச் செல்லும் எறும்புகள் முதலில் அவைகளினுடைய கண்களையும் காதினையும் பிடுங்கித் தின்று விடுமாம். இத்தகைய பண்புகள் பெற்றன அப்பா, எறும்புகள்" என்று என் நண்பர் நடேசனுர் கூறி முடித்தார்.

பிறகு "எறும்புகளைப் போன்று தேய்த்தால் அழிந்துபடும் எளிமையும் கண்டாரை அச்சுறுத்தும் இழிதகவும் தமிழ் நாட்டாரிடத்து இருத்தல் கூடாது. ஆனுல் அழித்தாலும் அழிவுக்கு அஞ்சாது மேலும் சென்ற செயலில் அவைகளிடத்தில் உள்ளதைப் போன்ற ஊக்கத்தினைத் தமிழ் மறவர் பெறுதல் வேண்டும். ஒற்றுமையைப் பேணவேண்டும்" என்று சொன்னேன். அவர் "நல்ல விந்தை எறும்புகளப்பா, அவைகளைக் கண்டு ஆறறிவு படைத்த மனிதன் அறியவேண்டியவை எண்ணற்றவை" என்று கூறினுர்.

உடனே என் மனைவி தாமரையாள் "என்ன, இருவரும் பேச உட்கார்ந்தால் பசிகூட எடுக்காதா! வாருங்கள் உணவுண்ண" என்ருள்.

நாங்கள் நல்ல விந்தை எறும்புகள் எனச் சொல்லி உணவுண்ணச் சென்ருேம்.

—*—

அல்லல் அருள் ஆள்வார்க்கு இல்லை

திரு. க. நடேச உடையார்

அல்லல் அருள் ஆள்வார்க்கில்லை;
வளிவழங்கும்
மல்லல்மா ஞாலங் கரி

அருளாளர்க்கு அல்லல் உண்டா? இக் கேள்விக்குத் திருவள்ளுவர் அருளுடைமை அதிகாரத்தில் விடையளிக்கின்றார். 'அல்லல் அருளாள்வார்க்கு இல்லை' என்பது அவர் கூறும் விடை. இவ் விடையைத் தெளிவுபடுத்துவதற்காக 'வளி வழங்கும் மல்லல்மா ஞாலம் கரி' என்றொரு விளக்கமும் தருகின்றார் வள்ளுவர். மேற்கண்ட விடைக்கும் விளக்கத்திற்கும் பலவாறு உரைகள் வழங்கி வருகின்றன. 'அருளுடையார்க்கு அல்லல் இல்லாமை உலகத்தாரிடம் காணப்படும்'எனக் கொள்வர் சிலர் (மணக்குடவர்). 'அருளுடையவர்களுக்கு இம்மை மறுமை இரண்டிலேயும் ஒரு துக்கமும் உண்டாகாது; இம்மைக்கு உலகிலுள்ள சான்றோரும் மறுமைக்கு அருகதேவனும் சாட்சி' எனக் கருதுவர் சிலர் (சைனக் கவிராசபண்டிதர்). 'அருளாளர்க்கு இம்மைக்கண் அல்லல் உண்டாவதை ஒருகாலத்தும் ஓரிடத்தும் ஒருவரும் கண்டறிவார் இல்லை. ஆதலின் இதற்கு உலகத்தார் யாவரும் சான்று. இங்கு ஞாலம் என்பது ஞாலத்தில் வாழ்வாரைக் குறிக்கின்ற தாகலின் ஆகுபெயர்' என்பாரும் உண்டு (பரிமேலழகர்). 'வளிவழங்கும்' என்பதை நீக்கி விட்டு 'வழிவழங்கும்' எனப் பாடத்தையே மாற்றிக் கொண்டு "அருளுடையார்க்குத் துன்பம் இல்லை என்பதற்கு அறநெறிகளை உணர்த்தும் மெய்ஞ்ஞானிகளே சான்று" என்றாரும் உண்டு (வ. உ. சி.). "அருளுடையவர்களாக வாழ்கின்றவர்கட்குத் துன்பம் இல்லை. காற்றியங்கும் வளம் பொருந்திய பெரிய உலகத்தில் வாழ்வாரே இதற்குச் சான்றாவர்" எனத் தெளிவுரைப்பாரும் உளர்.

இவற்றை எல்லாம் ஒருங்கு சேர்த்துக் காணின், அருளாளர்களுக்கு அல்லலும் தொல்லையும் உண்டாவதே இல்லை. உண்டாவதைக் கண்டாரும் இல்லை. இதற்கு ஊரே சாட்சி; உலகமே சான்று; அருகதேவரும் சான்று; வளிவழங்கும் மல்லல் மா ஞாலத்தா ரெல்லாம் கரி கூறுவர் எனக் கருதுகின்றனர் என்பது பெறப்படும். இங்ஙனம் கருத்தும் பொருளுங் கொள்ளின், 'வளிவழங்கும் மல்லல்மா ஞாலம் கரி' என்பதில் உள்ள அடைமொழிகள் எல்லாம் பொருட் பேறின்றிப் பயனற்ற வெற்றோசைகளாக இடம் அடைத்துக் கிடப்பனவாகவே முடியும். திருக்குறள் ஆசிரியர் குறிக்கோளின்றிக் கருத்தற்ற வெற்றுச் சொற்களை ஓசை நிரம்பும் பொருட்டு அடுக்கிச் செல்லும் இயல்பினர் அல்லர். இது நிற்க.

அன்னை மணிமேகலைக்கு அல்லல் இழைக்க இளவரசன் உதயகுமரன் உவவனத்தில் காத்திருந்தான். ஆயினும் அருளறம் பூண்ட அம்மையார் குலதேவதையின் திருவருட் செயலால் தப்பினர்; காப்பாற்றப்பட்டார். பின்னர்ச் சிறைச்சாலையை அறச்சாலையாக்கி 'உலக அறவி'யில் அருள் மேற்கொண்டு ஒழுகியபோதும் அம்மையார் சிறைவைக்கப்பட்டார்கள்; மயக்க மருந்தூட்டப் பெற்றார்கள். அன்னையின் கற்பைச் சிதைக்கச் சூழ்ச்சியும் செய்யப்பட்டது. சிறிதும் காற்றோட்டமற்ற புழுக்கறையில் பற்பலநாள் உணவு

இன்றிப் பட்டினியாய் அடைபட்டும் கிடந்தார்கள். எனினும் அவ்வல்லலை எல்லாம் அம்மையார் தம் அருளாற்றலால், மந்திரச் சக்தியால் வென்றனர்; இறுதியில் அல்லலும், தொல்லையுமின்றித் தவத்திறம் பூண்டு வாழ்ந்தனர்; வீடும் பெற்றனர் என்றித்தகைய செய்திகளை நம்மிற் பலர் கேள்வியுறுகின்றனர். மேலும்,

> மன்னுயிர் ஓம்பி அருளாள்வாற்கு இல்லென்ப
> தன்னுயிர் அஞ்சும் வினை

என்றதுபோன்ற பாக்களையும் மேற்போக்காகப் பார்க்கின்றனர். அன்றியும், அருளாளர்க்கு அல்லலே ஏற்படுவதில்லை, இதற்கு ஊரே சாட்சி, உலகமே கரி, திரிகால ஞானியாகிய அருகதேவரும் சான்று என்பனபோன்ற உரைகளையும் படிக்கின்றனர். 'ஆம், உண்மைதான்; அருளாளர் எண்ணத்துக்கு மாறாக அல்லலும் தொல்லையும் உண்டாவதில்லை; உண்டானாலும் திருவருட் செயலால் தீர்ந்துவிடுகின்றன; இறுதியில் எல்லாம் இன்பமும் நன்மையுமாகவே முடிகின்றன' எனச் சில நேரங்களில் கருதுகின்றனர்; துணிகின்றனர். ஆனால் இக் கருத்துச் சிற்சில இடங்களில் நம் அறிவுக்கு மாறாக, நம் அனுபவத்துக்கு — பட்டுணர்வுக்கு — மாறாக, நாம் நேரே காணும் காட்சிக்கு மாறாகத் தோன்றுகிறது. ஏன் ?

அருளாளர் கூட்டத்தில் அண்ணல் காந்தியடிகட்கு ஓர் அரும் பெறல் வீற்றிருப்பு உண்டு. அருளைப்பற்றிய ஆராய்ச்சி நெறியில் இவரைச் சந்திக்காமல் செல்வதற்கு — சிந்திக்காமல் போவதற்கு இயலாது. ஆதலின், மகாத்மா காந்தி அடிகளைப்பற்றி இங்குச் சிறிது சிந்திப்போம். இம் மகாத்மா அன்புக் கடல், அருளாளர் என்பதை அனைத்துலகமும் அறியும். இதனை யாரும் மறுக்கவும் மாட்டார்கள். இவ் வருட்பெருந் தகையார்க்கு வாழ்க்கையில் அல்லல் ஏற்பட்டதில்லையா? துன்பம் உண்டானதில்லையா? எவ்வளவு தொல்லைகள் எவ்வெவ் வழியில் எப்படி எப்படியெல்லாம் வந்தன என்பதை அவர் வாழ்க்கையைக் கண்டாரும், வரலாற்றைக் கேட்டாரும், படித்தாரும் நன்கு உணர்வர். காந்தி அண்ணலார் பற்கள் உதிருமளவுக்கு அடிபட்டார்கள்; பல முறை சிறைப்பட்டார்கள். அருள் தொண்டுக்கிடையே எதிர்பாரா வகையில் உயிர் விட்டார்கள். எனினும் அவ்வடிகள் தம் வாழ்நாட்கிடையே அல்லலுக்கு அஞ்சிப் பொதுநலத் திருத்தொண்டை என்றும் வெறுத்தனர் இல்லை; விடுத்தனர் இல்லை. அருள்நலப் பொதுப் பணியைச் சலிப்பு இன்றி இடைவிடாது இயற்றியே வந்தனர். அருளாட்சிக் கிடையே இவ்வண்ணலார்க்கு அல்லலும் தொல்லையும், இன்னலும் இடையூறும் பற்பலவாக ஏற்பட்டுக் கொண்டுதான் வந்தன. மகாத்மா காந்தியடிகளின் செய்தியே இதுவாயின், மற்றைய சிற்றுயிர்களின், சிறுத் தொண்டர்களின் செய்திபற்றியோ, மற்றவரின் அல்லலைப்பற்றியோ யாம் இங்குச் சிந்திக்க வேண்டிய தில்லை. எனவே அருளுடையார்க்கும் அல்லல் ஏற்படுவதுண்டு. மற்றவர்களைக் காட்டிலும் இவர்கட்கே அல்லலும் தொல்லையும் மிகுதி. 'காய்த்த மரத்துக்கே கல்லடி மிகுதி' என்றறிகின்றோம்; உணர்கின்றோம். என்றாலும் வள்ளுவர் கூறுகின்றார், 'அல்லல் அருளாள்வார்க்கு இல்லை' என்று. இது எப்படிப் பொருந்தும்? முரண்பாடாக வன்றோ இருக்கிறது? பொய்யாகத் தோன்றுகிறதே? ஆதலின் வள்ளுவர் கூற்றுப் பொய்யாமொழியாவது எப்படி எனப் பார்ப்போம்.

திருவள்ளுவர் தாம் கூறும் பொருளை விளக்குவதற்காக – அல்லல் அருளாள்வார்க்கு இல்லை–என்பதற்குச் சான்றாக உவமையாக, மா நிலத்தை எடுத்துக் காட்டுகின்றார். புலவர்கள் உவமை கூறும்போதும், உருவகம்செய்யும்போதும், மற்றும் சிற்சில இடங்களிலும் உயிரில்லாத பொருளை உயிருடையது போலவும்,

உணர்வில்லாத பொருளை உணர்வுடையது போலவும், பேசாத பொருளைப் பேசுவது போலவும் கருதுவார்கள்; காட்டுவார்கள். இது நூலாசிரியர்களின் வழக்கம்; கவி மரபு. வள்ளுவரும் இம் மரபுபற்றிச் சில இடங்களில் பேசாத பொருளைப் பேசவைப் பார்; சிரிக்காத பொருளைச் சிரிக்கவைப் பார். டெல்லியில் மக்களவையத்தில் நம் நிதிமந்திரியாரவர்கள் முன்பொருகால் எடுத்துக்காட்டிய திருக்குறட் பா,

**இலம் என்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலம் என்னும் நல்லாள் நகும்**

என்பதுகூட, இம் மரபை நமக்கு நன்கு விளக்குவதா யுள்ளது. நிலம் நகும்—சிரிக்கும்—என்னுமிடத்து, நிலம் உணர்வுடைய பொருள்போலக் கருதப்படுகிறது; காட்டப்படுகிறது. 'வளிவழங்கும் மல்லல் மாஞாலங்கரி' எனவரும் இவ்விடத்திலுங் கூட, மேற்காட்டியவாறே மாநிலத்தை உணர்ச்சி உடைய பொருளாகக் கருதிக் கொள்ளவேண்டும். இங்ஙனம் ஞாலத்தை உணர்வுள்ளதாகக் கொள்ளின் மேற்காட்டிய குறளால்,

**அல்லல் அருளாள்வார்க்கு இல்லை; வளி வழங்கும்
மல்லல்மா ஞாலங் கரி**

என்னும் பாவால் பெறப்படும் பொருள் யாது? அருளாளர்க்கு அல்லல் இல்லை. இதற்கு இம்மாநிலமே சான்றாகும்; கரி கூறும் என்பதாம். எனவே, அருளாளர்க்கு அல்லல் இல்லை என்பதற்கு மாநிலத் தாய் எங்ஙனம் உவமையாகின்றாள்? எப்படிச் சான்றாகின்றாள்? எவ்வாறு கரிகூறித் தெரிவிக்கின்றாள் எனக் காண்போம்.

அல்லலும் அருளும்பற்றிய ஆராய்ச்சிக் கிடையே, மாநிலம் சான்றாக—சாட்சியாக—வந்துள்ளது. சான்றாக வந்த இம் மாநிலம், கருத்துடை அடைமொழிகளால் 'வளிவழங்கும் மல்லல் மாஞாலம்' எனச் சிறப்பிக்கப்படுகின்றது. ஆகவே இந்த அடைமொழிகள் அல்லலைப்பற்றி விளக்கம் தருவனவாக இருத்தல் வேண்டும், அல்லது அருளைப்பற்றி விளக்கம் தருவனவாக இருத்தல் வேண்டும், அல்லது ஒருங்கு சேர்த்து அல்லல் அருள் இவ்விரண்டையும்பற்றி விளக்கம் தருவனவாக இருக்கவேண்டும். இவற்றுள் தனியே அல்லலைப்பற்றிய விளக்கமும், ஒருங்கு சேர்த்து அல்லல் அருள் இவ்விரண்டையும்பற்றிய விளக்கமும் திருக்குறளில் வேறிடங்களில் (151, 189, 570, 572, 1003) கூறியவாற்றால் அறியலாம்; வள்ளுவர் கருத்துணரலாம். எனவே இங்குக் கூறிய அடைமொழிகள் மாநிலத் தாயின் பேரருள் திறத்தை விளக்குவனவாகவே இருக்கலாம். ஆதலின் அவை அவ்வாறு அருளியல்பை விளக்குகின்றனவா என ஆராய்வோம்.

இம் மாநிலம் மக்களும், பிற உயிரினங்களும் வாழ்வதற்குக் காரணமாகவும், அடிப்படையாகவும் உள்ளது; உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும், உயிர்க்க வளியும்—காற்றும்—தந்துதவுகின்றது; வழங்குகின்றது. ஆகவே, இம் மாநிலம் மன்னுயிரெல்லாம் வாழ்வதற்கான வளங்கள் பலவும்-மல்லல் பலவும்–கொடுத்தருள்கின்றது. ஆதலின் மாநிலத் தாயைக் காட்டிலும் அருட்பெருக் குடையார் யாரும் இல்லை என்றறியலாம். வளியையும் வழங்கி, மற்றும் பல வளத்தையும் வழங்கியருளும் இம் மாநிலத் தாய்க்கு அல்லல் இல்லையா? தொல்லை இல்லையா? துன்பம் ஏற்படுவ தில்லையா? உண்டு. எத்தனை எத்தனை இன்னல்கள் மாநிலத் தாய்க்கு நம்மால், பிற உயிரால் ஏற்படுகின்றன? அம்ம! மிகப் பல. ஆயினும் மாநிலத் தாய் தன் அருட்பெருக்கால் அவற்றைப் பொருட்படுத்தாது, தனக்கு வரும் அல்லலைப் பெரிதாய்க் கருதிச் சலித்துக்கொள்ளாமல், சினந்துகொள்ளாமல், அமைதியோடு மென்மேலும் வளம் பல தந்துதவுகின்றாள்; அருளாட்சி செய்கின்றாள். நாம் ஏர்பூட்டி நிலத்தை உழுகின்றோம்; மண்வெட்டியால் கொத்து

கின்றோம்; வெட்டுகின்றோம்; இடிக்கின்றோம்; துன்புறுத்துகின்றோம். ஆயினும் விளைவைத் தருகிறது; உணவைத் தருகிறது நிலம். ஆழத் தோண்டுகின்றோம்; வெடிவைத்துப் பிளக்கின்றோம்; சிதைக்கின்றோம்; நீர் சுரந்தருள்கிறது நிலம். இந் நிலத்தின் மீது அருவருப்பான செயல் பல செய்கின்றோம். மாநிலத் தாயின் மடி மீது, தலைமீது, சிறுநீர் முதலியன கழிக்கின்றோம்; சீறுவதில்லை. எச்சில் மிச்சிலுமிழ்கின்றோம்; ஏனென்று கேட்பதில்லை. அருளுணர்ச்சி குன்றி, அல்லலுணர்ச்சி நில மகளுக்கு இருப்பின், இங்ஙனம் தன்னைத் துன்புறுத்துவோர்க்கு, இகழ்வோர்க்கு, அவமதிப்போர்க்கு, அருவருப்பியற்றுவோர்க்கு, அல்லல் தொல்லை தருவோர்க்கு அருள்சுரந்து வளந்தருவாளா? வாழ் வளிப்பாளா? வளி வழங்குவாளா? வழங்காள்; வழங்காள்! பேரருள் உணர்ச்சியில் அல்லல் உணர்ச்சி அடங்கிச் சிறிதும் தோன்றாது மறைகிறது. ஆதலின் இம்மாநிலம் வளந்தருகிறது; வளிதருகிறது; வாழ்விக்கின்றது; அகழ்வாரைத் தாங்குகின்றது; இகழ்வாரைப் பொறுத்தருள்கின்றது. மாநிலத் தாய்க்கு இன்னலுண்டு. எனினும் அல்லலையும், தொல்லையையும் பொருட்படுத்தாமல் வளம் சுரந்தருள்கின்றாள் அன்னை.

இங்ஙனமே அருளாளர்க்கும் வாழ்க்கையில் பலப்பல இன்னலும் இடையூறும் ஏற்படத்தான் செய்யும்; உண்டாகியே தீரும். எனினும் அவர்கள் அவற்றைப் பொருட்படுத்துவதில்லை. அருளுணர்ச்சிக்குள் அல்லலுணர்ச்சி அடங்கி, அருகி, மழுங்கி மறைந்துவிடுகிறது. ஆதலின் அருளாளர் உள்ளத்தில் அல்லல் தோன்றுவதுமில்லை. அவர்கள் அல்லலை உணர்வதும் இல்லை, இக் கருத்தைத் தெரிவிப்பதுதான்

> அல்லல் அருளாள்வார்க்கு இல்லை
> வளி வழங்கும்
> மல்லல் மா ஞாலம் கரி

என்னும் திருக்குறள். இதனால், அருள் உணர்ச்சி மிக்கவர் தமக்கு வரும் அல்லலைக் கண்டு அஞ்சுவதில்லை; இன்னலுக்கு இரங்குவதில்லை; இடுக்கணுக்கு இளைப்பதில்லை; துன்பத்தைப் பொருட்படுத்துவதில்லை. அவர்கள் அருள் முதிர்ச்சியால் அல்லலை உணராது கடமைகளைச் செய்வர்; ஒப்புரவு ஆற்றுவர்; பொதுநலம் வளர்ப்பர்; பெருநலம் விளைப்பர்; மன்னுயிர்த் தொண்டு புரிவர். இதுவே பிறர்க்கென வாழும் பேரருளாளர் பெற்றி; ஒப்புரவாளர் பண்பாடு; உயிர் வாழ்வுக்குத் தேவையான வளியை வழங்குவதும் வளத்தைத் தருவதும் ஆகிய இம் மாநிலமே இதற்குப் போதிய சான்றாகத் திகழும்; எடுத்துக்காட்டாக இலங்கும் என்பது தெளியலாம்.

அன்றியும், இவ்விடத்து 'அல்லல் அருளாள்வார்க்கு இல்லை' என்பது போலவே, 'குடிசெய்வார்க்கு இல்லை பருவம்' என்றொரு தொடர் திருக்குறளில் வேறோரிடத்தில் (1028) காணப்படுகிறது. இவ் விரு தொடர்களின் சொற்கிடக்கை முறையும் பொருள்கோள் நிலையும் ஒரு நிகரானவை என்பது, சிறிது உற்று நோக்குவார்க்கும் புலப்படும். 'குடிசெய்வார்க்குப் பருவம் இல்லை' என்னும்போது, பருவக்கால மாறுதல்கள் உண்டாவதில்லை என்றா பொருள் கொள்கின்றோம்? இல்லை; இல்லை. குடி செய்வார், பருவ மாறுதல்களால் உண்டாகும் இடையூறுகளைப் பொருட்படுத்தாமல் —உணராமல்— காரியத்தில் கண்ணும் கருத்துமாயிருந்து கடமைகளைச் சலியாது செய்து நிறைவேற்றுவர் என்று தானே பொருள்கொள்கின்றோம். ஆதலின் இவ்விடத்தும் 'அருளாள்வார்க்கு அல்லல் இல்லை' என்பதற்கு, அருளாளர் அல்லலைப் பொருட்படுத்துவதில்லை; உணர்வதில்லை என்றே பொருள்கொள்ள வேண்டும் எனத் தெளியலாம்.

மேலும் மாநிலத் தாயின் அருளறத்தையும் பொறுமையையும் விளக்கும் திருக்

குறட் பாக்கள் பல உண்டு. அவற்றுள் ஒன்று,

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை

என்பது. இத்திருக்குறட் போக்கையும், 'வளிவழங்கும் மல்லல்மா ஞாலங்கரி' என்னும் தொடரில் அமைந்துள்ள அடைமொழிகளின் நோக்கையும் சிந்தித்துப் பார்ப்பினும் இக் கருத்துத் தெளிவுபடும். அன்றியும்,

வெள்ளத்தனைய இடும்பை அறிவுடையான்
உள்ளத்தின் உள்ளக் கெடும்

இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்
துன்பம் உறுதல் இலன்

எனவருங் குறட்பாக்களும் இக் கருத்தையே வலியுறுத்துவதும் காண்க.

இவ்விடத்து ஒரு கேள்வி எழக் கூடும். 'இம் மாநிலத்தைச் சார்ந்து அருகிருக்கும் கீழ்ப்பகுதி நிலவெளியில்தான் உயிர் வாழ்வுக்கு ஆதாரமான உயிர் வளி உளது; மேல் பகுதி வான்வெளியில் இது செல்லச் செல்ல அருகி இல்லையாம் என்பது இக் காலத்து விஞ்ஞான வளர்ச்சியின் விளைவால் கண்டறியப்பட்ட உண்மை. புதிது கண்ட இவ்வுண்மையை அடிப்படையாகக் கொண்டு 'வளிவழங்கும் ஞாலம்' எனும் பழந்தமிழ்த் தொடர்க்கும் பொருள் விளக்குதல் சாலாது. இவ்வுண்மையைத் திருவள்ளுவர் அக்காலத்தில் எங்ஙனம் அறிந்திருக்கக் கூடும், சொல்லக்கூடும்' என்று சிலர் கேட்கலாம். பழந்தமிழ் நூல்களில் பற்பல செய்திகட் கிடையே,

"வளி வழங்கு திசையும் வறிது நிலையிய காயமும்
என்றாங்கு அவை அளந்தறியினும்
அளத்தற்கரியை"
(புறநானூறு 20)

"வளியிடை வழங்கா வழங்கரும் நீத்தம்
முன்னோர் செல்லவும்" (புறம் 365)

"வளியிடை வழங்கா வானம்" (புறம் 35)

என்றித்தகைய செய்யுட் பகுதிகள் பல வருகின்றன; காணப்படுகின்றன.

இவை குறுங்கோழியூர்கிழார், மார்க்கண்டேயனுர், வெள்ளைக்குடிநாகனுர் ஆகிய தமிழ்ப் பெரும் புலவர்கள் பலரால் பாடப்பட்டவை. இவை முறையே 'உயிர் வளிவழங்கும் இடத்தையும் இவ்வளி இன்றி—காற்றின்றி—வறிதேஉள்ள வானத்தையும் அளந்தறிந்தாலும் அறியலாம். நின் பெருமை அளத்தற்கரிது' எனவும், 'வளிவழங்காமையால் மக்கள் செல்லுதற்கரிய அருநெறியையும் கடந்து விண்ணேறினர் முன்னோர்' எனவும். 'காற்று வழங்காத வானம்' எனவும், பொருள் தருகின்றன. 'இவை, காற்றுள்ள இடம்', 'இது இல்லாத இடம்' எனும் இரு திறக் கருத்துக்களைப் புலப்படுத்துகின்றன. இக் கருத்தமைந்த அடிகள் பண்டைத் தமிழறிஞர் செய்யுட்களில் எங்ஙனம் புகுந்துள்ளன? ஆராய்க. ஆராய்ந்தால், *'இம்மாநிலத்தைச் சார்ந்து அருகிருக்கும் கீழ் நிலப் பகுதியில்தான் உயிர்களை வாழவைக்கும் உயிர்வளி உளது. மேல்பகுதி வான்வெளியில் இது இல்லையாம்'* என்பதைப் பழந் தமிழறிஞர்கள் இப் புறநானூற்றுச் செய்யுட்களின் தோற்றத்திற்கு முன்னரே கண்டறிந்திருந்தனர் என்பது புலப்படும். ஆதலின் வள்ளுவரும் இதனை நன்குணர்ந்தவரே யாவர். எனவே திருவள்ளுவர் 'வளி வழங்கும் ஞாலம்' எனக் கூறியதில் புதுமை ஒன்றுமில்லை; வியப்பொன்றும் இல்லை. இத்தகைய அரும் பெரும் பழந் தமிழ்ச் செய்திகளைக் கண்டுணராமல், மறந்து, புதியவை என மயங்குவதுதான் வியப்பு. ஆதலின் மேல்விளக்கிய பொருள் பொருந்துவதேயாம். நிற்க,

'வளிவழங்கும் மல்லல் மாஞாலம்' என்னும் தொடரில், ஞாலம் என்பதற்கு அடைமொழியாக வந்துள்ளவை– 'வளிவழங்கும்

மல்லல்மா' என்னும் சொற்கள்—மாநிலத் தாயின் அருட்பெருக்கை விளக்குவதற்கு வந்த கருத்துடை அடைமொழிகள். எனவே, ஞாலம் என்பது கருத்துடை அடைகொளி எனக் கண்டுகொள்ளலாம். இங்கு 'வளி' என்பது உயிர் வாழ்வுக்கு இன்றியமையாது வேண்டப்படும் பிராண வாயு (oxygen) செறிந்த காற்றை உணர்த்தும். 'வழங்குதல்' தருதல் என்னும் பொருள் பயப்பதாம்; இயங்குதல் எனினும் ஆம். மல்லல் என்பது உணவுக்கும், உடைக்கும், குடி இருப்புக்கும் வேண்டப்படும் பலவகை வளங்களையும் உணர்த்தும். இம் மாநிலம் உயிர்வளியை வழங்கிப் பிற வளமும் தந்து மன்னுயிர் வாழ்வுக்குக் காரணமாகி அருளாட்சி புரிந்துவருவதை இக் காலத்து விஞ்ஞான நூல்களாலும் 'புவியெழுபது' என்னும் அருந்தமிழ் நூலாலும் (மகாவித்துவான் திரு. ரா. இராகவையங்கார் அவர்களியற்றியது) தெளியலாம். இங்கு, 'வளிவழங்கும் ஞாலம்' என்பது 'வளியைத் தரும் நிலம்' என்று பொருள் குறிக்கக் கூடியது. 'மல்லல் ஞாலம்' என்பது, 'வளத்தைத் தரும் நிலம்' என்று பொருள்தரக்கூடியது. ஆதலின் இவற்றை இரண்டாம் வேற்றுமைத் தொகைநிலைத் தொடர் எனக் கொண்டும், திருக்குறள் நூலில் பிற இடங்களில்.

'இன்னுமை இன்பம் எனக்கொளின் ஆகும் தன் ஒன்னுர் விழையும் சிறப்பு'

'அறம் நோக்கி ஆற்றுங்கொல் வையம் புறம்நோக்கிப்
புன்சொல் உரைப்பான் பொறை'

என்றுற்போல வரும் குறட்பாக்களின் கருத்தினைக் கண்டு தழுவியும் இங்கு இப் பொருள் கூறப்பட்டது. மேலும் 'அல்லல் அருள் ஆள்வார்க்கு இல்லை'எனத் தொடங்கும் இத் திருக்குறட்பற்றிய கருத்துக்கள் பலவற்றையும்—காளிங்கர், பரிதி, பரிப்பெருமாள்போன்ற உரையாளர்களின் கருத்துக்களையும் கண்டு நன்காய்ந்து கொள்க.

இதுவரை இக் கட்டுரையால் விளக்கப்பட்ட குறட் பொழிப்பு: அருள் முதிர்ச்சி உடையார்க்கு அல்லல் உணர்ச்சி இல்லை. பல அல்லலுக்கிடையேயும் வாழ்வுக்கு இன்றியமையாத உயிர்வளியைத் தந்தருள்வதும், பிறவளம் வழங்குவதும் ஆகிய மாநிலமே இதற்குச் சான்றாகும்.

—*—

தமிழகத்தின் அறிவுப் பணி முன்னணியில் முன்னிற்பது

↓

— கலைக்கதிர் —

ஆண்டுச் சந்தா ரூ 5-0-0

விவரங்கட்கு:

கலைக்கதிர் — பீளமேடு — கோவை.

அட்டைப் படம்:

தற்காப்பின் எல்லே

"இராதா"

உயிரினங்கள் தோன்றியதி லிருந்து, தங்களேயும், தங்களேச் சார்ந்தவற்றையும் எதிரிகளிட மிருந்து பாதுகாத்துக்கொள்ள முடியும்வரை முயன்றுவருகின்றன. பாம்பு முதலிய ஊர்வனவற்றிற்கு இயற்கையாகவே விஷம் இருப்பதால் அவைகளின் அருகிலேயே அவற்றின் எதிரிகள் நெருங்குவ தில்லே. சற்று உயர்ந்த உயிரினங்களான கெட்ட மிருகங்கள், எதிரிகளிடம் சண்டையிட்டுத் தங்களேப் பாதுகாத்துக்கொள்கின்றன. பறவை இனங்களுக்கு முக்கியமாகப் பாம்புகளே எதிரிகளாகக் கொள்ளலாம். பாம்புகள் தங்கள் கூடுகளே நெருங்கும் முன்பே பறவைகள் கத்திக் கூச்சலிட்டும், தங்களுடைய அலகுகளால் கொத்தியும் அவற்றைத் துரத்திவிடுகின்றன. இவ்வாறு ஒவ்வோர் உயிரினமும் தனது எதிரியினிட மிருந்து தப்பித்துக்கொள்ள இயற்கையாகவோ அல்லது சொந்த முயற்சியாலோ வலிமை பெற்றிருப்பதைக் காண்கிறோம்.

உயிரினங்களில் உயர்ந்த படியிலிருக்கும் மனித இனத்திற்கு வருவோம். ஆதிக்குடிகள் ஓர் இனமாகச் சேர்ந்து தாங்கள் வசிக்கும் இடத்தைத் தேடிக் கண்டுபிடித்தனர். அவ்விடமானது பொதுவாக மலேகளின் நடுவிலோ, அல்லது ஆற்றின் அப்பாலோ இருக்கும். ஏனெனில் மற்ற இனத்தாரிட மிருந்து தங்கள் இனத்தைக் காப்பாற்றிக்கொள்ள இம் மலேகளேயும், ஆறுகளேயும், தடங்கல்களாக நம்பி வந்தனர். இவ்வாறுதான் நமது இந்திய நாடும் வெகுகாலம்வரை அந்நியரின் படையெடுப்பி லிருந்து தப்பிவந் திருக்கிறது. மூன்று பக்கங்களில் கடல்களும், வடக்கே இமயமலேயும் இருந்தமையால், வேற்று நாட்டு மக்கள் அவற்றைத் தாண்டி இந்தியாவின் மீது படையெடுக்க முடியாமல் இருந்தது. உள்நாட்டிலேயே ஒரு சிற்றரசன் மற்ருெரு சிற்றரசன்மீது படையெடுக்கா வண்ணம் கோட்டை கொத்தளங்களேக் கட்டிக்கொண்டனர். கோட்டைகளில் உயர்ந்த கோபுரங்களேக் கட்டி அவற்றின் உச்சியிலே காவலாளிகளே நிறுத்தி வைத்தனர். இவர்கள் எதிரிகள் வெகு தொலேவிலிருக்கும்போதே கண்டுபிடித்துத் தம்மைச் சார்ந்தவர்களே எச்சரிக்கை செய்துவிடுவர். இவ்வாருன எச்சரிக்கையான பாதுகாப்பு முறைகள் சில காலத்துக்கு அனுகூலமாக இருந்துவந்தன. ஆனல், பின்பு.........?

இமயமலேயில் இருக்கும் கணவாய்கள் கண்டுபிடிக்கப்பட்டன. வெளி நாட்டினர் நம் நாட்டின்மீது படையெடுத்து, வெற்றி பெற்று வெகுகாலம்வரை ஆண்டனர். இதற்கப்பால் வெகு தொலேவிற்கும் பிரயாணம் செய்யும் கப்பல்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றின் உதவிகொண்டு ஐரோப்பியர் ஒருவர் பின் ஒருவராக, இதுவரை நம்நாட்டிற்குப் பாதுகாப்பு அரண்களாக இருந்துவந்த கடல்களே எளிதில் கடந்து, நம் நாட்டின்மீது படையெடுத்து

நம்மை அடிமைப்படுத்தினர். வான விமானங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, அவைகளினுதவிகொண்டு எவ்வளவு பெரிய மலைகளையும் தாண்டிவிடமுடிகிறது. இப்படி இயற்கையாகவே பாதுகாப்பு அரண்களாக இருந்துவந்த கடல்கள், மலைகள் முதலியன பிற்காலத்தில் மனிதனின் முயற்சியினால் கண்டுபிடிக்கப்பட்ட சாதனங்களால் முறியடிக்கப்பட்டன. இவ்வாறுதான் சீனாவில் பல ஆயிரக் கணக்கான மைல்கள் நீளமுள்ள ஒரு பெரும் சுவர் சீனமக்களால் எழுப்பப்பட்டது. அதன் உதவியைக் கொண்டு தங்களைத் தாக்கிவரும் மங்கோலியரிடமிருந்து பாதுகாத்துக்கொண்டனர். ஆனால் இதுவும் நாட்கள் செல்லச்செல்லப் பயனற்றுப் போய்விட்டது. ஆகவே தங்களைத் தாக்கவரும் எதிரிகளிடமிருந்து தங்களைக் காத்துக்கொள்ள வகையறியாது முன்னேறுத மனித இனம் சற்றுத் திகைத்தது! இவையெல்லாம் சாதாரணப் போர்க் கருவிகளான துப்பாக்கிகளும், பீரங்கிகளும் இருந்த அக் காலத்தில். ஆனால், பின்பு......?

இரண்டு உலகப் பெரும் போர்கள் மூண்டு, அவற்றிலிருந்து டாங்குகள், வெடி விமானங்கள், நீர் மூழ்கிக் கப்பல்கள், அணுக்குண்டு, ஹைட்ரஜன் குண்டு போன்ற மிக்க அழிவை உண்டாக்கும் வன்மை வாய்ந்த போர்க் கருவிகள் ஒன்றின் பின் ஒன்றாகக் கண்டுபிடிக்கப்பட்டன. அதே நேரத்தில் தாக்கப்பட்டவர்களும் வாளாவிருந்துவிடவில்லை. உதாரணமாக ஒரு நகரத்தை ஒரு வெடிவிமானம் தாக்குகிறதெனக் கொள்வோம். விமானம் அந்நகரத்தை நெருங்கும்முன்பே ஒரு சங்கு(Siren)பலமாக ஊதும். உடனே மக்கள் பதுங்கிக்கொள்வர். இவ்வாறான எச்சரிக்கை முறைகளால் உயிர்ச் சேதம், பணச் சேதம் முதலியவை வெகுவாகக் குறைக்கப்பட்டன. மேலும் தங்கள் விமானங்களின் உதவிகொண்டு எதிரிகளின் விமானங்களைச் சுட்டு வீழ்த்தி நகரத்தைப் பாதுகாத்துக்கொண்டனர். அவ்வாறே எதிரியின் விமானம் சில குண்டுகளை வீசினாலும் அழிவு அவ்வளவு அதிகமாக இருக்கவில்லை. ஆனால் அழிவின் எல்லையையே காட்டக்கூடிய அணுக்குண்டு, ஹைட்ரஜன் குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுவிட்ட தற்காலத்தில் மேற்கூறிய சங்கு ஊதி எச்சரிக்கை செய்யும் முறையோ அல்லது விமானங்கள் மூலம் எதிரியின் விமானத்தை நகரத்தின் அருகிலேயே தாக்கித் துரத்திவிடுதல் போன்ற முறைகளோ பயனற்றவை. உதாரணமாக எதிரி விமானம் ஒரு ஹைட்ரஜன் குண்டை எடுத்துக்கொண்டு நகரத்திற்கு ஐம்பது மைல்களுக்கு அப்பால் வந்துகொண்டிருக்கிறது எனக் கொள்வோம். இந் நிலையில் நகரத்தில் சங்கொலித்தோ, அல்லது எதியின் விமானத்தை அவ்விடத்திலேயே சுட்டு வீழ்த்தியோ பயனில்லை. ஏனெனில் எதிரியின் விமானம் விழுந்து நொறுங்கும் இடம் குறிப்பிட்ட நகரத்திற்கு ஐம்பது மைல்களுக்கு அப்பால் இருந்தாலும், அதிலுள்ள ஹைட்ரஜன் குண்டு வெடிப்பதால், விழுந்த இடத்தைச் சுற்றி நூற்றுக் கணக்கான மைல்களுக்கு சர்வ நாசத்தை உண்டாக்கிவிடும். அந் நகரம் இருந்த சுவடு தெரியாது. இதேபோல் உதாரணமாகக் கோவை நகரை ஒரு விமானம் தாக்க வருகின்றதெனக் கொள்வோம். அவ் விமானம் 250 அல்லது 300 மைல்களுக்கு அப்பால், அதாவது சென்னைக்கு அப்பால் இருக்கும்போதே, நமது விமானங்களாலேயோ அல்லது வழிகாட்டப்பட்ட குண்டுகளின் உதவியாலோ, நாம் அதைத் தாக்கி அழித்தால் கோவையைக் காப்பாற்றலாம். அப்படியில்லாமல் சென்னையையும் கடந்து கோவையை நோக்கி நெருங்கிவிட்டால், பின்பு அவ்விமானத்தைத் தாக்கினாலும் ஒன்றுதான் அல்லது தலையில் குண்டைப் போட்டுவிட்டுப் போகட்டும் என்று ஆண்டவனின் நாமத்தைச் செபித்தாலும் ஒன்றுதான். ஏனெனில் கோவை கட்டாயம் அழிந்துவிடும்.

அப்படியென்றால் எதிரியின் தாக்குதலிலிருந்து தப்ப வழியே இல்லையா? உண்டு. எதிரியின் விமானங்களை நம் நாட்டை விட்டு எவ்வளவு தொலைவில் அழிக்க முடியுமோ அவ்வளவு தொலைவில் அழித்து விடவேண்டும். நாட்டிற்கு நூற்றுக் கணக்கான மைல்களுக்கு அருகில் எதிரிகளின் விமானங்களை நெருங்கவே விடக் கூடாது. அப்படியென்றால் எதிரியின் விமானங்கள் நூற்றுக் கணக்கான மைல் களுக்கு அப்பால் வரும்போதே அவற்றைக் கண்டுபிடித்து அழித்துவிட வேண்டும். இப்படி அவற்றைக் கண்டுபிடிப்பது எப்படி? இங்குத்தான் ரேடார் பயன்படுகின்றது. ரேடாரைக்கொண்டு ஒரு விமானம் நூற்றுக்கணக்கான மேல்களுக்கு அப்பால் இருக்கும்போதே அது நம்முடைய விமானமா அல்லது எதிரியினுடையதா என எளிதில் கண்டறியலாம். இவ்வாறான ரேடார்களைக்கொண்டுதான் அமெரிக்கா தன் நாட்டை எதிரிகளின் அணுக்குண்டு வீச்சுகளி லிருந்து பாதுகாக்கத் திட்டமிட்டிருக்கிறது. தங்களது நாட்டைச் சுற்றி நான்கு பக்கங்களிலும் வரிசையாகக் கிட்டத்தட்டச் சுவர்போன்று ரேடார் நிலையங்கள் கட்டுகின்றனர். வடக்கிலும் தெற்கிலும் நிலப்பரப்பின்மீது ரேடார் நிலையங்கள் நிறுவுவது எளிது. ஆனால் கிழக்கிலும், மேற்கிலும் கடற்பாங்காய் இருப்பதால் இங்கு எப்படி ரேடார் நிலையங்கள் நிறுவுவது? மேற்கில் பசிபிக் மகா சமுத்திரத்தில், கரை யோரத்தில் எந்நேரமும் வேவுபார்த்துவரும் கப்பல்களிலும், விமானங்களிலும் இருக்கும் ரேடார் சாதனங்கள் அப்பக்கத்தில் ரேடார்த் திரையை (Radar curtain) இடைவெளியில்லாமல் உண்டாக்கி விடுகின்றன,

வர்ஜீனியாவி லிருந்து நியூபவுண்ட்லாண்ட் வரை கடற்கரையோரம் ஆழமில்லாமல் இருப்பதால் இவ்விரண்டு இடங்களுக்கும் இடையில் மிதக்கும் ரேடார்த் தீவுகளை நிர்மாணிக்கத் திட்டமிட் டிருக்கின்றனர். இத் தீவுகள், தூண்களின் உதவியால் கடலின்மேல் கட்டப்படும் கட்டிடங்கள்தாம். உயர்ந்த தூண்கள் கடலினடியில் ஆழப் பதிக்கப்படும். பின்பு இவற்றின்மேல் சற்று அகலமான தளம்போடப்பட்டு, அதில் ஒரு கோபுரத்தை நிறுவுவர். இக் கோபுரத்தில் ஒரு ரேடார், வானொலிச் சாதனங்கள் முதலியன வைக்கப்பட் டிருக்கும். தங்களுக்கு வேண்டிய மின்சாரத்தை இவற்றிலேயே உண்டாக்கிக்கொள்ள எல்லா வசதிகளும் இருக்கும். இத் தீவில் 20 முதல் 30 பேர்கள் தங்கியிருக்க வசதிகள் உண்டு. ஒரு ஹெலிகாப்டர் விமானம் இறங்கி, பின்பு செல்லப் போதுமான திறந்தவெளியும் உள்ளது. இம் மாதிரியான ஒரு தீவின் அமைப்பைத்தான் நமது அட்டைப் படம் சித்தரிக்கின்றது.

இவற்றை யெல்லாம் படித்துவிட்டு இப்போது அட்டைப் படத்தை நன்கு கவனியுங்கள். அமெரிக்காவைச் சுற்றி நான்கு பக்கங்களிலும் சீனப் பெருஞ்சுவர்கள் இருப்பதுபோலத் தோன்றுகிறதல்லவா? இம் மாதிரியான ரேடார்த் திரையைக்கொண்டு எதிரிகள் அமெரிக்காவை நெருங்குமுன்பே நூற்றுக் கணக்கான மைல்களுக்கு அப்பால் அழிக்கப்பட்டுவிடுவர். அப்படியென்றால் இந்த ரேடார்த் திரையி னுதவியால் அமெரிக்கா தன்னை யாரிடமிருந்தும் எப்போதும் தவறுமல் பாதுகாத்துக் கொள்ளமுடியும் என்று தெளிவாகிறது, இதையெல்லாம் பார்த்தால் அமெரிக்கா தற்காப்பின் எல்லைக்கே சென்றுவிட்டது என்பது மிகையாகாது அல்லவா?

'உண்மையான வெற்றியைத் தருவது வேல் அன்று; ஆட்சி முறையே— செம்மையான ஆட்சிமுறையே அதனைத் தரவல்லது' —குறட்கருத்து.

அதிசயப் பிறப்பு

திரு. ரா. சுப்பிரமணியம்

இன்று எத்தனையோ வியத்தகு நிகழ்ச்சிகள் நடந்த வண்ணமாகவே இருக்கின்றன. முன்பு, உலகில், ஏழு அதிசயங்களே இருந்தன. ஆனால் இன்றோ வினாடிக்கு ஓர் அதிசயம் நிகழ்கிறது. நம்ப முடியாத செய்திகளைப் பிரதம பாகமாகத் தாங்கி வருகின்றன, இந்நாள் சஞ்சிகைகள். 'குளோப் நியூஸ்' என்று கேலி செய்வதை நாம் பார்த்திருக்கின்றோம். பொய்யும், புனை சுருட்டும் நிறைந்த செய்திகளுக்குத்தான் மேற்படி பெயர் வந்தது. ஆனால் இன்று உண்மையில் பல செய்திகள் நம்பவேண்டியன வாகத்தான் இருக்கின்றன.

இரட்டைக் குழந்தைகள் பிறப்பது, ஒரு அதிசயமாகக் கருதிய காலம் ஒன்றுண்டு. ஆனால். இன்று, மூன்று, நான்கு குழந்தைகள் பிறப்பது வெகு சாதாரணமான நிகழ்ச்சியாகப் போய்விட்டது. அண்மையில் கூட, பிலிப்பைன் தேசத்தில் நாகா எனும் கிராமத்தில் ஒரு மாது எட்டுக் குழந்தைகளை ஈன்றுளாம். அவற்றில் ஐந்து ஆண்களும், மற்ற மூன்றும் பெண்களாம். ஆனால், குழந்தைகள் பிறந்த சில மணி நேரத்திலேயே இறந்துவிட்டன.

சயாம் இரட்டையர்களைப் பற்றிய செய்திகளை நீங்கள் அறிந்திருப்பீர்கள். அவர்கள் பிறந்தது முதல், இறக்கும் வரை இரட்டையர்களாகவே வாழ்ந்தார்களாம். இது பெரு வியப்பன்று. அவர்கள் மணம் புரிந்துகொண்டு குழந்தைகளையும் பெற்றெடுத்து, இன்பமாய் வாழ்ந்திருந்தார்கள் என்ற செய்திதான் வியப்பிற் குரியது. அன்றுமட்டும் அறுவை முறையிலாவது மற்று வேறு எந்த முறையிலாவது அவர்கள் பிரிக்கப்பட் டிருந்தால் அவர்கள் வாழ்வு இன்னும் இன்பமாக இருந்திருக்கும்; ஆனால் அன்று கைதேர்ந்த மருத்துவர்கள்கூட இரட்டையர்களைப் பிரித்தெடுக்க அஞ்சினார்கள். இன்று வெகு விரைவாகவும், எளிதாகவும் கதிர் வீச்சு முறையிலே (Radio activity) பிரித்துவிடுகின்றார்கள்.

மருத்துவர்கள் இதுபோன்ற அதிசயப் பிறப்புகளுக்குத் தக்க குறிப்புகள் எடுத்து வைத்திருக்கின்றார்கள். அதன்படி, இரட்டைக் குழந்தைகள் பிறப்பது சாதாரணமாக $\frac{1}{88}$ என்ற விகிதத்தில் நடைபெறுகின்றது. மூன்றுகுழந்தைகள் பிறப்பது $\frac{1}{7600}$ என்ற விகிதத்தில் இருக்கின்றது. 4 குழந்தைகள் பிறப்பது $1/(7600)^{88}$ என்ற கணக்குப்படி இருக்கின்றது. அதாவது சுமார் 668800 பிரசவத்தில் ஒன்று நான்கு குழந்தைகள் பிறப்பதாக இருக்கின்றது. ஆனால், ஐந்து குழந்தைகள் பிறப்பதோ சுமார் 42,000,000 பிரசவத்தில் ஒன்றாகும். அதாவது இதுவரை கணிக்கப்பட்ட விகிதத்தின்படி 50 எண்ணிக்கைதான் ஐந்து குழந்தைப் பிரசவம் என்று தோன்றுகின்றது. ஆறு குழந்தைகள் பிறப்பதைக் கூடக் கணக்கெடுத்து வைத்திருக்கின்றார்கள். இந்தப் பூவுலகில் இதைக்காட்டிலும் அதிசயமான சம்பவம் வேறு இருக்கக் கூடுமோ?

ஒரு தாய் எவ்வளவுக்கு எவ்வளவு அதிசயக் குழந்தைகளைத் தன் கர்ப்பத்தில் தாங்கிக் கொண்டிருக்கின்றாளோ அவ்வளவுக்கு அவ்வளவு அவளுக்கு அபாயம் இருக்

கிறது. அவைகளைக் குறைப் பிரசவத்தில் பெற்றெடுத்தால் கூட வியப்பில்லை. அப்படி நிறை மாதப் பிரசவமாக இருந்தாலும், அவைகள் மற்றக் குழந்தைகள், உண்மையில் இருக்கும் எடையைவிடச் சற்றுக் குறைவாகவே இருக்கும். ஏனெனில் ஒவ்வொரு ஏழு ராத்தல் எடையுள்ள நான்கு குழந்தைகளைத் தாய் சுமப்பது எளிதான செயலன்று. சாதாரணமாக, நல்ல உடல் நலனோடு கூடிய குழந்தைகள் குறைந்தது ஏழு அல்லது ஏழரை ராத்தல் எடை இருப்பது திண்ணம்.

ஆதலின், நல்லூழின் 'கருணை'யால் அப்படி நான்கு குழந்தைகள் பிறந்தாலும், அவைகள் சாதாரணக் குழந்தையின் எடையில் அரைப்பகுதி இருந்தாலே போதுமானது. அவைகளுக்குத் தாய்ப் பால் அருந்தும் வலிமைகூட இருக்குமோ என்பது ஐயம்தான். அவைகள் ஒரு விதமான கண்ணாடிக் குழலின் உதவியினால் பாலூட்டப் பெறவேண்டும். இக்கண்ணாடிக் குழல் அமைப்பில், பழங் காலத்துப் பேனாக்களை நிரப்பும் குழலை (Ink Filler) ஒத்திருக்கும். சில சமயங்களில் இதுகூட முடியாது. குறுகிய இரப்பர்க் குழாயினை அவற்றின் வயிற்றுக்குள் செலுத்தி, பால் கொடுக்க வேண்டிய நிலையில்கூடச் சில குழந்தைகள் இருக்கலாம்.

இச் சிறு குழந்தைகள் ஒழுங்கான தட்ப, வெப்ப நிலையில் வைக்கப்படவேண்டும். வெப்பம் ஒரேயடியாகச் குறைந்து விடாமலும், அதிகப்படாமலும் நடுத்தர நிலையில் இருக்கவேண்டும். அவை உட்கொள்ளும் காற்று, சற்று ஈரமானதாகவும் இருக்க வேண்டும். அக்காற்றில், குழந்தைகளுக்குத் தேவையான அளவு தீயகம் (Oxygen) இருக்கும்படியாகப் பார்த்துக்கொள்ள வேண்டும். இது மிக அவசியமானதொன்றாகும்.

குழந்தை அடைகாப்போன் (Baby Incubator) என்ற கருவி இதற்கு வசதி செய்து தருகின்றது. இக்கருவி கண்டுபிடித்த பின்னர்த்தான், குறைமாதப் பிரசவத்தில் பிறந்த குழந்தைகள் பெரும்பாலும் காப்பாற்றப்பட்டன. இதற்கு முன், அவைகள் சரியாகப் பாதுகாக்கப்படாமல், பிறந்த உடனேயே இறந்துபோயின. இதைத் தடுக்கக் கருதி, ஒரு விஞ்ஞானி அல்லும், பகலும் அரும்பாடுபட்டு இக் கருவியைக் கண்டுபிடித்தார். தக்க சமயத்தில் தகுந்த கருவி கண்டுபிடித்து உதவி செய்த அந்த விஞ்ஞானியை நாம் அறிய வேண்டாமா? அவர்தான் தென்னமெரிக்காவைச் சார்ந்த டாக்டர் கார்டன் ஆம்ஸ்ட்ராங் என்பவராவர். இன்று அவருக்கு ஓய்வு என்பதே இல்லை. எப்பொழுதும் தொலை பேசி (Telephone) மணி அடித்த வண்ணமாகவே இருக்கும். தந்திச் செய்தி வந்துகொண்டே இருக்கும். செய்தி கிடைத்த சிறிது நேரத்திற்கெல்லாம் தேவையான இடத்திற்கு அடைகாப்போன் கருவி குறிப்பிட்ட நேரத்தில் போய்ச் சேர்ந்துவிடும். இன்று மருத்துவரெல்லாம் அவரை வாயார வாழ்த்துவதில் வியப்பென்ன!

அவர் கண்டுபிடித்த கருவி குறைமாதக் குழந்தையைக் காப்பதில்மட்டும் பயன்படவில்லை. ஒரே சமயத்தில் பிறந்திடும் நான்கு, ஐந்து குழந்தைகளைக் காக்கவும் பேருதவியாக இருக்கிறது. இந்த அடைகாப்போன் கருவியை வெள்ளை எனமல் பூசிய தகட்டினால் செய்கின்றார்கள். சிறப்பு முறையில் தயாரித்த ஒரு தொட்டில் என்று கூட இதைச் சொல்லலாம். சாதாரணமாக இது ரொட்டி வைக்கும் பெட்டியைப்போல் இரண்டு மடங்கு பெரியது. மேற் பக்கத்திலும், முன்புறத்திலும் கண்ணாடி அல்லது பிளாஸ்டிக்கினால் செய்த தகடு போடப்பட்டிருக்கும். உள்ளே மிருதுவான உல்லன் துணி சுற்றப்பட்டு மெத்தை போல் மெதுவாக இருக்கும். தோற்றத்தில் கடைகளில் சாமான்களை அலங்காரமாய் வைத்திருக்கும் சிறு கண்ணாடிப் பெட்டியைப் போல்தான் இருக்கும். ஒரு குழாய் வழியாகத் தீயகம் ஒரே சீராகப் பாய்ந்து கொண்டிருக்கும். இக்கருவி ஒரு மின் குமிழியால் (Electric Bulb) சூடேற்றப்பட்டு, எப்போதும் 95° வெப்பம் இருக்கும்படி அமைக்கப்பட்டிருக்கும். மேல்மூடி, குழந்தைகளுக்குப் பாலூட்டும்போது மட்டும்தான் திறக்கப்படும். குழந்தைகளுக்குச் சாதாரணமாக நீர்த்த முலைப் பாலை (Diluted Breast Milk)த் தான் கொடுப்பார்கள். அவைகள சிறிது

வளர்ந்தபின் கண்ணுடிக் குப்பியின் மூலம் (Feeding Bottle) பாலூட்டப் பெறும். தாய்க்குப் பாலூட்டும் வேலையே கிடையாது. அது முடியவும் முடியாது. ஒரே சமயத்தில் எப்படி நான்கு குழந்தைகளுக்கும் ஒரு தாய் பாலூட்ட முடியும்? ஆதனால் அவைகள் குப்பியின் மூலம்தான் பாலூட்டப்பெற்று வளர்க்கப்படுகின்றன. அவைகள் சில மாதங்களில் வளர்ந்து உயிர்தறிக்குமானல், ஏனைய குழந்தைகளைப்போல் வளர்ந்து பெரிதாக வாய்ப்பிருக்கின்றது. ஏனெனில், சில குழந்தைகள் சில மாதங்கள் வளர்வதற்குள்ளாக உயிர் துறந்து விடுவதால், நாம் நிச்சயமாக அவைகள் வளர்ச்சியைப்பற்றிச் சொல்ல முடியாது.

இரட்டை, அல்லது மூன்று, நான்கு குழந்தைகளைச் சுமப்பது உண்மையில் தாய்க்குப் பெருந்துன்பமாகத்தான் இருக்கும். மேலும், அது தாய்க்குப் பெரிய சோதனையாகக்கூட இருக்கும். தன் கருவில் அவைகளை வளர்க்க அவள் நன்கு ஊட்டம் தரப்படவேண்டும். சாதாரணமான பிரசவம் எவ்வளவுக்கு எளிதாக இருக்குமோ அவ்வளவுக்கு நான்கைந்து குழந்தைகளை அவள் பெற்றெடுப்பதில் வேதனையும் துன்பமும் அதிகம். ஆனல் முதல் பிரசவத்தைவிட, இரண்டாவது சற்று எளிதாக இருப்பது இயற்கைதான். அதனல், இரட்டை, அல்லது மூன்று, நான்கு குழந்தைகள் பிறப்பதானுலும் அது இவ்வளவு தொல்லைகொடுக்கும் காரியமன்று. ஆனல், இதுவரை குழந்தைகளே பெற்றெடுக்காத ஒருதாய் திடீரென்று கருத் தரித்தால், அவளுக்கு மூன்று, அல்லது நான்கு குழந்தைகள் பிறக்கலாம் என்று மருத்துவர்கள் கூறுகின்றுர்கள், அவளுக்குத்தான் உண்மையில் அதிக உதவி செய்ய வேண்டும் என்று வற்புறுத்துகின்றுர்கள். இதுவே நியதியாக இருக்கவேண்டு மென்பதில்லை. எத்துணையோ ஆண்டுகட்குப் பின்னர்க் கருத்தரித்து ஒரு குழந்தை பெற்றவர்க ளுண்டு. ஆஸ்திரேலியாவில் ஒரு மாது தன் 90-வது வயதில் ஒரு குழந்தையைப் பெற்றுளாம். தாயும், சேயும் நலமாக இருக்கின்றுர்கள் என்று ஆஸ்திரேலியச் செய்தி நிலையம் அண்மையில் ஒரு செய்தி வெளியிட்டது. ஒரு தாய் ஒரு தடவை இரட்டை அல்லது, மூன்று குழந்தைகளைப் பெற்றெடுத்தால் அவள் அடுத்தடுத்து அதேபோல் பிரசவிக்கலாமாம். இதுபோன்ற தன்மை இன்று பல குடும்பங்களில் அன்றுட நிகழ்ச்சியாக ஆகிவிட்டது. ஓர் பெண்ணும், ஒரு ஆணும், இருவரும் இரட்டைக் குழந்தைகள் பிறந்த குடும்பங்களி லிருந்து வந்திருப்பா ராயின் அவர்கட்கு மணமான பின் இரட்டையர்கள் பிறக்கலாம். மூன்று குழந்தைகள்கூடப் பிறக்கலாமாம். ஆனல் நான்கு குழந்தைகள் பிறப்பது அரிதாகத் தான் இருக்கின்றது. இரண்டாம் உலகப் போருக்கு முன் இதுபோன்ற சம்பவம் அவ்வளவில்லை. ஆனல் இத்தன்மை இன்று மிகுந்துள்ளது. இதன் காரணத்தை அறிய விஞ்ஞானிகள் முயற்சி செய்துகொண்டிருக்கிறுர்கள். நம் நாட்டைவிட மேலை நாடுகளில்தான் இந்நிகழ்ச்சி மிகுதியாக நடைபெறுகின்றது.

சாதாரணமாக இரட்டைக் குழந்தைகள் கருவிலிருப்பது அறிய முடிவதில்லை. எவ்வளவு பெரிய சோதனைக்கும் இது தப்பி விடுகின்றது. ஆனல் நான்கு குழந்தைகளைத் தாங்கியிருக்கும் தாயின் வயிறு சாதாரணமான நிலையைவிட மிகப் பெரிதாக இருப்பதால் சந்தேகத்தின் பேரில் எக்ஸ்ரே படம் எடுத்துப்பார்த்து ஐயத்தைப் போக்கிக் கொள்ளலாம். உண்மையில் எக்ஸ்ரே முறையில்தான் கருவில் வளரும் குழந்தையின் எண்ணிக்கையைத் திட்டவட்டமாகக் கணிக்கமுடியும். கருவில் வளரும் சிசு ஆண, பெண்ணு எனத் தீர்மானமாகச் சொல்லக்கூடிய அளவுக்கு இந்நாள் விஞ்ஞானம் வளர்ந்துவிட்ட பின் எதுவும் பெரிய, சாதிக்கமுடியாத செயலன்று. ஐந்து, ஆறு பிறப்பது மிக, மிக அரிதானதால் அதைப்பற்றிய கவலையே வேண்டாம். இதைப் படித்துவிட்டு எந்தத் தாய்மாரும், தங்களுக்கும் இப்படிக் குழந்தைகள் பிறந்துவிடுமோ என்று சிறிதும் அஞ்சவேண்டிய தில்லை. மருத்துவ உதவி எளிதில் கிடைக்கக்கூடிய இந் நாளில் யாரும் பயந்துகொள்ளத் தேவையேஇல்லை.

ஒளிதரும் தாவரங்கள்

திரு. வி. டி. ஜான், B. Sc.

"தாவரம்" என்ற சொல், பல்வேறு விதமான ஜீவராசிகளைக் குறிக்கும் ஒரு சொல்லாகும். மரம், செடி, கொடி, புல், பூண்டு போன்ற உயிரினங்களும், தண்ணீரில் கண்ணுக்குத் தெரிந்தும், தெரியாமலும் வாழும் "பாசி"களும் (Algae), நனைந்த சுவர்கள் போன்ற இடங்களில் ஏராளமாக வளரும் "மாசு"களும், (Mosses) காடுகளில் அடர்ந்து வளரும் "பெரணி"களும் (Ferns) குப்பைகளில் வளரும் "காளான்"களும் (Fungi) எல்லா விடங்களிலும் பரந்திருக்கும், கண்ணுக்குத் தெரியாத பாக்டீரியாக் கிருமிகளும், தாவர இனத்தைச் சேர்ந்தவைகளே.

மேற்கூறிய தாவர வகைகளில், சில வகைக் காளான்களும், பாக்டீரியாக்களும், சில அசாதாரண நிலைகளில், ஒலி தரக்கூடும் என்ற உண்மை, பல வருடங்கட்டு முன்னமே சில தாவர நிபுணர்கள் எடுத்துக்காட்டி யுள்ளார்கள். சிலவகைக் காளான்களால் பாதிக்கப்பட்ட மரத் துண்டுகளும், பாக்டீரியாக்கள் நிறைந்துள்ள மாமிசத் துண்டுகளும், கடல் மீன்களும், சில வேளைகளில் மின்மினிப் பூச்சியைப்போல் ஒளி தருவதை நம்மில் சிலர் பார்த்திருக்கலாம். இவ்வொளி, மேற்கூறிய பொருள்களினின்று நேராக வருவதல்ல வென்றும், அப்பொருள்களின் மேல் நிறைந்துள்ள தாவர வினங்களினின்று வருவதுதான் என்றும் தற்போது தெரிய வருகிறது.

ஒளி தரக்கூடிய பாக்டீரியாக்கள் கடல் நீரில் ஏராளமாக வாழ்கின்றன. மாமிசத் துண்டுகளின்றும் வீசு மொளி, சிலவகை பாக்டீரியாக்களால்தான் என்று புளுகர் (Pfluger) என்பவர் எடுத்துக்காட்டியுள்ளார். ஒரு மாமிசத் துண்டைக் கடல் நீரில் நனைத்து, ஒரு கயிற்றால், இருட்டறைக்குள் தொங்கவிட்டால், சிறிது நேரத்திற்குள், அதினின்றும் ஒளி வருவதை நன்கு பார்க்கலாம். கடல் மீனைக் கழுவின தண்ணீரில், சிறிது பெப்டோனும், சோடியம் அல்லது, மகனீசியக் குளோரைடும் சேர்த்தால், அந்த நீரிலுள்ள பாக்டீரியாக்கள் விருத்தியடைந்து ஒளி தரத் தொடங்கும்.

எல்லா வித பாக்டீரியாக்களும் ஒளி தராது. அவைகளில் பாக்டீரியம் லூமினோசம், (Bacterium luminosum) பாக்டீரியம் லூசிபெறம், (B. luciferum) போன்ற சில வகைகள்தான் ஒளி வீசும் இயல்பு வாய்ந்தது. இவ்வினங்கள், கடலின் சில பாகங்களில் ஏராளமாகவும், வேறு சில பாகங்களில் குறைவாகவும் காணப்படும்.

சில வகை மரங்களின் பல்வேறு பாகங்களினின்றும் ஒளி வருவதன் காரணத்தைப் பற்றி முதன் முதல் ஆராய்ந்தவர்கள், ரெட்சியஸ், (Retzius) வான் ஹம்போல்ட் (Von Humboldt) என்ற இருவர் தான். மரங்களின் பல பாகங்களிலும், காளான்

கள் விருத்தி யடைந்து ஒளி வீசுகின்றன. "நாய்க்குடை" (Agaricus) போன்ற காளான்களின், "குடை" போல் காணப் படும் பாகங்களினின்றும் சில சமயங் களில் ஒளி வீசும்.

ஒளியின் இயல்பு

மேற்கூறிய வகை பாக்டீரியாக்களி னின்றோ, களான்களினின்றோ வரும் ஒளி, இருட்டறையில், சிறிது ஈரமான பாஸ் பரத்தை வைத்தால் அதினின்று வரு மொளியைப் போன்றிருக்கும். இவ்வொளி பெரும்பாலும் வெண்மையாகவும், சில சம யங்களில் பச்சை அல்லது நீலம் கலந்தும் காணப்படும். சாதாரணமாக இவ்வொளி சக்தி குறைந்த தாகத் தானிருக்கும். ஆனால், கார்டனர் என்பவர், பிரசீல் தேசத்தில் வளரும் ஒரு வகை நாய்க்குடை அச்செழுத்தைப் படிக்கக் கூடிய அளவு சக்தி வாய்ந்த ஒளியைத் தருகிறதென்று சொல்லுகிறார். சூரிய வெளிச்சத்தை நோக்கிச் செடிகளின் நுனிகள் எங்ஙனம் வளைகிறதோ, அங்ஙனமே சில பாக்டீரி யாக்களினின்றும் வருமொளியை நோக் கிச் செடிகளின் நுனிகள் வளரச் செய்யத் தகுந்த சக்தி வாய்ந்ததென்று சிலர் எடுத் துக் காட்டுகிறார்கள். வேறு சில வகை, பாக்டீரியாக்களினின்றும் வரும் ஒளியின் உதவியால் அவைகளைப் "போட்டோ" பிடிக்கவும் செய்யலாம்.

ஒளியின் காரணம்

தாவரங்களி னின்றும் வரும் ஒளியை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். செடி களின் இலைகளோ, மற்ற பாகங்களோ, பகலில் சூரிய வெளிச்சக் கதிர்களைத் தங் கட்குள் கிரகித்து, இருளில் அவைகளை வெளியே விடுகின்றது. சில செடிகளின் இலைகளினின்றும், பூத்தண்டுகளினின்றும் வரும் ஒளி இவ்வகை ஒளியாகும். ஆனால் மேலே கூறப்பட்ட பாக்டீரியாக்களும், காளான்களும் தரும் ஒளி வேறுவித மானது. இவ்வொளி, மேற்கூறிய ஜீவராசி களின் சக்தியை ஒளிச் சக்தியாக (Light energy) மாற்றுவதா லுண்டாவது தான். இவ்வொளி, சுவாசித்தலைப் போன்று, இரவு, பகல் வேறுபாடின்றி வீசும்; மேலும் இவ்வொளி சுவாசித்தலை யொட்டிக் குறைந்தோ, அதிகமாகவோ காணப்படும். ஒரு குறிப்பிட்ட பருவமடைந்த பிறகுதான் இவ்வணுக்கள் ஒளி வீசத் தொடங்கு மென்று மக்கென்னி (Mckenny) என்பவர் எடுத்துக் காட்டுகிறார். மேலும், வெப்ப நிலை, உணவுப் பொருள்கள், பிராணவாயு வின் அளவு போன்றவற்றையொட்டி, ஒளி குறைந்தோ, அதிகமாகவோ காணப்படும்.

வெப்ப நிலை

சில காளான்கட்கு, ஒளி தர 25°–30°C வெப்பம் தேவை. பல பாக்டீரியாக்கள், 0°–50°Cக்குள் ஒளி தரும். வெப்பநிலை குறிப்பிட்ட அளவிற்கு மேல் அதிகரித்தால் ஒளியும் அதிகரிப்ப தில்லை. ஒளி தர இவ் வணுக்கட்குச் சாதாரணமாக வளர்ச்சிக்கு வேண்டிய அளவு வெப்பத்தைவிட குறை வாகப் போதும்.

உணவுப் பொருள்கள்

உணவுப் பொருள்களின் சக்தி குறைந் தால் சாதாரணமாக ஒளியின் சக்தியும் குறையும். சில ஒளி தரும் அணுக்கட்கு உணவுப் பொருள்களைத் தவிரச் சிலவகை உப்புக்களும் தேவை. சோடியம் குளோ ரைடோ, சோடியம் நைட்ரைடோ இருந் தால் ஒளியின் சக்தி அதிகரிக்குமென்றும் இவ்வுப்புக்களுக்குப் பதிலாக லித்தியத் தின் உப்புக்களோ, ருபீடியத்தின் உப்புக் களோ யிருந்தால் ஒளியின் சக்தி குறையு மென்றும் மக்கென்னி எடுத்துக் காட்டி யிருக்கிறார். மக்னீசியம் குளோரைடும் ஒளிச் சக்தியை அதிகரிக்கச் செய்யு மென்று தெரியவருகிறது. கடல் நீரில்

இவ்வித உப்புக்கள் ஏராளமாகக் காணப்படுவதால் தான் கடலி லுள்ள பாக்டீரியாக்கள் ஒளியைத் தரும் தன்மையை அடைந்திருக்கின்றன. உணவுப் பொருள்களில் சில வகை பாக்டீரியாக்களுக்குச் சிறிது பெப்டோனும், வேறு சிலவற்றிற்குக் குளூகோஸ் போன்ற ஒரு வகைச் சர்க்கரைப் பொருளும் தேவை.

பிராணவாயு

வெப்பநிலை, உணவுப் பொருள்களைத் தவிர, பிராணவாயுவும், ஒளியின் அளவைப் பாதிக்கும். சாதாரணமாகச் சுவாசித்தலுக்கு வேண்டிய அளவு பிராணவாயுவைவிடச் சிறிது அதிகமாயிருந்தால் ஒளி அதிகமாக வரும். அகாரிக்கஸ் ஒலியேரியஸ் என்ற ஒருவகை நாய்க்குடை, சுத்தமான பிராணவாயு விருந்தால்தான், அதிகமான ஒளிதரு மென்று பாபர் (Fabre) என்பவர் கூறுகிறார்.

ஒளியுண்டாகும் விதம்

கடைசியாக, ஒளியுண்டாகும் விதத்தைப் பற்றிச் சிறிது பார்ப்போம். இதைப்பற்றி இனியும் சரியான அறிவு கிடைக்கவில்லை. போளாஸ் டாக்டையிலிஸ் (Pholas dactylis) என்ற ஒருவகை ஒளிதரும் தாவரத்தினின்றும் டூபாயிஸ் (Dubois) என்பவர், லூஸிபெரின் (Luciferin) லூஸிபெரேஸ் (Luciferase) என்ற இருவகை அரிய பொருள்களைப் பிரித்தெடுத்து, அவைகள் தான் ஒளியை உண்டாக்க ஏதுவாயிருக்கின்றன என்று கூறுகிறார். ஆனால் இப் பொருள்கள் எங்ஙனம் உண்டாகின்றன என்றும், அவைகளின் தன்மை யாவென்றும், அவை எங்ஙனம் ஒளிச் சக்தியை உண்டாக்கச் செய்கிறதென்றும், அவர் நன்கு விளக்கவில்லை. எனவே, இப்பகுதியைப் பற்றியுள்ள ஆராய்ச்சி இன்னும் நடந்துகொண்டே யிருக்கிறது.

—❋—

விஞ்ஞானம் மனிதன் அழிவுக்குப் பயன்படுமானல்....

❋

மக்களின் தொகை இடையருது பெருகிக் கொண்டே இருக்கிறது. எனவே அவர்களுக்கு உணவளிக்கும் பொறுப்பு மிகுகிறது. ஆனால் அவர்கள் உணவு பெறுவழி குறைந்துகொண்டே வருகிறது. தற்கால நிலைமை நீடிக்குமானல்—அதாவது, விஞ்ஞானம் மனிதனின் நலனுக்குப் பதிலாக அழிவுக்குப் பயன் படுத்தும் நிலை நீடிக்குமானல் இன்னும் ஒன்றிரண்டு நூற்றாண்டுகளுக்குள் உலகில் பஞ்சம் தோன்றும்; பஞ்சத்தால் வாடும் நாடுகள் எஞ்சி இருக்கின்ற உணவுப் பொருள்களில் பெரும் பங்குகொள்ள ஒன்றோடொன்று போரிடும்.

—சி. இ. எம். ஜோட்.

கடலைப்பற்றி...

திரு. ச. மு. பிள்ளை.

பூவுலகத்தின் நீர்ப்பாகத்தை ஐந்து பெரும் பிரிவுகளாகப் பிரித்திருப்பதையும், அவை வடகோடியி லுள்ள ஆர்டிக், தென் கோடியி லுள்ள தென் பெருங் கடல் பூபாகத்தின் மத்தியில் உள்ள அட்லாண்டிக், பசிபிக், இந்துமகா சமுத்திரங்கள் எனப் பெயர் பெறும் என்றும் அறிவோம். இப்பெரும் பிரிவுகளைச் சேர்த்துப் பல கடல்களும், குடாக் கடல்களும், ஜலசந்திகளும் இருக்கின்றதையும் அறிவோம். நிலப் பாகத்தில் சமநிலங்களும், பீடபூமிகளும், குன்றுகளும், மலைகளும் இருப்பது போலவே சமுத்திரங்களிலும் சிறு ஆழமுள்ள இடங்களும், அதிக ஆழமுள்ள இடங்களும் இருக்கின்றன.

உலகத்தில் உள்ள உன்னதமான மலைச் சிகரம் இமயமலையைச் சேர்ந்த எவரஸ்ட் சிகரம் என்பதை இன்று எல்லோருமறிவர். இதன் உயரம் 29,000 அடி. அதாவது சுமார் ஐந்தரை மைல் உயரமுள்ளது. ஆனால், எவரஸ்ட் சிகரத்தைவிட அதிகமான ஆழம் சமுத்திரத்தில் இருப்பதைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். பசிபிக் மகா சமுத்திரத்தில் பிலிப்பைன் தீவுகளுக்கு அண்மையில் சமுத்திரம் மிகுந்த ஆழமாக இருக்கின்றது. அங்குச் சமுத்திரம் 32,100 அடி ஆழமாக இருக்கிறது. அதாவது ஆறு மைலுக்கு அதிகமான ஆழமாயிருக்கிறது. எவரஸ்ட் மலையைப் பெயர்த்தெடுத்து இந்த இடத்தில் வைத்தால், அம் மலை தண்ணீருக்குள்ளேயே அமிழ்ந்து விடுவதோடு, அம்மலை யுச்சிக்கும் சமுத்திர மட்டத்துக்கும் இடையில் அரைமைல் இடைவெளி இருக்கும்.

மலைகளில் சில மலைகளே அதிக உயரமாக இருப்பதுபோல், சமுத்திரங்களிலும் சில இடங்களில்தான் அதிக ஆழம் காணப்படுகிறது. சற்றேறக்குறைய 30,000 அடி ஆழமுள்ள இடங்கள் 57 இடங்களில் காணப்படுகின்றனவாம். பசிபிக் மகா சமுத்திரத்தில் 32 இடங்களிலும், இந்துமகா சமுத்திரத்தில் 5 இடங்களிலும், அட்லாண்டிக் மகா சமுத்திரத்தில் 19 இடங்களிலும் சமுத்திரங்கள் அதிக ஆழமாக இருக்கின்றதாக சமுத்திர ஆராய்ச்சி செய்தவர்கள் சொல்லுகிறார்கள்.

பசிபிக் மகா சமுத்திரத்தைப்பற்றிய இன்னொரு செய்தி இங்குச் சொல்லவேண்டும். அதாவது சந்திரன், பூமியிலிருந்து பிரிந்து போன ஒரு பாகம் என்று நாம் அறிவோம். சந்திரன் பூமியின் எந்தப் பாகத்திலிருந்து விண்டுபோயிற்று என்று ஆராய்ச்சி செய்ததில் அது, இப்போது பசிபிக்மகா சமுத்திரம் இருக்கிற இடத்தில் இருந்துதான் விண்டுபோயிருக்க வேண்டுமென்று அறிவாளிகள் யூகிக்கிறார்கள்.

பொதுவாகச் சமுத்திரங்கள் அதிக ஆழமாகத்தா னிருக்கின்றன. சமுத்திரங்களில் பாதிப் பாகம் 12,000 முதல் 18,000 அடிவரை ஆழமுள்ளவைகளாக இருக்கின்றன. அட்லாண்டிக் மகா சமுத்திரத்தின் அதிக ஆழம் 31,362 அடி என்று கணக்கிடப்பட் டிருக்கிறது.

நிலத்தின்மே லிருப்பது போலவே, சமுத்திரத்திலும் பல பிராணிகளும் தாவரங்களும் இருக்கின்றன. ஆனால், பூமியில் தாவர வர்க்கம் அதிகம்; சமுத்திரங்களில் தாவரவர்க்கம் மிகக் குறைவு. பெரும்பாலும் சமுத்திரத்தி லுள்ள தாவரங்கள் பாசிகளாகவும் கொடிகளாகவும் இருக்கின்றன. இத்தாவரங்களுக்கும் சூரிய வெளிச்சம் அவசியமாகையால், இவை சமுத்திரத்தின் அதிக ஆழமான இடங்களில் வளர்வதில்லை. சமுத்திரத்தி லுள்ள தாவரங்கள் நீர் மட்டத்தி லிருந்து 180அடி ஆழத்திற்குள்ளாகத்தான் வளர்கின்றன. சமுத்திரத்தில் வசிக்கும் பிராணிகளும், ஆழமில்லாத கடற்கரைகளில் அதிகமாகவும், போகப்போக ஆழமான இடங்களில் மிகக் குறைவாகவும் காணப்படுகின்றன. அன்றியும் உஷ்ணப் பிரதேசங்களை யடுத்த சமுத்திரங்களில் விதவிதமான பலவகை மீன்கள் காணப்படுகின்றன. குளிர்ப் பிரதேசத்தை யடுத்த சமுத்திரங்களில் ஒரே வகையான மீனகள் காணப்படுகின்றன.

கடல் நீரைக் காய்ச்சினால், வெளுத்த உப்புக் காணப்படும். இந்த உப்புடன் மற்றும் சில பொருள்கள் கலந்திருக்கின்றன. உப்பில் முக்கால் பங்குக்குமேல் ஸோடியம் க்ளோரைட் என்னும் உணவுடன் உபயோகப்படும் உப்பும், மற்றக் கால்பங்கு கார்பனேட்ஸ், சோடியம், பொட்டாஸியம், கால்ஸியம் முதலிய உப்புகளும் காணப்படுகின்றன. இன்னும் கடல் நீரில் பொன், வெள்ளி முதலிய உலோகங்களும் காணப்படுகின்றன. உப்பு முதலிய உலோகவகைகள் சமுத்திரத்தில் ஏன் காணப்படுகின்றன என்றால், ஆறுகள் நிலங்களின் வழியாய்ப் பாய்ந்துவரும்போது அவை அந்நிலங்களி லுள்ள உலோகங்களைக் கரைத்துக்கொண்டுபோய்க் கடைசியில் கடலில் சேர்க்கின்றன; இவ்விதம் ஆறுகள் உலோகங்களைக் கடலில் சேர்ப்பதனால்தான் கடல் நீர் உப்பாகவும், மற்றும் அனேக உலோகங்கள் கலந்தும் காணப்படுகின்றது. பல்லாயிரம் வருஷங்களுக்கு முன்னே சமுத்திரத்தின் நீர் உப்புச்சுவை இல்லாமல் நல்ல நீராக இருந்ததென்றும், பிறகுதான் உவர்ப்புச் சுவை ஏற்பட்டதென்றும் ஆராய்ச்சியாளர்கள் சொல்லுகிறார்கள். இன்னும் கடல் நீரில் பிராண வாயுவும் கலந்திருக்கிறது. சமுத்திர நீரில் பிராணவாயு இல்லாமற்போனால் சமுத்திரங்களில் நீர்ப்பிராணிகளும், நீர்ப்புல் பூண்டுகளும் வளரா.

சமுத்திரத்தில் வசிக்கும் மீன் முதலிய நீர்வாழ் பிராணிகள் சமுத்திர நீரில் கலந்துள்ள பிராணவாயுவைச் சுவாசித்து உயிர் வாழ்கின்றன. அவைகளுக்கு, வாய்க்குப் பக்கத்தில் (கன்னங்களில்) செதில் என்னும் உறுப்பு அமைந்திருக்கின்றது. அவை அந்த உறுப்புக்களின் உதவியால் தண்ணீரிலுள்ள பிராணவாயுவைப் பிரித்தெடுத்துச் சுவாசிக்கின்றன. எனவே, நீர் வாழ் பிராணிகளும் நிலத்தில் வாழும் பிராணிகளைப் போலவே சுவாசிக்கின்றன.

நீர்வாழ் பிராணிகள் தண்ணீருக்கு மேலே வந்தால் உடனே அவை இறந்துவிடுகின்றன. தண்ணீருக்கு வெளியே உள்ள காற்றிலும் பிராணவாயு இருக்கும் போது மீன்கள் ஏன் இறந்துவிடுகின்றன தெரியுமா? மீன்களுக்கும் பிராணவாயு அவசியம் என்றாலும், வாயுவை நேரே மூச்சுப்பைக்குள் அனுப்பவும், வெளிப்படுத்தவும் ஏற்றபடி மீன்களுக்கு உறுப்புகள் அமைந்திருக்கவில்லை. ஆகையால், அவை தண்ணீர்விட்டு வந்தவுடன் இறந்துவிடுகின்றன. அதைப்போலவே, மனிதரும் மிருகமும் தண்ணீருக்குள் முழுகிவிட்டால், தண்ணீரில் பிராணவாயு கலந்திருந்தும் அதைச் சுவாசித்துப் பிழைக்காமல் இறக்க நேரிடுகிறது. ஏன் என்றால், மனிதர் மிருகங்களுக்குத் தண்ணீரிலுள்ள பிராணவாயுவை நீரிலிருந்து பிரித்தெடுத்துச் சுவாசிக்கும்படியான உறுப்பு அமைந்

திருக்கவில்லை. ஆகவே, நிலத்திலுள்ள பிராணிகள் தண்ணீரில் மூழ்கினுல் இறந்து விடுகின்றன. நீரிலுள்ள பிராணிகள் நிலத்தின்மேல் வந்தால் அவைகளும் இறந்துவிடுகின்றன. ஆனுல் தண்ணீரில் இருந்துகொண்டே, நீருக்கு வெளியேயுள்ள காற்றைச் சுவாசித்துக்கொண்டிருக்கும் பிராணிகளும் சமுத்திரங்களில் இருக்கின் றன. அவை சமுத்திரத்திற்குள் மூழ்கி நெடுநேரம் இருந்தாலும், சுவாசிப்பதற் காக அடிக்கடி நீர்மட்டத்திற்குமேல் வரும். அவை திமிங்கலம், ஸீல் என்பன.

நிலத்தி லுள்ள ஜீவப் பிராணிகள் எல் லாம் ஆகாயத்தி லுள்ள பிராணவாயுவைச் சுவாசித்துக் கரியமிலவாயுவை வெளிப் படுத்துகின்றன. இந்த அசுத்த வாயுவா கிய கரியமிலவாயுவைத் தாவரங்கள் இலை களின் மூலமாய் உட்கொண்டு செழித்து வளர்கின்றன. அவ்வாறே நீரில் வாழும் நீர்ப்பிராணிகளும் நீரிலுள்ள பிராணவாயு வைச் சுவாசித்துக் கரியமிலவாயுவை வெளிப்படுத்துகின்றன. அக் கரியமில வாயுவை நீரில் வளரும் பாசி கொடி முத லிய தாவரங்கள் தமக்கு உணவாக்கிக் கொள்கின்றன.

மீன் முதலிய நீர்வாழ் பிராணிகளில் சில சமுத்திரத்தில் உள்ள பாசி கொடி களைத் தின்று வாழ்கின்றன. சில, சிறு மீன்களையும் இறந்துபோன கடல் பிராணி களையும் தின்று வாழ்கின்றன. மூட்டைப் பூச்சி, உண்ணி, பேன் முதலிய பூச்சிகள், மனிதர் மாடு முதலிய பிராணிகளின் இரத் தத்தை உறிஞ்சி உயிர்வாழ்வது போலவே, மீன்களின் இரத்தத்தை உறிஞ்சி உயிர் வாழும் பூச்சிகளும் இருக்கின்றன. இன் னும் சில பிராணிகள் இருக்கின்றன. அவை, மரங்களைத் துளைத்துவிடக் கூடி யவை. இவைகளுக்கு மரம் துளைக்கும் பிராணிகள் என்று பெயர். மிகச் சிறு பூச்சிகளாகிய இவை ஒரு கூட்டமாகச் சேர்ந்து கப்பல் முதலிய மரச்சாமான்களைத் துளைத்துவிடுகின்றன. இன்னும் ஒருவகை நத்தை போன்ற பிராணிகள் இருக்கின் றன. அவற்றின் உருவமும் நிறமும் பேரீச் சம்பழத்தைப் போன்றிருக்கும். அவை பாறைகளைத் துளைத்துக்கொண்டு அவற் றில் உயிர்வாழ்கின்றன. அவை தம் தேகத்திலிருந்து ஒருவகை நீரை வெளிப் படுத்தி அந்நீரின் உதவியால் பாறைகளைத் துளைக்கின்றன. இவைகளுக்குப் பாறை கள் துளைக்கும் பிராணிகள் என்று பெயர்.

நீரோட்டங்கள் சமுத்திரங்களில் உண்டு. இந்த நீரோட்டங்கள் சமுத்திரங்களில் ஆறுகளைப்போல் சுற்றிச் சுற்றி ஓடிக் கொண்டிருக்கின்றன.

மிகக் குளிர்ந்த பிரதேசமாகிய பூமியின் வடகோடி தென்கோடிகளில் சமுத்திர நீர் உறைந்து பனிக்கட்டியாக இருக்கும். ஆனுல் இவ்விடங்களில் சமுத்திரத்தின் அடிப்பாகத்திலுள்ள நீர் உறையாமலே இருக்கும். மேற்புறத்தில் உறைந்திருக் கும் பனிக்கட்டிகள் காற்றினுலும் நீரோட் டங்களினுலும் தள்ளப்பட்டுத் தண்ணீரில் மிதந்துகொண்டு வரும். இப்பனிப் பாறை கள் மிகப் பெரியவையாய் மலை பெயர்ந்து வருவது போல் தோன்றும். இவை கப்பல் களுக்கு அபாயத்தை விளைவிக்கிறபடியால் கப்பலோட்டிகள் இப்பனிப்பாறைகளுக்கு மிகவும் அஞ்சுகிறுர்கள். இப்பனிப்பாறை கள் சமுத்திரத்தில் மிதந்து வரும்போது, ஒன்பதில் எட்டுப் பாகம் தண்ணீருக்குள் மறைந்தும், ஒரு பாகம்மட்டும் தண்ணீ ருக்குமேலும் தோன்றும். இவ்விதப் பனிப்பாறைகள் உத்தரமகா சமுத்திரத்தி லிருந்து மிதந்து வந்து அட்லாண்டிக் மகா சமுத்திரத்தின் வடபாகத்தில் அதிகமாகக் காணப்படுகின்றன. இப்பாறைகளினுல் அங்குக் கப்பற் சேதங்கள் நேரிட்டிருக்கிற படியால், அவ்விடத்தில் 'ஐஸ்பெட்ரல் சேர்விஸ்' என்னும் பெயருள்ள இலாகா ஏற்படுத்தப்பட்டு, அவ்வழியாகப் போகும்

கப்பல்களுக்குப் பனிப்பாறைகளின் தகவல்களை அறிவித்துக் கப்பல்களுக்கு ஆபத்து வராதபடி பாதுகாக்கப்படுகிறது.

இனி, சமுத்திரத்தி லிருந்து கிடைக்கும் பொருள்களைப் பற்றிக் கவனிப்போம். கடலில் இருந்து கிடைக்கும் பொருள்களில் முக்கியமானது மீன். மீன்களில் பெரும்பான்மை உணவுக்காகவும் சிறுபான்மை எண்ணெய் எடுக்கவும் உபயோகப்படுகின்றன. திமிங்கலத்தின் உடலிலிருந்தும் ஒருவித எண்ணெய் கிடைக்கிறது. இந்த எண்ணெயை உறையச் செய்து மெழுகுவர்த்திகள் செய்யப்படுகின்றன. சில மீன்களின் உரப்பான தோல்களி லிருந்து வச்சிரம் காய்ச்சப்படுகிறது. சுருமீனி லிருந்து கிடைக்கும் எண்ணெயைத் தோல் பதனிடுவதற்கு உபயோகிக்கிறார்கள்.

சமுத்திரத்தி லிருந்து கிடைக்கும் விலையுயர்ந்த பொருள் முத்து. இது ஒருவகைச் சிப்பியில் உண்டாகிறது. முத்துக் குளிப்போர் கடலில் குளித்துச் சிப்பிகளை வாரிக் கொண்டுவந்து ஒவ்வொன்றாக உடைத்து முத்துக்களைச் சேகரிப்பார்கள். முத்துச் சிப்பிகளின் ஓடுகளி லிருந்து பொத்தான் முதலிய சாமான்கள் செய்யப்படுகின்றன. கடல் ஆமைகளின் ஓட்டினுலும் பலவகைப் பொருள்கள் செய்யப்படுகின்றன. கடல் பஞ்சு ஒரு வியாபாரப் பொருள். நேர்த்தியான உயர்தரக் கடல் பஞ்சு ஆப்பிரிக்காக் கண்டத்தின் வட பாகத்தைச் சேர்ந்த அலெக்ஸாந்திரியாவுக்குச் சமீபத்தில், மத்தியதரைக் கடலில் கிடைக்கின்றது.

முத்துக்கு அடுத்தபடி, பவழமும் கடலில் உண்டாகும் பொருள்களில் விலையுயர்ந்தது.

கடலிலிருந்து உண்டாகிற முக்கியமான விளைபொருள் உப்பு. இது உஷ்ணப் பிரதேசத்தைச் சேர்ந்த கடற்கரையில் உண்டாக்கப்படுகிறது.

கடலில் சில கொடி வகைகள் பயிராகின்றன. இவற்றையும் சில தேசத்து மக்கள் உணவாகக் கொள்கிறார்கள். ஐரோப்பியர்கள் இந்தக் கடற்பாசிகளைத் தின்கிறார்கள். ஆனால், ஜப்பான் தேசத்தார் ஐரோப்பியர்களைவிட அதிகமாக இதைப் புசிக்கிறார்கள். இந்தக் கடற்பாசிகளி லிருந்து அயோடின்-பொட்டாஷ் என்னும் மருந்துகள் செய்யப்படுகின்றன.

போலியும் உண்மையும்

"தேவை அளவில் நிற்குமாறு மார்க்ஸியம் அறிவுறுத்துகிறது. அதில் எனக்கு வெறுப்பில்லை. ஆனால் அதனுள்ளே ஊடுருவிப் பாய்ந்திருக்கும் உலகாயதம் எனக்குப் பிடிப்பதில்லை....... தேவைக்குமேல் பொருள் சேமியாத நல்வாழ்வுக்கு ஆத்மார்த்தம் என்னும் கடவுள் நெறி வேண்டும். கடவுள் எங்கும் நீக்கமற நிறைந்திருப்பது. அதனுடன் தொடர்பு கொள்வோர் நெஞ்சம் எவ்வுயிர்க்கும் தீங்குசெய்ய நினையாது. பிற உயிர்க்குத் தீங்குசெய்ய நினையாமை தேவைக்கு மேல்பொருள் வேண்டாமைக்கு அடிகோல்வதாகும். பிற உயிரை வருத்தித் தேவைக்குமேல் பொருள் சேர்ப்பது கடவுள்நெறி நிற்பதாகாது. அது போலியே யாகும். போலியைக் கண்டு உண்மையைக் குறை கூறுவது தவறு."

—திரு. வி. க.

ஊன் உண்ணாமை

திரு. சீனி. வேங்கடசாமி.

இந்தக் கொள்கையை இந்து மதம் சமண சமயத்தினிட மிருந்து பெற்றுக்கொண்டது. பண்டைக் காலத்தில் தமிழர், முருகன் கொற்றவை முதலிய தெய்வங்களுக்கு ஆடு, கோழி முதலியவற்றைப் பலியிட்டு வணங்கியதோடு, ஊன் உணவையும் உட்கொண்டு வந்தனர். இதற்குச் சங்க நூல்களே சான்றாகும். ஆரியரும் பண்டைக் காலத்தில் இந்திரன், வருணன் முதலிய தெய்வங்களுக்கு ஆடு, மாடு, குதிரை முதலியவற்றைக் கொன்று பலியிட்டுவந்ததோடு, புலாலுணவைப் புசித்து வந்தனர்...... இதற்கு அவர்களுடைய வேதம், இதிகாசம் முதலிய நூல்களே சான்றாகும்...... சமண சமயத்தவருடைய கொள்கை நாடெங்கும் பரவிச் செல்வாக்கடைந்தபோது, இந்து மதத்தவரும் இக்கொள்கையைத் தமது கொள்கையாக ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று...... பௌத்தர்களும் ஊனுண்ணாக் கொள்கையுடையவர். ஆனால், அவர்கள் கொல்லாமையை மட்டும் வற்புறுத்திக் கூறி, ஊனுண்ணாமையை அதிகமாக வற்புறுத்தாது விட்டனர். சமணரோ இரண்டையும் வற்புறுத்தியதோடு, இவற்றைத் தமது மதத்தின் முதன்மையான கொள்கையாகவும் கொண்டனர்......

ஊன் உணவு அல்லாத 'காய்கறி' உணவுக்கு இப்போது சைவ உணவு என்று பெயர் கூறப்படுகின்றது. சமண சமயம் செல்வாக்குற்றிருந்த பண்டைக் காலத்திலே 'மரக் கறி' உணவுக்கு ஆருகத உணவு என்று பெயர் வழங்கியதாகத் தெரிகிறது. இலங்கையில் உள்ள தமிழர்கள் 'காய்கறி' உணவை இப்போதும் ஆரத உணவு என்று வழங்கிவருகின்றனராம். ஆரத உணவு என்பது ஆருகத உணவு என்பதன் திரிபு.

(சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் வெளியிட்டுள்ள 'சமணமும் தமிழும்' என்ற நூலிலிருந்து......)

இந்திய அரசாங்கம்

''போதி மூலம் பொருந்தி யிருந்து
மாரனை வென்று வீர னாகிக்
குற்றம் மூன்றும் முற்ற அறுக்கும்
வாமன்......''



திரு. ராஜன்

"ம் ம் ம்... பத்திரம்......



திரு. ராஜன்

......அ'......அவ்வளவுதான்!"



திரு. கண்ணபிரான்

கதிர்க்கரம் மறைத்துக்
கனைகடல் விளிம்பில்

கதிரவன் ஒடுங்கும்
காட்சியை நோக்கின்

அலைபுதிர் வாழ்வின்
அறிவொளி விளக்கம்

வலையாம் விணுரை
வயப்படா துணர்வீர்

மனிதன்—மந்திரம்—சடங்கு

திரு. ம. ரா. பூபதி, B. A. (Hons.)

மனிதன் இன்றுள்ள நிலையில் திடீரெனத் தோன்றிவிட வில்லை; உலகில் மனிதன் உலவட்டும் என்று உரைத்தாராம் இறைவன் ஒரு நாள்; உடனே தோன்றி உலவினனும் கட்டளைப்படி. இது கிறித்துவ வேதமான விவிலியம் விளக்கும் மனிதத் தோற்றம். ஆனல், உயிர் நூலோ, மனித விஞ்ஞானமோ இக் கட்டுக் கதையை ஏற்றுக்கொள்வதில்லை. மனிதன் வானத்திலிருந்து இறங்கினன். கடலிலிருந்து எழுந்தான்—என்று கூறி மக்களை ஏமாற்றிய காலம் இறந்துவிட்டது. அறிவும், ஆராயும் திறனும் உடைய இக்கால மக்கள் மனிதத் தோற்றத்துக்கும், மனித அறிவு வளர்ச்சிக்கும் இன்று விஞ்ஞானத்தை நாடுகின்றனரே ஒழிய, வீண் நம்பிக்கைகளின் மேல் நின்று, அச்சத்துக்கும் அறியாமைக்கும் வித்திடும் சமய நூல் நோக்கி ஓடுவதில்லை.

இருபதாம் நூற்றுண்டில் வாழ்கின்ற மனிதனுடைய அறிவு பழங்கால மனிதனுடைய அறிவைவிடப் பண்பட்டது, உயர்ந்தது, பரந்தது என்பதில் சிறிதும் ஐயம் இல்லை; ஆனல் இந்த அறிவு, எரிமலையிலிருந்து தீக் கிளம்புவது போல, திடீரென்று வளர்ந்துவிட்ட தன்று; படிப்படியாகக் காலப்போக்கில், வாழ்க்கையில் அடிபட அடிபட, அணு அணுவாக வளர்ந்தது. பழங்கால மக்கள் வாழ்வில் எத்துணையோ மூடச் சடங்குகள், அறிவுக்குப் பொருத்தமற்ற பழக்க வழக்கங்கள் காணப்படுகின்றன; நாகரிகம் வளர்ந்துள்ள இக்காலத்திலேயே, பட்டப் பகலிலே, பன்னிரண்டு மணி வெயிலிலே, நடுத்தெருவிலே, நாணத்தின் திருவுருவங்களான தமிழ் நங்கையர் சேலைகளை நீக்கிவிட்டு, வேப்பந் தழையைச் சுற்றிக் கொண்டு, பக்தி யாட்டம் போடுவதைப் பார்க்கிறோம்; பி. ஏ., எம். ஏ., படித்தவர்கள், முட்டாள் தன்மைக்கு முற்றுப் புள்ளி வைத்துவிட்டோம் என்று எண்ணிக்கொண்டுள்ளவர்கள், ஊருக்கு அறிவூட்டும் உத்தமர்கள், சட்டத்தின் எல்லையை எட்டிப் பிடித்தவர்கள், பார்ப்பார் நகைப்பரே என்று பதுங்கிப் பதுங்கித் தேர் இழுப்பதை—பதினறு இலை விரித்து, பத்து வகைக் கறிவைத்து, இறந்தவர்க்குத் (இருப்பவர்க்கல்ல!) 'திவழ்சம்' வைப்பதைக் காண்கிறோம்; பனையாத்தாளின் நினைவில் இடம் பெற, அரசாங்கத்தின் கண்ணில் மிளகுப் பொடி தூவி, ஆடுகளைக் கடத்திச் சென்று, கோவிலைக் கொலைக் களமாக்கும் அருள்செயலைப்(!) பார்க்கிறோம். பக்தி இருள் நீக்கிப் பகுத்தறிவு கோலோச்சும் இந்நாளிலேயே இவை நடக்கின்றன என்றல், முற்கால மக்கள் வாழ்வில், கல்வியைக் கனவில் கூடச் சுவைத்தறியாத மக்கள் வாழ்வில், மூடப் பழக்க வழக்கங்கள் எவ்வளவு முனைப்புடன் இருந்திருக்கும் என்பதை விரிக்கவேண்டிய தில்லை.

மனித அறிவுக்கு எட்டாத பொருள்கள்—உள்ளத்தின் உணர்வுக்கும் உட்படாத ஆற்றல்கள்—எண்ணிறந்தன உலகில் மறைந்துள்ளன என்ற எண்ணம்

மனிதனுடைய இரத்தத்திலேயே ஊறி வந்துள்ளது. இத்தகைய பேராற்றல்களைக் (Super human powers) குறித்து மக்கள் நெடுங்காலமாகச் சிந்தனை செய்தனர்; சிலர் அவற்றை விளக்க முனைந்தனர்; வேறு சிலர் அவற்றை அடக்கி யாள முடியுமா, பணியாட்க ளாக்கி ஏவல் இட இயலுமா, அப்படி ஏவுவதன்மூலம் எதிரி களை அழிக்க முடியுமா என்ற அற்புத- ஆனால், அணுவளவும் பயன்படாத- ஆராய்ச்சியில் இறங்கினர்; இன்னும் சிலரோ, அப் பேராற்றல்களைக் காக்காய் பிடித்துக் காரியத்தைச் சாதித்துக்கொள் ளும் குள்ளநரி வேலையில் ஈடுபட்டனர்; இத்தகைய செயல்களுக்கே மந்திரங்கள் என்றும், சமயம் என்றும் பெயர்கள் வழங்கலாயின. மந்திரம் முதலிய மூட வழக்கங்களும், சமயமும் மனித முன் னேற்ற வரலாற்றில் இரு வேறு பகுதிகள். மூட வழக்கங்கள் இங்கே முடிகின்றன. சமயம் எங்கே தளிர்க்கின்றது என்பதை அறுதியிட்டு உரைத்தல் இயலாது.

எடுத்துக் காட்டாக ஒன்றைக் காண லாம். மக்கள் முதலில் இடி, மின்னல் முதலியவற்றை இறைவனாக எண்ணி வணங்கினர். ஆனால், காலப் போக்கில் இந்த நம்பிக்கை மறைந்துவிட்டது. அறிவு வளர வளர, விஞ்ஞானம் முன்னேற முன் னேற, அன்பே ஆண்டவன், அன்பே இறைவன் என்ற கொள்கைகள் முளைத் தெழுந்தன. இடியிலிருந்த சமயம் அன்புக்குக் குடி போனது; என்றாலும், இடிச் சமயம் முடிவுற்ற இடம் எது, அன்புச் சமயம் அரும்பிய இடம் என்பது நமக்கு. அவ்வளவாக விளங்கவில்லை, சில திங்களுக்கு முன் பக்ரா-நங்கல் அணையைத் துவக்கிவைத்த இந்திய முதல் அமைச்சர் திரு. நேரு அவர்கள், அந்த அணையைச் சுட்டி, "இதுவே கோவில்" என்றார். ஆகவே அன்பிலிருந்து சமயம் இப்போது அணைக்கட்டுக்குத் தாவி யுள் ளது.

இங்ஙனம், சமயம் அடிக்கடி, "குருவிக் காரக் கும்பல்" போல, தன் இருப் பிடத்தை மாற்றிக்கொண்டே இருந்தா லும், மூடப் பழக்கவழக்கங்கள்மட்டும் முற்றிலும் அதைவிட்டு நீங்கிய பாடில்லை. குரங்குப் பிடி, உடும்புப் பிடி என்பவை எல்லாம் மூடப் பிடியான அட்டைப் பிடிக்கு அப்புறந்தான். இன் றும், உலகின் தலைசிறந்த சமயங்கள் என்று பேர் பெற்றவற்றில் எவ்வளவோ மண் மூடிப் போகவேண்டிய கண் மூடிப் பழக்கங்கள்' வேரோடி இருக்கின்றன.

ஏற்கெனவே உணர்த்தியபடி, இதுவே சமயம் என்று இரண்டுக்கும் இடையே எல்லைக்கோடு வரைந்து, பிரித்துக் காட் டல் இயலாது. ஆனால், இரண்டுக்கும் வேறுபாடு உள்ளது என்பதுமட்டும் உறுதி. மனிதன் தன் தேவைகளை எந்த வகையிலேனும் பெற்றுவிட வேண்டும் என்று முயல்கிறான்; அதற்காகக் கெஞ்சு கிறான், அல்லது மிஞ்சுகிறான்; கட்டளை இடுகிறான், அல்லது காக்காய் பிடிக் கிறான்; எட்டினால் குடுமியைப் பிடிக் கிறான்; இல்லையேல் காலைக் கழுவுகிறான். எட்டினால் குடுமியைப் பிடிக்கும் வேலை தான் மந்திரம். சிலவகைச் சொற்களை யும், சடங்குகளையும், கோலங்களையும் கொண்டு, பேராற்றல்களைக் குனியவைக்க மனிதன் செய்யும் முயற்சியே மந்திரம். சமயம் காக்காய் பிடிப்பது; வாலைக் குழைப்பது; தாளம் தட்டுவது; காலைக் கழுவது.

போலி மந்திரம் (Imitative Magic)

மந்திரங்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்; அவற்றில் ஒரு வகை போலி மந்திரம் (Imitative Magic) என்பது. உலகில் இன்றுள்ள பல மந்திரங்களும், சடங்குகளும் இப் போலி மந்திர வகை யைச் சேர்ந்தவையே. இவை இல்லாத இடமே உலகில் இல்லை எனலாம். காரண காரிய ஆராய்ச்சியில் விளைந்த மனக்

குழப்பத்தை அடிப்படையாக வைத்து உருவாக்கப்பட்டவை இப் போலி மந்திரங்கள். வேண்டியபோது மழையை வர வழைப்பதற்காக, மனிதன் செய்யும் மழைச் சடங்கு போலி மந்திர வகைக்குச் சிறந்த எடுத்துக்காட்டு. மழைக் காட்சியைச் செயற்கையாக உருவாக்குவதன் மூலம், மழையைப் பெய்விக்க முடியும்! டாரச் நீர் எதிர்ப்பாட்டில் (Torres Strait) உள்ள மர்ரே தீவில் (Murray Island) செய்யப்படும் மழைச் சடங்கைப் பற்றித் திரு. ஏ. சி. அடன் (Mr. A. C. Haddon) குறித்துள்ளார். மரத்திலிருந்து கழித்த தழைகளோடு, கற்சிலை ஒன்று நிலத்துக்குள் புதைக்கப்படும்; பிறகு, அந்தக் கல்லறையின்மீது தண்ணீரைக் கொட்டுவார்கள்; கடல் கிளிஞ்சல்களையும் பல வகை இலைகளையும் கொண்டுவந்து அதனை மூடுவார்கள். இவை தண்ணீரைக் குறிக்கும். பின் கற்சிலையின் கல்லறையைச் சுற்றித் தென்னங் கீற்றுகளை வெட்டி நட்டு வைப்பர்; இவை நீருண்ட கரும்புயலைக் குறிப்பன. அதன்பின், பற்றி எரியும் பந்தம் ஒன்றைக் கையில் பிடித்துக் கொண்டு அங்கும் இங்கும் வீசுவர்; இது மின்னலின் தோற்றம்; அதே சமயம் மூங்கிலால் ஆன கருவி ஒன்றை அசைத்து ஒலிப்பர்; இஃது இடியைக் குறிப்பது. இப்படியே மழையின் பல்வேறு காட்சிகளையும் போலியாக அமைப்பதன் மூலம் மக்கள் மழை பெய்யும்படி பணிப்பர்; இவ்வளவு சடங்குகளும் தனக்காகச் செய்யப்படுகின்றன என்பதை அறிந்தும், மழையால் பொழியாமல் இருக்க இயலுமா?

நம் நாட்டின் சில அறிவுப் பிழம்புகள், நீராவி புயலாக மாறி மழை பொழிகிறது என்ற அடிப்படை உண்மையைக்கூட அறியாதவர், அறிந்தும் உணராதவர், உணர்ந்தும் மற்றவரை இருட்டிலேயே ஆழ்த்திவைக்கும் எண்ணம் உடையோர்- கட்டை வண்டி ஒன்றில் காணச் சகிக்காத உருவம் ஒன்று அமைத்து, ஈத்த மரக் கீற்றுக்களை நாற்புறம் கட்டி, பிணத்துக்கிடும் மஞ்சள் மலரைத் தூவி, அழுகை ஆலாபனத்துடன், உலகே பற்றி எரிவது போல, வாயிலும் வயிற்றிலும் அறைந்து கொண்டு, வீதி வீதியாக இழுத்துச் சென்று, கொளுத்தி, மழை வரும் வரும் என்று வானத்தை அண்ணாந்து பார்க்கும் அருமைச் செயலையும் மேற் கூறிய சடங்கோடு சேர்த்துவிடலாம்.

உடல் நடுங்க வைக்கும் மற்றொரு போலிச் சடங்கு மெக்சிகோ (Mexico) மக்களான அச்டெக்குகளால் (Aztecs) கையாளப்பட்டது. இந்தச் சடங்கு புது விளைச்சலுக்காகக் கொண்டாடப்பட்டது; க்சைப் (Xipe) என்ற கடவுளுக்கு உரியது. இந்த விழாவின்போது, வல்லுடல் படைத்த இருவர் போரிடுவார்கள்; போரில் எவனாவது ஒருவன் தோற்று விடுவான்; உடனே, வென்றவன், தோற்றவன் உயிரோடு இருக்கும் போதே, அவன் தோலை உரித்துத் தன் உடல் மேல் அணிந்து கொள்வான். விழாச் சடங்கு முடியும் வரை, அவன் இப்படி குருதி ஒழுகும் மனிதத் தோலை அணிந்திருந்து, விழா முடிவில் வீசி எறிந்துவிடுவான். இப்படித் தோலை அணிந்துகொள்பவன் மழைக் காலப் பயிரைக் குறிப்பவன்; மழைக்காலப் பயிர் இறந்த பயிர்போல் வாடி இருக்கும்; ஆனால் தீய்ந்துவிடாது; உள்ளே உயிர் இருக்கும்; ஆகவேதான் உயிர் உள்ள மனிதன் இறந்தவன் தோலைப் போர்த்திக்கொள்ளும் சடங்கு தோன்றியது. விழா முடிந்ததும், அந்தத் தோலைக் கழற்றி வீசி எறிவது, புது விளைச்சலுக்குத் துணை செய்வதைப் புலப்படுத்தும்.

உணவுப் பிராணிகளின் இனப் பெருக்கத்துக்காகப் பழங்கால வேடுவர்களால் உலகமெங்கும் பல்வேறு சடங்குகள் நிகழ்த்தப்பட்டன. இச்சடங்குகள் பெரும்

பாலும் இனப் பெருக்க நிகழ்ச்சியைப் போலச் செய்து காட்டும் போலிச் சடங்காகவே இருந்துள்ளன. வட அமெரிக்க இந்தியரால் நடத்தப்படும் எருமைச் சடங்குகளும் இத்தகையவே. ஆத்திரேலியாவில் (Australia) வாழும் பழங்குடி மக்களில் சிலர் தாம் செய்கின்ற சமயச் சடங்குகளில், உணவிற்காகப் பயன்படும் குறும்புழு (grub) வின் வாழ்க்கை வரலாற்றைக் குறித்துக் காட்டுகின்றனர். காரியத்தை அல்லது விளைவைக் குறித்துக் காட்டிச் சடங்குகள் இயற்றுவதன் மூலம், காரணத்தைத் தூண்ட மனிதன் செய்யும் முயற்சிகளில் மேற்கூறியவை அடங்கும். ஆத்திரேலியப் பழங் குடியினரிடம் இன்னொரு வகையான மூடச் சடங்கையும் காணலாம். ஒல்லங்க்குவா (wollunqua) என்று அவர்களுக்கு ஒரு பாம்புக் கடவுள் உண்டு. அக் கடவுளுக்கு இருப்பிடம் மர்ச்சிசான் மலைத் தொடர் (Murchisan Range). இப் பாம்புக் கடவுளின் உள்ளத்தை இன்புறுத்துவதற்காகச் சிலர் ஒரு நீண்ட மண்மேட்டில் அதன் உருவத்தை அமைப்பார்கள்; மற்றவர்கள் பாம்பு மனிதர்கள் போல் உடையணிந்து கொண்டு, மற்றச் சாதாரணப் பாம்புகளைக் குறித்து மந்திரங்களை ஓதுவார்கள்; இச் சாதாரணப் பாம்புகள் அம் மக்களின் முக்கிய உணவுப் பிராணி. அவை தமக்கு வேண்டிய அளவில், இடையருமல் கிடைப்பதற்கே, மேற்கூறிய சடங்குகளை இயற்றுகிருர்கள்.

தொத்து மந்திரம் (Contagious Magic)

போலி மந்திரத்தோடு மிகவும் தொடர்பு உடைய மற்ருெரு மந்திரமும் உண்டு. அதற்குத் தொத்து மந்திரம் (Contagious Magic) என்று பெயர். ஒரு பொருளின் ஓர் உறுப்பை அல்லது பகுதியை வைத்துக்கொண்டு, அப் பொருள் முழுவதையும் ஒருவன் தன் ஆணைக்கு அடங்கி நடக்கச் செய்வதே தொத்து மந்திரம். இது நன்மைக்கும் வேலை செய்யும்; தீமைக்கும் தொண்டாற்றும்! ஒருவன், மனிதனுக்கு மேலான பேராற்றல்களோடு (Super human powers) உடல் தொடர்பு கொண்டு, அவற்றின்மூலம் நன்மைகளையும் பெறலாம் (இவை யனைத்தும் வெறும் நம்பிக்கைகளே!) அல்லது வேண்டாத பகைவனின் சில உடல் பகுதியை (மயிர் முடியாகவும் இருக்கலாம்!) வைத்துக் கொண்டு மந்திரத்தின்மூலம் அவனுக்குக் கெடுதியையும் உண்டு பண்ணலாம்.

அவாயில் (Hawai) உள்ள சில மக்கள் இனத் தலைவர்கள் ஒவ்வொருவரும் தமக்கென்று தனித் தனியே ஒவ்வொரு களாஞ்சி (எச்சில் உமிழும் தட்டு) வைத்திருப்பர்; அதில் உள்ள எச்சில் முதலியவற்றை, அத் தலைவர்களுக்கு மிக அணுக்கராக இருக்கும் அடியவரே நாள்தோறும், ஒருவரும் அறியாமல் எடுத்துச் சென்று, தண்ணீர் மட்டத்துக்கு அடியில் கொட்டுவது வழக்கம். காரணம்? அந்த எச்சில் வேறு எவரிடமாவது சிக்கிக் கொண்டால், அதை வைத்துக்கொண்டு தலைவர்களுக்கு எதிராக அவர்கள் பகைவர்கள் மந்திரங்கள் ஓதிவிடுவார்கள் என்ற அச்சந்தான். இங்கிலாந்து நாட்டில் கூட, சில காலத்துக்கு முன் வரை, ஒரு முட்டாள் நம்பிக்கை மக்கள் உள்ளத்தில் குடிகொண் டிருந்தது. பெண்டிர் தலைவாரிஞல். சீப்பில் சிக்கிக்கொள்ளும் தலைமயிரைப் பலகணி வழியாக வெளியே எறியமாட்டார்கள்; அப்படி எறிந்துவிட்டால், பறவைகள் அவற்றை எடுத்துக் கொண்டுபோய்த் தம் கூடுகளை அமைத்துக்கொள்ளும் என்றும், அதனுல் அத் தலை மயிருக்கு உரியவருக்குத் தீராத் தலைவலி உண்டாகும் என்றும், பறவையின் கூட்டைக் கண்டுபிடித்து, அதில் உள்ள மயிரை வெளியில் எடுக்கும்வரை, தலைவலி நீங்காது என்றும் அவர்கள் எண்ணினுர்கள்.

ஒருவருடைய பெயரை வைத்துக் கொண்டு, அதன்மீது மந்திரம் உரு வேற்றுவதன் மூலம், அவரை ஆட்டி வைக்கும் மந்திரமும் தொத்து மந்திரமே ஆகும். ஒருவனுடைய பெயர், அவனு டைய தலைமயிரைப் போலவே, அவன் உடலோடு நெருங்கிய தொடர்பு உடை யது!

எகிப்தில் வழங்கும் இசிச் (Isis) கதை ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. இசிச் என்ப வள் பெருங் கடவுளான "ரா" (Ra) என்ப வரின் உண்மைப் பெயரை எப்படியேனும் அறிந்துகொள்ளவேண்டும் என்று விரும் பினாள்; அதற்காக, ராவின் எச்சிலை எப் படியோ சேர்த்து ஒரு பாம்பை உருவாக்கி அனுப்பினாள்; அப் பாம்பு ராவைக் கடித் தது; வலியால் பெரிதும் வேதனை அடைந்த ரா பாம்புக் கடியின் தொல்லை யைத் தீர்க்குமாறு இசிசை வேண்டினார். இதுதான் ஏற்ற காலம் என்று எண்ணிய இசிச், ரா தன் உண்மைப் பெயரை அறி வித்தால் ஒழிய வேதனையைப் போக்க முடியாது என்று கூறினாள். வேதனையால் துடித்துக் கொண்டிருந்த பெருங்கடவுள்(!) ராவும் அதற்கு இணங்கித் தம் உண்மைப் பெயரை இசிசுக்கு அறிவித்தார். இதன் விளைவாக ரா, இசிசின் மந்திரத்துக்கு அடங்கிக் காலம் கழிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது!

குறிப்பில் இறப்பு (Death by Suggestion)

ஒரு மனிதனுடைய பெயரை அறிந்து கொள்வது, அதைப் பயன்படுத்தி மந் திரம் உருவேற்றுவது ஆகியவற்றின் மூலம், ஒருவனை அடக்கிவிடமுடியும் என்ற நம்பிக்கை மனித உள இயல் வர லாற்றில்(history of human psychology) இடம்பெற்று இருந்துள்ளது. தம் பகைவர் மடிந்துவிட வேண்டும் என்பதற்காகத் தம் கடவுள்களை நோக்கி மந்திரம் சொல் பவர்கள் மேற்கூறிய செய்திக்கு எடுத்துக் காட்டாக இலங்குபவர்கள்! அநீதியின் அடிப்படையில் எழும் மனவெறுப்பு உலகம் எங்கும் காணப்படுகிறது. சில காலத்துக்கு முன்வரை, பகைவரைப் போல மெழுகுப் பதுமைகளைச் செய்து, அவற்றிற்குப் பகைவர் பெயர்களைச் சூட்டி (இதுவே இன்றியமையாத செயல்!) அவற்றை எரிக்கின்ற – அல்லது ஆணி களாலும் ஊசிகளாலும் உடல் முழுதும் குத்திப் பாழாக்குகின்ற - வழக்கம் இருந் துள்ளது.

பகைவர்களைத் தங்கள் விருப்பம்போல் ஆட்டி வைக்க-அல்லது-அவர்கள் உயி ரைப் போக்கவே இந்த முறை கடைப் பிடிக்கப்பட்டது. இந்த முறையை நாம் "தொலை விருப்பு இறப்பு" (Telepathic Death) என்று குறிப்பிடலாம். மேற்கு ஆப்பிரிக்காவில் வாழும் சில இன மக் களில், மேற்கூறியபடி மந்திரத்துக்கு ஆளானவன் மந்திரவாதியைத் தனியாக அணுகி, அவனுக்கு வேண்டிய அளவு அவன் விரும்பும் பொருளைக் காணிக்கை யாக அளித்துத் தன்னைப் போன்ற மெழுகு உருவத்தின்மேல் குத்தப்பட்ட ஆணி களைப் பிடுங்கி எறிந்துவிடும்படி வேண் டிக்கொள்வான்; இதன் மூலம் பேராற்றல் களின் பிடியிலிருந்து விலகிக்கொள்ள லாம் என்பது அம்மக்களின் ஆழ்ந்த நம்பிக்கை!

தொத்து மந்திரத்தோடு தொடர்புடைய வேறு பல சடங்குகள் உலகின் பல பகுதி களிலும் காணப்படுகின்றன. மனித இயல் புக்கு அப்பாற்பட்ட பேராற்றல்களோடு நேர்த் தொடர்பு வைத்துக்கொண்டு, நன்மைகளைப் பெற மனிதன் எத்தனையோ முறைகளைக் கையாண்டு இருக்கிறான். இங்கிலாந்து நாட்டில், இன்னும் பல "விருப்பக் கேணிகள்" (Wishing Wells) இருக்கின்றன. அக் கேணிகளில் (கிணறு களில்) ஒன்றில் எவராவது ஓர் ஊசியைப்

போட்டுவிட்டு எதையாவது நினைத்துக் கொண்டால், அது விரைவில் கைகூடும் என்பது அங்கு வாழும் மக்களில் சிலருடைய நம்பிக்கை. இந்த நம்பிக்கை இன்று ஒரு பெரிய சூதாட்டமாகவே மாறிவிட்டது எனலாம்; என்றாலும் இது நெடுங்காலத்துக்கு முன்னமேயே, மக்கள் உள்ளத்தில் முளைத்துவிட்ட ஒரு நம்பிக்கை! இவ் விருப்பக் கேணிகள் இன்று கிறித்துவத் துறவியரின் பெயர்களால் அழைக்கப்படுகின்றன எனினும், ஒரு காலத்தில் இவை காட்டுமிராண்டிக் கடவுள்களின் இருப்பிடங்களாக – மூலத்தானங்களாக-விளங்கியவையே. மிகவும் விலை குறைந்த ஊக்கு அல்லது ஊசியை அக் கிணறுகளில் ஒன்றில் போட்ட உடனே, போடுபவருக்கும் தெய்வங்களுக்கும் இடையே நேர்த் தொடர்பும், செய்திப் போக்குவரவும் ஏற்பட்டுவிடுகின்றன!

எனவே, ஒரு காலத்தில் மூடநம்பிக்கைகளே மனித இனத்தில் செல்வாக்குடன் ஆட்சி நடத்தின என்பது வெளிப்படை; ஆனால் பிறநாடுகளில், முக்கியமாக மேலை நாடுகளில், இம் மூடநம்பிக்கைகளும், அவை காரணமாகச் செய்யப்பட்ட சடங்குகளும் விரைவில் மறைந்துவிட்டன. ஆனால், ஒரு சில நாடுகளில் மட்டும்- முக்கியமாக நம் நாடுபோன்ற கீழை நாடுகளில்–கல்வி வளரும் வேகத்தில் அவையும் கூடவே வளர்ந்துவருகின்றன; மழை இல்லை என்றால், பசுகோவிந்தம் பாடுகிறோம்; அல்லது தீயை வளர்த்து யாகம் என்ற பெயரால் எதையோ செய்கிறோம். ஊரில் வாந்திபோதி என்றால், உடுக்கையடித்துப் பூசை செய்கிறோம்; பெரியம்மை உண்டானால், மாரியம்மனுக்குத் திருவிழா; கோழிப் பொங்கல். பிள்ளை இல்லை என்றால், காசி, இராமேச்சுவரம்; இல்லை என்றால் அரசமரத்து அடிசுற்றிக் காத்துக் கொண்டிருக்கிறோம். இவை எல்லாம் எதை உணர்த்துகின்றன ? நம் அறிவின் மேலேயே நமக்கு நம்பிக்கை இல்லை என்பதைத்தான். நம் அறிவின்மீதே நமக்கு நம்பிக்கை இல்லாதபோது, அறிவுக்கு அப்பாற்பட்ட-அறிவால் அறிய முடியாத-அறிவுக்கு எதிரிடையான – அறிவை அறவே அழிக்கின்ற – பெரும்பேர் ஆற்றல்களில் நமக்கு எங்கிருந்துதான் நம்பிக்கை முளைத்துவிட்டதோ தெரியவில்லை. வயிற்றுப் பிழைப்புக்காகத்தான் இந்நம்பிக்கைகளை வளர்த்துவருகிறோமா என்பது ஆய்ந்து முடிவுகாணவேண்டிய செய்தி.

—*—

டாக்டர் மு. வரதராசனார்

எழுதிய

'பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை'

என்னும் நூல்

கலைக்கதிரில் தொடர்ந்து வெளிவரும்.

கலைக்கதிரில் வெளியாகும் பகுதிகளைத் தனியே பிரித்தெடுத்து நூலாகக் கட்டிடம் (பைண்டு) செய்துகொள்ள வசதியாக வெளியிடுகின்றோம்.

இன்றே சந்தாதாரராகச் சேருங்கள்.

பாடும் மீன்

திரு. கே. அமரசிங்கம்

ஈழத் தமிழகம் இரண்டு பிரிவுகளை உள்ளடக்கி இருக்கிறது. ஒன்று யாழ்ப் பாணத்தைத் தலைநகராக உடைய வட மாகாணம். மற்றது மட்டக்களப்பைத் தலை நகராக உடைய கிழக்கு மாகாணம். வங் காளக் கடல் மட்டுநகர் நிலப்பரப்பை உட் புறமாய்க் குடைந்து இருபத்தைந்து மைல் தூரம் வரை நுழைந்து நெளிந்து செல் கிறது. இந்நீர்ப் பரப்பு மட்டுநகர் மண் மாதாவை அழகொடு திகழவைக்கும் அணி கலனாக விளங்குகிறது. இவ் வாவியில் சில இடங்களில் நீரின் அடித்தளத்தி லிருந்து இன்னிசை எழுகின்றது. இதைப் பாடும் மீனின் ஒலியென்று இங்குள்ள மக் கள் சொல்லி வருகிறார்கள்.

நீலவானிலே நிறைமதி நிலாப் பொழி யும் காலங்களிலே வாவி வெள்ளி உருக்கி வார்த்த நீர்போன் றொளிரும். இக்காலத் தில் ஓடமேறி வாவிமீது உல்லாசமாகச் செல்லும்போது இது பூவுலக சுவர்க்கமோ என்று ஐயுற்று மெய்மறந் தின்பமுறும்படி ஏற்படும். இச்சமயம் ஓடம்செலுத்தும் ஊன்றுகோலை நீருள் ஆழ்த்திக் காதருகே அணைத்தால் மொழியால் வெளியிட ஒண்ணு இனிய இசையைக் கேட்டு இன் புறலாம். இவ் வின்னிசையைப் பருகிச் சுவைத்தவர்கள் இவ் விசையை எதனுட னும் ஒப்பிட்டுக் கூற இயலாதவர்களாக இருக்கிறார்கள். இசை உணர்ச்சியின் நிழலே படாத ஒருசிலர் இதை ஈயின் கிணு கிணுப்பிற்கும் தேனீக்களது முணுமுணுப் பிற்கும் ஒப்பிடுகிறார்கள். இசைச் செவி டர்களாகிய இவர்கள் இப்படிக் கூறுவது இயற்கையே. உண்மையில் சில ஒலிகள் வீணையின் தந்திகளை மெதுவாக நெருடி விட்டதும் எழும் இசைபோன் றிருக்கும். சில ஒலிகள் மெல்லிய பட்டுத்தாளை வாயில்வைத்து மெதுவாகக் காற்றை ஊதும்போது பிறக்கின்ற ஒலிபோன் றிருக் கும். சிலர் இவ்வொலியை யிட்டுப் பிழை யான எண்ணம் கொள்கிறார்கள். இதற்குக் காரணம் இவர்கள் வாவிக் கரைகளில் ஒலி செய்யும் தவளைகளின் ஒலியில் தம் கவ னத்தை இழந்துவிடுவதே யாகும். திரு. ஸ்ரான்லிகிரீன் என்பவர் இவ்விசையை மிக நுணுக்கமாக ஆராய்ந்து இவ்வொலி யூதர்களின் ஹார்ப் (Harp) என்ற 'வீணை' யின் ஒலியைப்போன் றிருக்கிறது எனக் கூறுகிறார்.

வாவியின் அடித்தளத்தில் இருந்து எழும் ஒலி மேல்பரப்பில் ஒன்றிக்கொண்டு வித்தியாசமான பல இன்னிசைக் கருவி களில் எழும் ஒலிகள்போல் கேட்கின்றன. இவ்வொலியை ஏமாற்று வித்தை எனக் கூறிவந்தவர்கட்கும், கூறிவருகிறவர் களுக்கும் விஞ்ஞானக் கலை வாய்ப்பூட்டுப் போட்டுவிட்டது.

அமெரிக்காவைச் சேர்ந்த யேசுசபைத் துறவிகளான லாங் அடிகளாரும் மொருன் அடிகளாரும் வாவியின் மேலுள்ள பாலத்தின் நடுப்பாகத்திலிருந்து

நீருள் எட்டடி ஆழத்திற்கு மைக்கிரா போனை (microphone) ஆழ்த்தி அதன் மூலம் பாடும் மீனின் ஒலியைப் பெருக்கு வித்து இசைத் தட்டில் ஒலிப்பதிவு செய்த போது அதில் பாதிப்பகுதி காற்றின் அசை வொலியால் சேதமாகிவிட்டது. பின்னர் வேறு ஒரு மைக்கிராபோனை (microphone) நீருள் ஆழ்த்தி அதில் ஒரு ஒலிபரப் பியை (loud speaker) இணைத்து எட்டு நிமிட காலத்துள் மேற்படி ஒலியை இசைப் பதிவு செய்வதில் வெற்றி கண்டார்கள்.

இந்த ஒலிப்பதிவைக் கேட்டபின் இது தவளைகளின் ஒலியா, அல்லது பாடும் மீனின் ஒலியா என்பதைத் தீர்மானித்து விடலாம். இதில் நான்கு வித்தியாசமான ஒலிகள் இருப்பதை அவதானிக்கலாம். மிகக் கவனமாக இருந்தால் ஐந்தாவது ஒலியையும் கேட்கலாம். ஆருவது ஒலி யும் பதிவு செய்யப்பட்டது. இவ்வொலி யில் சலனம் ஏற்பட்டு உண்மையான ஒலிக்கு மாறுபடக் கேட்டதால் அதை நீக்கிவிட்டார்கள்.

இந்த ஒலியைப் பிறப்பிப்பது யாது?

இதையிட்டுப் பலர் பலவகையான கருத் துக் கொண்டுள்ளார்கள். சாதாரண மீன் பிடிகாரர் இதை ஊரி (mull) பாடுதல் என்றும் வேறு சில மீன்பிடிகாரர்கள் ஒரு அடி நீளத்திற்கு மேற்பட்ட ஒருவகை மீனின் ஒலியென்றும் நீரினுள் கற்பாறை களின் அயலில் வசிக்கும் கெட்டியான ஓடுகளையுடைய பிராணிகளின் உடம்பில் நீர் உராய்ந்து செல்லும்போது ஏற்படும் ஒலியென்றும், இன்னும் சிலர் மீனுமல்ல ஓடுடைய பிரயாணியுமல்ல, வாவியின் அய லில் உள்ள சிறு பிராணிகளின் ஒலி வாவி நீரில்பட்டு உண்டாகும் எதிரொலி யென் றும் கூறுகிருர்கள்.

இது எதனுடைய ஒலியாக இருந்த போதிலும் இதையிட்டு மட்டுநகர் மக்கள் பெருமையடைய வேண்டியவர்களே. ஆனுல் இது நீரில் வாழும் பிராணியின் ஒலியென்பதில் எவ்வித ஐயத்திற்கும் இடமில்லை.

எமர்சன் டெனெனட் என்ற ஐரோப்பி யர் இலங்கையைப்பற்றி எழுதிய புத்தகத் தில் பாடும் மீன் என்பதுபற்றிக் குறிப்பிடு கையில் ஷெல் விதியை (Shell theory) ஆதரிக்கிருர். இவ்வொலி வாவியின் அடித் தளத்திலிருந்து எழுகிறது ஆகையால் இது வாவியின் கரையில் உள்ள பிராணிகளின் எதிரொலி யன்று. இவ்வொலி கேட்கக் கூடிய அளவு சத்தமுடையதாய்த் தெளி வாக இருக்கிறதாகவும், இது போன்ற ஒலி இந்தியாவின் மேற்குக் கரைகளிலும் சிறப்பாகப் பம்பாய்த் துறைமுகத்துள்ளும் தென்னமெரிக்காவி லுள்ள சில்லி மாகா ணத்தைச் சேர்ந்த "கல்டெற" என்ற இடத்தின் கடற்கரைப் பகுதிகளிலும் இது போன்ற ஓசைகள் கேட்கின்றதாகவும் கூறுகிருர். இவர் ஊரி (mollusca) பாடு கின்றதே யன்றி மீன் பாடவில்லை, ஊரி களே பாடக்கூடியன என வற்புறுத்து கிருர். 1826-ல் ராபர்ட் கிராண்ட் என்பவ ரும் எடின்பரோ கலைஞானக் கழகத்திற்கு டெனென்ட் விதியை ஆதரித்து எழுதினுர்.

(கருமுரல் போன்ற சில வாவி மீன்களைப் பிடித்து வெளியிலெடுத்தவுடன் அவை சத்தம் செய்வதை நேரில் கேட்கலாம்) பிரீஸ்ட் என்பவர் சில மீன்களைப் பிடித்து வெளியே எடுத்தவுடன் சத்தம் செய்கின் றன. ஆகையால் ஒலி செய்பவை மீன் களே எனக் கூறுகின்றுர். பிடித்து வெளியே எடுத்தவுடன் சத்தம் செய்பவை உள்ளிருக்கும்போதும் சத்தம் செய்யலாம்.

பௌலர் என்பவர் இது ஓடு உடைய பிராணிகள் நீரோட்டத்தோடு செல்கை யில் உடல் உராய்வதால் உண்டாகும் ஒலி யெனக் கூறுகிருர்.

ஸ்டான்லி கிரீன் என்பவர் பௌலருடைய விதியை முற்றாக மறுக்கிறார். டெனன்ட் என்பவர் குறிப்பிடுவதுபோல் பாடும் மீனின் ஒலி ஒரு பாறைக்கல்லின் (யானைக்கல் என்றழைக்கப்படுகிறது) அயலில் மட்டும் கேட்கவில்லை; மட்டு நகரிலிருந்து ஒரு மைலுக்கப்பால், யானைக் கல்லின் அயலில் கேட்பதைவிடத் தெளிவாகப் பாடுமீனின் ஒலியைக் கேட்கலாம். மட்டக்களப்பு வாவியில் ஒரேயொரு குறிப்பிட்ட இடத்தில்மட்டும் இந்த ஒலி கேட்கவில்லை.

மட்டுநகர்ப் பட்டினத்திலிருந்து ஏழு மைலுக்கு அப்பாலுள்ள மண்முனை என்ற இடத்திலும் 16 மைல்களுக்கப்பாலுள்ள பட்டிருப்பு என்ற இடத்திலும், மேற்படி ஒலிகள் கேட்கின்றன எனக் குறிப்பிடுகிறார். ஒரு சமயம் தமது படகின் இயந்திரம் பழுதுற்றதால் சில இரவுகளை மண்முனை வாயிலில் கழிக்க நேரிட்டதென்றும் இரவில் தம்மைத் தூங்கவிடாத அளவிற்குப் பாடும் மீன்கள் ஒலித்தன என்றும் குறிப்பிடுகிறார்.

இப்படிப் பலர் பலவாறு கருத இடந்தரும் ஒலி, மீனின் ஒலியோ அல்லது ஊரியின் (mollusca) ஒலியோ என ஒரு நூற்றுண்டாக அறியப்படாமலிருந்து வருகிறது. ஊரிகள் பாடுகின்றன என்றால் ஏனைய இடங்களிலுள்ள ஊரிகள் பாடாமலிருக்க இவைகள் மட்டுந்தான் பாடுகின்றனவா என்பதற்கு விடை கூற முடியாமலும் மீன்கள் பாடுகின்றன என்றால் அதை மெய்ப்பிக்க முடியாமலும் இருக்கின்றது. இதை ஆராய்ந்து உண்மையைக் கண்டு வெளியிடுபவரை அடைவதற்கு உலகப் புகழ் காத்துக்கொண்டிருக்கிறது.

விபுலானந்தர் விளக்கம்

"இளவேனிற் காலத்திலே, நிறைமதி நாளாகிய பூரணை நாளிலும், அதற்கு முன்னும் பின்னுமுள்ள நாட்களிலும், வானம் களங்கமற்றிருக்கும் வேளையிலே, யாமப் பொழுதிலே, புளியந்தீவுக் கோட்டைக்கும் கல்லடிக்குமிடையிலே, சிறு தோணியினைச் செலுத்திச் சென்று, வாவி நடுவிலே, ஆர்ப்பரவமின்றி, அமைதி நிலையிலிருந்து உற்றுக் கேட்டால் நீரினுள்ளிருந்தெழுகின்ற அற்புதமாகிய இன்னிசை ஒலி செவிவழிப் புகுந்து உள்ளத்தை யுருக்கும். ...... மணி, கடல், யானை, குழல், மேகம், வண்டு, தும்பி, சங்கு, பேரிகை, யாழ் எனக் கூறிய பத்துவகை நாதங்களுள்ளே சங்கநாதமானது முரற்சி, முழக்கம் என இருவகைப்படுமென்று அறிஞர் கூறுவர். 'முந்நீர் வலம்புரி சோர்ந்தசைந்து வாய் முரன்று முழங்கி யீன்ற, மெய்ந் நீர்த் திருமுத்து' எனச் சீவக சிந்தாமணி ஒம்படைச் செய்யுளினுள்ளே இருவகை நாதமும் கூறப்பட்டன. 'மோது முதுதிரையான் மொத்துண்டு போந்தசைந்த முரல்வாய்ச் சங்கம்' எனச் சிலப்பதிகாரம் முரற்சியை மாத்திரம் கூறுகிறது. இம் முரற்சியானது சங்கினது வளர்ச்சிக்கு எற்ப நாதம் வேறுபட்டுத் தோன்றும். மட்டக்களப்பு வாவி கடலொடு கலப்பதாதலின், ஒருவகைச் சங்கு வாழ்தற்கிடமாயிற்று. அளவிற் சிறியவும் பெரியவுமான சங்குகள் இடையிட்டு முரல்வதனாலே ஏற்படும் ஓசையின் சேர்க்கை இசைத் தன்மை பெற்றுத் தோன்றுகிறது."

—விபுலானந்த அடிகளார். (யாழ் நூல்)

வானம் கருத்தால்...!

திரு. K. S. மகாதேவன், M.A., B.Sc.

பயிர்கள் வாடுகின்றன. மனம் துடிக்கும் மக்கள் 'மழை எப்போது வரும்' என்று 'குறி' கேட்கின்றனர். குறி சொல்வோனுக்கு முதலில் 'ஆவேசம்' வருகின்றது; அதைத் தொடர்ந்து மழை வரும் நாள்பற்றிய உண்மையும் அவன் உதட்டிலிருந்து உதிருகின்றது:-

ஒரு நாளையானாலும்
ஒரு வாரமானாலும்
ஒரு மாதமானாலும்
ஒரு வருஷமானாலும்
வானம் கருத்தால்
மழையும் பெய்யுமே!

பல ஆண்டுகளுக்கு முன்னர் வந்த படக் காட்சியிலே கேட்ட இப்பாடல் நம்மையெல்லாம் விழுந்து விழுந்து சிரிக்கும்படி செய்தது. ஆனால் அதே கேள்வி நம்மை நோக்கி வீசப்பட்டால் நாம் என்ன விடை சொல்வோம்?

மழை எங்கே பெய்கின்றது?

நல்லவர்கள் வாழும் இடத்தில்தான் மழை பெய்யும் என்று நல்ல உள்ளம் படைத்த நம் முன்னோர்கள் நம்பினார்கள்! ஆனால் இந்த முடிவை இன்று ஏற்றுக் கொண்டோமானால் உலகத்தின் நடு இடமாகிய வெப்பமண்டலப் பகுதிகளில்தான் (tropical regions) நல்லவர்கள் மிகுதியாக இருக்கின்றார்கள் என்று ஏற்பட்டு விடும்; ஏனென்றால் அப்பகுதிகளில்தான் பெருத்த அளவில், ஆண்டு ஒன்றுக்கு 100 அங்குலத்திற்கும் அதிகமாக மழை பெய்கின்றது! இதனில் மூன்றில் ஒரு பங்கே, சம நிலை மண்டலங்களில் (temperate zones) பெய்கின்றது. பூமியின் வட, தென் கோடி மண்டலங்களில் பெய்யும் மழையோ எட்டில் ஒரு பங்கு கூட இருப்பதில்லை! உலகத்திலேயே மிகுதியான மழை அஸ்ஸாமில் (ஒரு ஆண்டில் 805 அங்குலம்) பெய்து இருக்கின்றது. அதேபோல் உலகத்திலேயே மிகக் குறைவாக மழை (3/100 அங்.) பெய்த இடம் வால்பிஷ் விரிகுடா (Walfish Bay) ஆகும்! இந்த இடம் ஆப்பிரிக்காவின் மேற்குக் கரையில் உள்ளது.

காரணம் என்ன ?

இடத்திற்கு இடம் இவ்வாறு மழையின் அளவு மாறுபடுவதற்குக் காரணங்கள் பல உள. ஒரு பகுதியில் பெய்யும் மழையின் அளவு அப்பகுதியின் நில அமைப்பு, கடல் மட்டத்திற்குமேல் அது இருக்கும் உயரம், அதற்கும் கடலுக்கும் இடையிலுள்ள தொலைவு, அந்த நிலத்தின் தன்மை ஆகிய உண்மைகளைப் பொருத்திருக்கின்றது. மழைக்கு ஈரம் தாங்கிய காற்று இன்றியமையாதது. ஆகவே கடற்காற்று வீசும் உயர்ந்த மலைச்சரிவுகளில் மிகுந்த மழை பெய்யும். மலைகளால் தடுத்து மறைக்கப்பட்ட பகுதிகளிலோ பொதுவாக மழையே இருப்பதில்லை. இமயமலையின் தென்சரிவுகளிலே ஆண்டு ஒன்றுக்கு 200 முதல் 600 அங்குல மழை பெய்வதற்கும், இமயத்தின் வடசாரலாகிய திபெத்துப் பகுதிகளில் 10 அங்

குலம்கூட மழை பெய்யாததற்கும் இவ்வுண்மையே காரணமாகும். ஆப்பிரிக்க நாட்டுச் 'சகாரா'ப் பாலைவனம் வெப்ப மண்டலத்தில் இருப்பதுடன் மூன்று புறமும் கடலால் வேறு சூழப்பட்டிருக்கின்றது. இருந்தாலும் ஆசியாக் கண்டத்திலிருந்து வீசும் வறண்ட காற்றால் அப்பகுதி ஈரம் இழந்து மழைக்கு வேண்டிய சூழ்நிலையை இழந்துவிடுவதால், அங்கு மழை பெய்வதில்லை. பூமியின் ஒவ்வொரு பகுதியும் ஓர் ஆண்டுக் காலத்தில் ஒன்றன்பின் ஒன்றாகப் பல்வேறு பருவங்களை நுகருவது யாவரும் அறிந்ததே. எனவே அக்காலங்களில் வீசும் காற்றின் தன்மைக்கேற்ப ஆண்டுதோறும் குறிப்பிட்டதொரு காலத்திலே அப்பகுதிகளில் மழை பெய்வதை முன்கூட்டியே எதிர்பார்க்கலாம். இவ்வகை மழையைத்தான் பருவ மழை என்கின்றோம். நம் இந்திய நாட்டின் மேற்குக் கரைப் பகுதிகள் ஜூன் மாதத் தொடக்கத்தில் தென்மேற்குப் பருவக் காற்றால் மழை பெறுவதையும், கிழக்குக் கரைப் பகுதிகள் அக்டோபர் மாதத் தொடக்கத்தில் வடகிழக்குப் பருவக் காற்றால் மழை பெறுவதையும் நாம் அறிவோம்.

புரியாத புதிர்

இருந்தாலும் ஏனோ சில சமயங்களில் மழை பெய்யவேண்டிய காலத்தில் பெய்வதில்லை! தொடர்ந்து பல ஆண்டுகளாகக் குறிப்பிட்ட ஓர் இடத்தில் மழையே இல்லாமல் போதலும் உண்டு! இன்று வரை இது புரிந்துகொள்ள முடியாததொரு புதிராகவே இருக்கின்றது. எனவே மழை எப்பொழுது வரும் என்று மக்கள் ஏக்கத்துடன் கேட்பதும், அதற்கு விடையாகப் பலர் 'குறி' சொல்வதும் இயல்பாக ஆகிவிட்டது!

திங்கள் மீது பழி!

இரவு வானத்தின் எழிலரசியாக விளங்கும் நம் திங்கள் புலவர்களால் ஏற்றப்பட்ட எத்தனையோ 'பழிகளைச்' சுமந்துகொண்டு திரிகின்றது. அவை போதா என மழை பெய்வதற்கும் பெய்யாது போவதற்கும் இத்திங்களே காரணம் என்று சிலர் கருதுகின்றார்கள். திங்களின் இயக்கத்தின் அடிப்படையில்தான் நம் பஞ்சாங்கங்களில் காணப்படும் 'மழை நாள்'களெல்லாம் குறிக்கப்படுகின்றன! பிறைத் திங்களின் கோடுகள் வடதிசை நோக்கித் திரும்பினால், மழை வறட்சி அமையும் என்பதும் ஒரு நம்பிக்கை. இன்றைய அறிவியல் துறை திங்களின் இயக்கத்தைப்பற்றித் தெளிவாக அறிந்து இருக்கின்றது. இன்னும் ஆயிரம் ஆண்டுகட்கு வேண்டுமானாலும், முன்கூட்டியே திங்கள் இருக்கும் இடத்தையும், பிறையின் கோடு குறிப்பிட்ட ஓர் இடத்தில் எவ்வாறு சாய்ந்து தோன்றும் என்பதையும் முடிவு செய்துவிடலாம். ஆனால் மழையைப்பற்றி அவ்வாறு ஒன்றும் நம்மால் சொல்லமுடிவ தில்லை! இதனால் திங்களின் பிறைக்கும் மழைக்கும் எவ்வகைத் தொடர்பும் இல்லை என்பது தெளிவாகின்றது.

கோள்களும் மழையும்

மேலும் சிலர் விண்ணிலே இயங்கிக் கொண்டிருக்கும் கோள்கள், பூமியில் பெய்யும் மழையை அடக்கி ஆள்கின்றன என்று கருதுகின்றனர். கோள்கள் யாவும் நம் பூமியைப்போலவே ஞாயிற்றைச் சுற்றிக்கொண் டிருக்கும் பொருள்களே! கடிகாரத்தின் முகத்திலே நகரும் முட்கள் போன்று, காலத்திற்குக் காலம் அவற்றின் நிலைகள், பூமியிலிருந்து பார்க்கும் நமக்குப் பிரிந்தும் கூடியும் காட்சி தருகின்றன. இத்தகைய இவற்றின் கூட்டங்களையும், பிரிவுகளையும் வைத்துக்கொண்டு எவ்வளவுதான் 'சடுகுடு' விளையாடிப் பார்த்தாலும் இவற்றிற்கும் மழைக்கும் எவ்விதத் தொடர்பும் இருப்பதாக இதுவரை நிறுவ முடியவில்லை!

நம் பூமி ஞாயிற்றைச் சுற்றிச் செல்லும் வழியும், ஏனைய கோள்கள் அவ்வாறே செல்லும் வழிகளும் ஒரே தட்டில் இராமல் ஒன்றுக்கு ஒன்று சற்றுச் சாய்ந்து இருப்ப தால் பூமியிலிருந்து பார்க்கும் நம் காட்சிக்கு ஒவ்வொரு கோளும் சில காலங்களில் சற்றுத் தெற்காகவும், மற்றும் சில காலங்களில் சற்று வடக்காகவும் நகர்ந்து காணப்படுகின்றன. குறிப்பிட்டதொரு கோள் தெற்கில் அல்லது வடக்கில் தள்ளி ஓடுவதை இன்னும் ஆயிரம் ஆண்டுகட்கு வேண்டுமானாலும் இப்பொழுதே கணக்கிட்டுச் சொல்லிவிடலாம். இருந்தாலும் நம் முன்னோர்கள் வெள்ளிக் கோள் தெற்கில் தள்ளி ஓடுவதை இயற்கைக்கு மாறானதொரு நிகழ்ச்சியாகக் கருதி மழை வளம்குன்றும் என அஞ்சினர் என்பதை

> "இலங்கு கதிர் வெள்ளி தென்புலம் படரினும்" (புறம் 35)
> "தென்திசை மருங்கில் வெள்ளி ஓடினும்" (புறம்)

என்ற அடிகளால் அறியலாம். கோள்களின் நிலைக்கும் பூமியில் பெய்யும் மழைக்கும் தொடர்பு கற்பிப்பது உண்மையில் 'சோதிட காலத்து' நம்பிக்கைகளில் எஞ்சியிருக்கும் ஒன்றுகும்! கோள்களின் நிலையை முன்கூட்டியே கணிப்பதுபோன்று மழையை அவ்வாறு நடைமுறையில் சொல்ல முடியாததே கோள்களுடன் மழையை முடிபோடுவது பொருத்தமற்றது என்பதை விளக்கும்.

விண்மீன்களும் மழையும்

விண்மீன்களின் நிலையை அடிப்படையாகக்கொண்டு மழைபற்றிய முன்னோட்டத்தில் இறங்குகின்றவர்களும் இருக்கின்றார்கள். இன்று இரவு பத்து மணிக்கு விண்மீன்கள் வானத்தில் இருக்கும் நிலை, இன்னும் நூறு ஆண்டுகட்குப் பின்னும், அதே காலத்தில், மாறுமல் அப்படியே இருக்கின்றது. பூமியின் நாள் சுழற்சி காரணமாக, ஒவ்வொரு விண்மீனும் பூமியின் ஏதாவதொரு பகுதிக்கு மேல் ஒளிர்ந்துகொண்டுதான் இருக்கின்றது. வானத்து மீன்கள் சுழல்வதுபோலத் தோன்றுவது, பூமி தன்னைத்தானே சுற்றிக் கொள்வதாலும், ஆண்டுக்கொரு முறை ஞாயிற்றைச் சுற்றிக்கொள்வதாலும் உண்டாகும் 'கண்மயக்கே' என்ற உண்மையை உணர்ந்த எவரும் மழை, பனி, புயல் போன்ற கால நிலை மாற்றத்தை விண்மீன்களின் நிலையைக்கொண்டு மதிப்பிடுதல் நகைப்பிற்கிடம் ஆகும் என்பதை நன்கு உணர்வர்! சிற்சில விண்மீன்கள் சில பருவங்களில் மட்டுமே நமக்குத் தோன்றுவது உண்மையே யானுலும், அவற்றிற்கும் நம் பருவங்களுக்கும் எவ்வகைத் தொடர்பும் இல்லை என்பதை உணரவேண்டும். அவ் விண்மீன்கள் ஒளிகுன்றி அணைந்து இருண்டுவிட்டால்கூடப் பருவ காலங்கள் யாவும் இப்பொழுது போலவேதான் வந்து போய்க்கொண் டிருக்கும்!

விலங்குகளும் மழையும்

விலங்குகட்கும் ஏனைய சிற்றுயிர்கட்கும் மனிதனுக்கு இல்லாத சில நுண்ணுணர்வுகள் இருப்பது இயல்பே! அவற்றின் வாழ்க்கை அடிக்கடி மாறும் காலநிலையோடு (Weather conditions) நன்கு பொருத்தப்பட் டிருக்கின்றது. கால நிலையில் ஏற்படும் 'திடீர்' மாறுதல் அவற்றிற்கு இயல்பாக அமைந்திருப்பதிலே வியப்பு ஒன்றுமில்லை. "எறும்பு முட்டை கொண்டு திட்டை ஏறினுல் மழை பெய்தது" என்ற தொடர் நாம் அறிந்ததே! அதேபோலத் தும்பிப்பூச்சிகள் தரையோடு தரையாகத் தாழ்ந்து பறப்பது மழைக்கு அறிகுறி என்றும் சொல்வார்கள். இருந்தாலும் இச்சிற்றுயிர்கள் உடனே நிகழ இருக்கும் காலநிலை மாற்றங்களை அறிந்து கொள்ளுகின்றனவே தவிர, தொலைவில்– எதிர்காலத்தில் – நிகழும் மாற்றங்களை உணர்ந்துகொள்ளக்கூடும் என்று நாம் நம்புவதற்கில்லை. கால நிலைபற்றி 'முன்

னேட்டம்' காணும் ஆற்றல் அவற்றிற்கில்லை என்பதை எதிர்பாராது வரும் புயல், மழைபோன்ற காலநிலை மாற்றத்தால் எண்ணற்ற பறவைகளும் விலங்குகளும் மடிந்து கிடப்பதிலிருந்து தெரிந்துகொள்ள லாம்.

செடிகளும் மழையும்

செடிகள் ஆண்டுதோறும் புதிய புதிய பட்டைகளை உண்டாக்கிப் பருத்துக் கொண்டே வருகின்றன. ஒரு மரத்தினைக் குறுக்கே வெட்டினல், வெட்டு வாயில் காணப்படும் வளையங்களை எண்ணிப் பார்த்து அது எவ்வளவு ஆண்டுக் காலம் வாழ்ந்திருந்தது என்பதைச் சொல்லிவிட லாம். மேலும், தடித்த வளையங்கள் உண் டான ஆண்டில் மழை வளமும், மெலிந்த வளையம் உண்டான ஆண்டில் வறட்சி யும் நிலவின என்பதையும் உணர்ந்து கொள்ளலாம். ஆனல் எதிர்காலத்து 'முன்னேட்டம்'பற்றியோ, செடிகொடி கள் ஒன்றும் அறிவிப்பதில்லை !

இன்றைய விஞ்ஞானிகள்

கால நிலையைப்பற்றிய ஆராய்ச்சியிலே ஈடுபடாமல் இன்றைய விஞ்ஞானிகள் உறங்கிக்கொண் டிருக்கவில்லை! குறிப் பிட்ட ஓர் இடத்தில் காலநிலை மாறிக் கொண்டே சென்று முப்பத்தைந்து ஆண்டுக் காலத்திற்குப் பிறகு மீண்டும் பழைய நிலையை எய்துகின்றது என்ற உண்மையைக் கண்டிருக்கின்றனர். இதற் குக் காலநிலைச் சுழற்சி (weather cycle) என்று பெயர். பழங்காலத்து விண்ணியல் அறிஞர்களுக்குப் பூமி, திங்கள், ஞாயிறு ஆகியவற்றிடை உள்ள தொடர்பு பற்றியோ, பூமியின் கவர்ச்சி ஆற்றல் பற்றியோ ஒன்றும் தெரியாது! இருப்பி னும், ஞாயிறு திங்கள் ஆகியவற்றின் மறைவுகள் (eclipse) மீண்டும் மீண்டும் குறிப்பிட்டதொரு கால எல்லையில் சுழன்றுவருவதைக் கண்டுகொண்ட அவர்கள் அத்தகைய மறைவுகள் நிகழும் காலத்தை முன்கூட்டியே சொல்லப் பழகிக்கொண்டனர். இந்த மறைவுச் சுழற்சிக்குக் (eclipse cycle) காரணம் அறியாது திகைத்த நமக்குப் பின்னர்க் கண்டுபிடிக்கப்பட்ட புவிக் கவர்ச்சி ஆற் றல் விளக்கமாக அமைந்தது. இன்று மறைவுகள் யாவும் புவிக்கவர்ச்சி முறை யின் அடிப்படையிலே கண்டுபிடித்து அறி விக்கப்படுகின்றன. ஆனல் காலநிலைச் சுழற்சிபற்றிய உண்மைகளை விடுவிக்கும் அத்தகைய திறவுகோலை இன்னும் அறி வியல் துறை கண்டுபிடிக்க வில்லை.

ஞாயிறே காரணம்

இன்று, அறிவியல் அறிந்த வரையில், நாம் வாழும் இம்மாபெரும் மண்ணு ருண்டையைச் சூழ்ந்து கிடக்கும் காற்று மண்டலத்தின் பேரியக்கங்களுக்குக் காரணமாக இருப்பது, வெப்பத்தின் பிறப்பிடமாக இருக்கும் ஞாயிறே யாகும். ஞாயிற்றின் கதிர்கள் கொண்டுவரும் அரிய செய்திகளைத் தொகுத்துப் பார்த்துப் புரிந்துகொள்ளப் பெருமுயற்சிகள் நடந்து வருகின்றன. இருந்தாலும் கதிரவனின் கைகள் தீட்டுகின்ற எழுத்தின் பொருள் இன்னும் நமக்கு விளங்கவில்லை! ஆரப்பா, மகஞ்சதாரோ எழுத்துக்களைப் புரிந்து கொள்ளத் தமிழ் மொழியைத் திறவு கோலாகக் கொண்டதுபோல இதற்கும் ஒரு திறவுகோலைக் காணவேண்டும். அந்த நாள் வரும்வரையில் மழையைப்பற்றிய முன்னேட்டம் எல்லாம் 'வாய்த்தான் பிழைத்தான்' செய்தியாகத்தான் இருக் கும்.

பெய்யெனப் பெய்யும் மழை!

அறிவுக்கு எட்டாத வகையில் செயல் பட்டுக்கொண் டிருக்கும் இம் மழையை நினைத்தவுடன் கொண்டுவருவேன் என்று

சொல்லும் 'மழை தருவிப்போரும்' (Rain Makers) பழங்காலந்தொட்டு இருந்து கொண்டுதான் வருகின்றனர்! தென் பசிபிக் தீவுகளில் உள்ள 'மழை தருவிப்போர்கள்' தங்கள் உடல் முழுதும் கருமையையும் வெண்மையையும் பூசிக்கொண்டு ஒருவகை முரசினைக் கொட்டி ஆடுகின்றனர். கருமையும் வெண்மையும் வானத்திலுள்ள மேகங்களாம்; முரசின் ஒலி இடியின் ஓசையாம்! இதனால் மழை வரும் என்பது அங்குள்ளவரின் நம்பிக்கை.

நம் தமிழகத்தில் சிற்றூர்கள் தோறும் மழை வேண்டும் மன்று மேளதாளத்துடன் 'கொடும்பாவி' கட்டி இழுப்பது வழக்கம்! வறட்சி நீண்ட கோடை காலங்களில் அங்குச் செல்பவர்கள், "கொடும்பாவி சாகாளோ கோடிமழை பெய்யாதோ" என்று பாடும் பாட்டை இக்காலத்தும் கேட்கலாம்.

வேண்டுதலையும் மழையும்

நல்லதைப்பற்றி வேண்டும் பொழுது மன நிறைவும் இன்பமும் தோன்றத்தான் செய்கின்றன. இருந்தாலும் வானத்திலே இயங்கும் காற்றானது உலகத்தின் ஒரு மூலையிலே இருக்கும் ஒரு சிலருக்கு ஏற்ற அளவில் மாற்றமடைந்து மழையைக் கொட்டவேண்டும் என்று வேண்டிக் கொள்வது, திங்கள் தன் இயக்கத்தை மாற்றிக்கொண்டு குறிப்பிட்ட ஒரு நாளில் முழுமதியாகக் காட்சியளிக்கவேண்டும் என்றோ, குறிப்பிட்ட ஒரு தேவையை நிறைவேற்றுவதற்காக ஞாயிறு தன் ஒளியை மிகுத்துக்கொள்ள வேண்டுமென்றோ வேண்டிக்கொள்வதை ஒக்கும்! இன்று, திங்கள், ஞாயிறு இவற்றின் இயக்கத்தையும்' நிலையையும் பற்றி விஞ்ஞானிகள் தெளிவாக அறிந்திருப்பதாலும், இன்னும் ஆயிரம் ஆண்டுகட்கு அப்பாலும் அவை எப்படி இருக்கும் என்று விளக்கப்பட்டிருப்பதாலும் அவற்றில் மாற்றம் விரும்பி யாவரும் வேண்டிக்கொள்வதில்லை. அதே போல் காற்று மண்டலத்தின் இயக்கம் முழுவதும் கண்டுபிடிக்கப்பட்டு, மழை பெய்யும் காலமும் இடமும் முன்கூட்டியே அறிந்துகொள்ளக்கூடிய நிலை வந்தால், யாரும் மழையை விரும்பி வேண்டுதலையில் இறங்கமாட்டார்கள்! மேல் நாட்டில் மழைக்காக வேண்டிக்கொள்ளும்படி கேட்கப்பட்டபொழுது பாதிரியார் ஒருவர் "நண்பர்களே காற்று மேற்குத் திசையிலிருந்து வீசுகின்றதைப் பார்க்கின்றீர்கள்; இப்பொழுது வேண்டிக்கொள்வதால் என்ன பயன் கிட்டும்" என்று திருப்பிக் கேட்டதாக அறிகின்றோம்!

செயற்கை மழை!

வேண்டுதலையில் வைத்த நம்பிக்கையைக் காட்டிலும் செய்கையில் கொண்ட நம்பிக்கை சிலருக்கு அளவு மீறிவிடுகின்றது! மழை தவறிய இடங்களில் மாபெரும் வெடிகளை வெடித்து இவர்கள் மழை தருவிக்க முயல்கின்றனர். இத்தகைய சோதனைகள் யாவும் பொருளைப் பிடித்த கேடு என்று காலநிலை வல்லுநர்கள் பலர் தெளிவுபடுத்தி யிருக்கின்றனர். 1908–ல் நியூஜிலாந்து பகுதியிலே நடைபெற்ற இத்தகைய சோதனையை உடன் இருந்து பார்வை இட்ட அறிஞர் ஒருவர், விண்ணகத்திலே வெடித்த அவ்வெடிகள் ஒரு அறையினுள் கிழிக்கப்பட்ட தீக்குச்சியின் செயலைவிட அதிகமான மாற்றம் எதையும் உண்டாக்கியிருக்க முடியாது என்று குறிப்பிட்டார்! காற்றிலுள்ள ஈரம் நீர்த்துளிகளாகத் திரண்டு விழும் அளவிற்குக் காற்று மண்டலத்தின் அழுத்தத்திலே மாற்றத்தை உண்டாக்குவது மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்டது என்பது தெளிவு. சிற்சில காலங்களில் இந்த "மழை தருவிப்போரின்" முயற்சியை அடுத்து மழை பெய்வதும் உண்டு! ஆனால் காலநிலைப்

பட்டியலிலே சற்றுக் கண்ணைச் செலுத்தினால், மழைக்கு வேண்டிய சூழ்நிலை இயல்பாவே அக்காலத்து அமைந்திருந்ததைத் தெரிந்துகொள்ளலாம்!

பதினைந்தாம் புள்ளி

பதினைந்தாம் புள்ளி என்பது ஒரு விளையாட்டு. அவ்விளையாட்டின் முறையினை அறியாதவர்கள் அதில் அங்கும் இங்கும் நகர்த்தப்படும் காய்களின் இயக்கத்திற்குப் பொருள் தெரியாமல் விழிப்பார்கள். ஆனால் அந்த விளையாட்டில் வல்லுநரோ நகருகின்ற காய்களின் இயக்கத்தைப் புரிந்து கொள்வதோடு மேற்கொண்டு அவற்றின் இயக்கங்கள் எப்படி இருக்கும் என்பதையும் முன்கூட்டியே உணரும் ஆற்றல் பெற்றிருக்கின்றனர்! இன்றைய விஞ்ஞானிகளும் காற்று மண்டலத்தில் நிகழும் ஒன்று இரண்டு மாற்றங்களை உணரும் அளவில்தான் இருக்கின்றனர்கள். அவர்கள் காண்பதெல்லாம் 'பதினைந்தாம் புள்ளிக் கட்டத்தின்' ஒரு பகுதியே; முழுப் பகுதியையும் ஒரு காலத்தில் ஒருங்கே காண்பதில்லை! அந்த நிலை வந்தால்தான் காலநிலையின் ஒரு மாற்றத்துடன் மற்றொரு மாற்றத்தைப் பொருத்திப் பார்த்து எதிர்கால மாற்றங்கள் எப்படி இருக்கும் என்று சொல்ல முடியும்.

இன்றைய நிலை

இன்று, நாட்டின் பல்வேறு இடங்களிலும் உள்ள கால நிலைக் கழகங்கள் (Weather Stations) நாள்தோறும் மாறிக் கொண்டிருக்கும் வெப்பம், ஈரம், காற்றின் வேகம், காற்று மண்டலத்தின் அழுத்தம் ஆகியவற்றை அப்பொழுதுக்கப் பொழுது தலைமைக் கழகத்திற்கு அனுப்பிக்கொண் டிருக்கின்றன. அவற்றை எல்லாம் அங்கு ஒன்றுதிரட்டிப் பார்த்து அடுத்த சில நாட்களில் கால நிலையில் என்ன மாற்றங்கள் ஏற்படலாம் என்று அறிவிக்கின்றனர்கள். அதன்படிதான் நடக்கும் என்று யாரும் உறுதிகூற முடியாது!

நீண்டகால முன்னேற்றம்

1955-ம் ஆண்டு ஜூன் மாதம் 20-ம் நாள் கோயம்புத்தூரில் மழை பெய்யுமா? பெய்யும் அல்லது பெய்யாது என்று சொல்லும் ஆற்றல் இன்னும் மனிதனுக்கு ஏற்படவில்லை! எனவே எப்பொழுது மழை பெய்யும் என்று கேட்பவருக்கு இதைத் தான் நாம் கூறமுடியும்:

"வானம் கருத்தால் மழைபெய்யுமே!"

நொண்டியும் குருடும்

"விஞ்ஞானம், சமயம் ஆகிய இரண்டும் தனித்தனியே அமைந்தவை; அவற்றின் பணிநிலைகளும் வெவ்வேறு துறையினவே. எனினும் அவற்றிடையே ஒன்றுக்கொன்று உதவியாய்—சார்புடையனவாய்—உள்ள உறவு நிலை உள்ளது......... சமய ஊற்றம் இல்லாத நேர்மையான ஒரு விஞ்ஞானியை என் உள்ளம் ஏற்பதில்லை. அவற்றிடையே உள்ள தொடர்பினைப் பின்வருமாறு விளக்கலாம்: சமய உணர்வு இல்லாத விஞ்ஞானம் ஒரு நொண்டி; விஞ்ஞானத் தெளிவில்லாத சமயம் ஒரு குருடு."

—ஆல்பேர்ட் ஐன்ஸ்டீன்.

தமிழ்நாடு ... காப்பு ... நூலகம்

வினாக்களும் விடைகளும்

வயது இருபது; பளிங்கு போன்று இருந்த முகம் அம்மை வடுக்களால் கண்ணாடியில் பார்க்கவே அருவருக்கும்படி விகாரமடைந்துள்ளது. இதே கவலை மிகுந்து விட்டது. அம்மை வடுக்கள் மறைவதற்கு வகை இல்லையா?

அம்மை வடுக்களைப் போக்குவது எளிதான காரியமல்ல. பல வகையான ரண சிகிச்சை முறைகள் மேநாடுகளில் இருந்த போதிலும் இதற்கு மிக்க சாமர்த்தியமும். அநுபவமும் இல்லாவிடில் பட்ட சிரமம் வீணாகி அதிகக் கவலைப்படவேண்டி வரும்.

நம்மால் இயலாததற்குக் கவலைப்படுவதால் விமோசனம் ஏற்பட்டு விடாது; மேலும் தோற்றமும் கவர்ச்சியும் கெடவே வழியாகிறது. உங்களுக்கு உடல் வளர்ச்சி இன்னும் குறைந்தது மூன்று நான்காண்டுகளேனும் இருக்கும். சுகாதாரமான பழக்க வழக்கங்கள், தேகப்பயிற்சி, வேளா வேளைக்கு நல்ல ஆகாரம், இவற்றோடு நாள்தோறும் காலையில் உள்ளங்கையில் இரண்டு மூன்று சொட்டு தேங்காய் எண்ணெய் விட்டு முகத்தையும், கன்னங்களையும் ஒரு ஐந்து நிமிட நேரம் நன்கு தேய்த்து விட (massaging) வேண்டும். நாளடைவில் ஓரளவு வெற்றி காணக்கூடும். கவலையை விட்டுச் சந்தோஷமா யிருப்பது இதற்குப் பெரிதும் துணைசெய்யும்.

பளிங்கு போன்ற முகத்தில் தழும்புகள் விழுந்தாலும் உங்களுக்கு அது அழகுக் குறைவாகவே படும். உருவத்தில் கவர்ச்சி இருத்தல்மட்டும் போதாதென்பதை நினைவுபடுத்திக்கொள்ள வேண்டும். குணத்திலும் செயலிலும் கவர்ச்சி வேண்டும்.

அம்மை தாக்கியபோது வழக்கமான எச்சரிக்கைகளோடு வெளிச்சம் குறைத்துச் சற்று இருண்ட அறைகளிலேயே இருக்கச் செய்வது—முற்றிலும் இருண்டதாகச் செய்யக்கூடாது—வடுக்களை வெகுவாகக் குறைக்குமென்று சொல்லப்படுகிறது. தாக்கியபின் இதற்கென மருந்துகள் கண்டுபிடிக்கப்படாதபோதிலும், மிகவும் தீவிரமாக இருக்குமானாலும், கண்ணுக்கு எட்டினாலும், உடனே டாக்டர் பெனிசிலின், ஆரியோமைசின், டெர்ராமைசின் போன்ற மருந்துகளைக்கொண்டு பாதுகாப்பளிக்க முடியும் என்றும் சொல்லப்படுகிறது.

வேலையின்றி இருக்கும்போதும் மற்றவர்களைப்போலன்றி உடல் அதிகமாக வியர்க்கிறது. இதனால் துர்நாற்றமும் கூச்சமும் உண்டாகிறது, இதைத் தவிர்க்க வழி?

பலருக்கு இந்தக் குறை இருந்தபோதிலும் நாள் தவறாமல் உடலை நன்கு தேய்த்துக் குளிப்பதாலேயே இதைப் போக்கிக் கொள்ளுகின்றனர். இந்த விஷயத்தில் சோப்பின் வாசனையை நம்புவதைவிட, சென்ற இதழில் குறிப்பிட்ட மற்றப் பொருள்களை நம்புவது நல்லது. சிலர் இரண்டு வேளையும் குளிப்பார்கள். பவுடர் இட்டுக் கொள்வதும் உதவியா யிருக்கும்.

மேற்கூறிய விதங்களிலும் தவிர்க்க இயலாவிடில் டாக்டரின் யோசனை சிறந்தது. அக்குள் போன்று அதிகம் வியர்க்குமிடங்களில் வலுக் குறைந்தபடி நீர் சேர்த்த 1% பார்மலின் (formalin) கரைசலால் நனைத்து விட்டுக் கொள்வதும் இதைத் தணிக்கவல்லது. உள்ளத்தின் குறை இதற்குக் காரணமாயிருக்கும் பட்சத்தில் டாக்டர் ஏற்ற மருந்துகளால் சரிப்படுத்துவார்.

—*—

கள்

தமிழாக்கம் : **விதானி**

கள், பிராந்தி, சாராயம், விஸ்கி போன்ற குடிவகைகளைப் பற்றியும் அவற்றை உட்கொள்வதால் ஏற்படக் கூடிய விளைவுகளைப் பற்றியும் நாம் பொதுவாகக் கொண்டிருக்கின்ற நினைப்புகள் தவறானவை என்று தெரிகிறது. தெளிவான ஆராய்ச்சியின்பின் கீழ்க்காணும் முடிவுகளை ஆராய்ச்சியாளர்கள் வெளியிட்டுள்ளனர். அவற்றுள் வியப்பூட்டுவன பல காணலாம்.

- கள் எழுச்சி யூட்டும் பொருள் என்று கருதுவது தவறு; அதற்கு மாறாகக் கள் தளர்ச்சி விளைக்கும் பொருள்.

- உடலின் உள்ளுறுப்புக்களி லுள்ள உயிரணுக்களை (cell) அது நேரடியாகத் தாக்கித் தீங்கு செய்வதில்லை.

- குடிப் பழக்கம் இல்லாதவனுக்குத் தான் கள் வெறுப்புத் தரும் என்பதில்லை; வழக்கமாகக் குடிப்பவனும் அதை விருப்பத்தோடு ஏற்கிறான் எனக் கூறமுடியாது.

- உடற் பயிற்சி செய்தல், காப்பி அல்லது பிற மருந்து வகைகளை அருந்துதல் ஆகிய முறைகளால் விரைவில்(போதைத்) தெளிவு ஏற்படுத்திவிட முடியாது.

- குருதிக் குழாய்களி லுள்ள குருதி, குடித்த கள் ஆகியவற்றின் அளவுக்கு ஏற்றபடிதான் போதை அல்லது தெளிநிலை ஏற்படும்.

மேற்கண்ட ஆராய்ச்சி முடிபுகளைக் காணுமிடத்துச் சில ஐயங்கள் ஏற்படுவது இயற்கை. அவற்றுள் ஒன்றிரண்டை இங்கே காணலாம்.

கள் அருந்துவதால் எழுச்சி (ஊக்கம்) ஏற்படுவதில்லை என்றால், எப்படி அந்தப் பேர் ஏற்பட்டது? கள் ஊக்கம் ஊட்டும் ஒரு பொருள் என்று கருதப்பட்டதற்குக் காரணம் கள் அன்று. சமுதாயத்தில் தடை செய்யப்பட்ட சில நடைமுறைகள் உண்டு. தெளிநிலையி லுள்ள மனிதன் பெரும்பாலும் பொருத்தமற்ற முறைகளில் நடந்துகொள்வ தில்லை. கட்குடியனுடைய நடவடிக்கைகளில் பொருந்தாக் கூற்றுக்களும் கூத்துக்களும் பிறக்கின்றன. நாளடைவில் சிறிது சிறிதாக நம்முடைய நரம்பு மண்டலங்களைத் தாக்கிச் செயலற்ற நிலையை உண்டாக்குவதோடு மூளையின் மேற்புறப் படிவங்களைத் தாக்குவது கள்ளின் இயல்பாகும். நரம்பு மண்டலங்களும் மூளையுமே நமது நடத்தையைக் கட்டுப்படுத்தும் 'காவல் வீரர்'கள். இக் காவல் மண்டலங்கள் பாதிக்கப்பட்டதன் விளைவாகக் குடிகாரனுடைய நடவடிக்கைகளின் வரன்முறை தவறிவிடுகின்றது. கட்டுப்பாடற்ற முறையில் தோன்றும் நடவடிக்கைகளை மேற்போக்காக நோக்கும் போது ஏதோ எழுச்சி பெற்றுச் செயற்படுவதுபோல் தெரிகின்றது.

கள் குடிப்பது மிகுதியாக மிகுதியாக மூளையின் உட்புறப் பகுதிகளும் தாக்குதலுக்கு இரையாகி, செயலற்றுப் போகும் நோய் நிலை ஏற்படுகின்றது. இவ்வாறே கட்குடியனுடைய தசை மண்டலம், பேச்சாற்றல், நடக்கும் திறம் முதலாயினவும் பாதிக்கப்படுகின்றன. முடிந்த முடிபான இறுதி நிலை இதுதான் : மூளையின் ஆழ்ந்த பகுதி

ஆதாரம்: ISPS

இருதயத் துடிப்பு நிற்கும்; உயிர்த்தல் இயலாது; உயிர் வாழ்க்கையைப் பலியிட்டுக் குடிகாரன் மீளாத் துயில் கொள்கின்றன்.

மூளையைச் சேர்ந்த உயிரணுக்கள், நுரையீரல், இருதயம் போன்ற உறுப்புக்களுக்குக் கட்குடியால் குறைபாடு (சேதம்) ஏற்படுவது உண்மைதான்; எனினும், இவ்வுறுப்புக்களுக்கு ஏற்படும் குறைபாட்டைவிடக் கட்குடியால் மனிதப் பண்புக்கும் வாழ்வுக்கும் ஏற்படும் பெருங் குறைபாடுதான் நம் கவனத்துக்கு உரியது. குறைந்த அளவு கள் உடனடியாக உயிரணுக்களைத் தாக்குவதில்லை; எடுத்த எடுப்பில் கள்ளின் தாக்குதலுக்கு இடமாவன: வாய், தொண்டை, வயிறு முதலியனவே. இவ்வுறுப்புக்கள் தாக்கப்படுவதால் மனித வாழ்வுக்குப் பெரிய கேடு வந்துவிடுவதில்லை. உடலில் உள்ள குருதியில் குடிக்கும் கள்ளின் விகிதம் மிகுதியாகும் போதுதான் உடலில் உள்ள நுண்ணிய உயிரணுக்கள் தாக்கப்பட்டு உயிர் வாழ்வுக்கு உலைவைக்க நேரிடுகின்றது.

பெருங் குடிகாரர்கள் சிலர் எவ்வளவு குடித்தாலும், 'நிதானம்' இழக்காதவர்கள் போல் நடந்துகொள்கின்றனர். மற்றும் சிலர் சிறிதளவு குடித்தவுடனேயே 'கூத்' தடிக்கிறார்கள். நிறையச் சாப்பிட்டவர்களின் நிதானத்துக்கும் குறைவாகக் குடித்தவரின் கூத்துக்கும் காரணம் என்ன? ஓடுகின்ற பஸ்ஸிலே எதனையும் பிடித்துக் கொள்ளாமலே சீட்டு விற்கும் பணியாளன் (கண்டக்டர்) குறுக்கும் நெடுக்குமாக நடக்கிறுன்; அவன் நடையிலே தடுமாற்றம் ஏற்படுவதில்லை யல்லவா? ஆனால், அவன் நடப்பதைப் பார்த்து நாமும் அவனைப் போல நடக்க முடியுமா? முடியவே முடியாது. பயிற்சி காரணமாகப் பஸ்ஸின் இயக்கத்துக்கு ஏற்ற வண்ணம் தன் மேனியைச் சமாளித்துக் கொள்ளும் முறை அவனுக்குக் கைவந்த திறமாகிவிட்டது. அவனைப் போலத்தான் பெருங் குடியர்கள் பழக்கம் காரணமாக ஒரு வகையான செயற்கைத் 'தெளி நிலை' பெற்று நிதானமாக நடந்து கொள்கின்றார்கள். பயிற்சி இல்லாத பிரயாணி பஸ்ஸிலே திண்டாட்டம் போடுவதுபோல், குடித்துறையிலே பழகாதவர்கள் தடுமாறுகிறார்கள்; கூத்தடிக்கிறார்கள்.

வெளித் தோற்றத்துக்கு எவ்வளவுதான் நிதானம் உடையவர்களாகக் காட்டிக் கொண்டாலும், போதையின் அளவையும் தீவிரத்தையும் பொறுத்தவரையில் பழங் குடியனும் புதுக் குடியனும் ஒரே நிலையினரே யாவர். உடலின் அமைப்பு, அளவு ஆகியவற்றால் ஒத்த இருவர் ஒரே அளவும் இயல்பும் கொண்ட கள்ளை அருந்தினால் இருவரும் போதை நிலையிலும் ஒரே மாதிரியாகத்தான் இருப்பார்கள். குடிப் பழக்கம் இருந்தாலும் அந்த வழிக்குப் புதியவராக இருந்தாலும் வேற்றுமை கிடையாது. குருதி—கள் ஆகியவற்றின் விகிதத்துக்கு ஏற்றபடிதான் போதை ஏற்படுகின்றது.

போதை விரைவிலே நீங்கித் தெளிநிலை ஏற்படுவதற்குச் சில குறுக்கு வழிகள் உண்டு என்று சிலர் நினைக்கின்றனர். (பால் கலவாத) கடுங் காப்பியைக் குடிகாரனை அருந்தச் செய்வது, அல்லது அவனைத் தண்ணீரில் குளிப்பாட்டுவது ஆகியவற்றால் தெளிநிலை விரைவில் ஏற்படும் என்று ஒரு நம்பிக்கை இருந்துவருகின்றது. குடித்தபின் கடுமையாக உழைத்தாலும் தெளிநிலை ஏற்படும் எனவும் நம்புகின்றனர். அந்த நம்பிக்கைகள் தவறானவை. உள்ளே சென்ற கள் வேதிமுறைப்படி அடையவேண்டிய மாறுதல்கள் அடைந்து, ஆற்றலழிந்த பின்தான் தெளிநிலை ஏற்பட முடியும். இந்த ரசாயன (வேதி) மாறுதல் குடிகாரன் தூங்கினாலும் விழித்திருந்தாலும், இயங்கினாலும் கிடந்தாலும் ஒரே சீரான நிலையில் தான் நடைபெறுகின்றது. இந்தக் குறுக்கு வழிகளால் குடிகாரன் சற்றே விழிப்புறலாம்! எனினும் குருதி—கள்விகித நிலை மாறுத வரையில் போதை இருந்தே தீரும் என்று மருத்துவர்கள் கூறுகின்றனர்.

உடலினுள் செல்லும் கள் என்ன ஆகின்றது? குடித்தவுடன் ஒரு சிறிதளவு கள் இரைப் பையிலிருந்து நேராகக் குரு

திக் குழாய்க்குப் போய்விடுகின்றது. எஞ்சிய அளவில் பெரும்பகுதி இரைப் பையிலிருந்து சிறுகுடலுக்குப் பாய்ந்து அங்கிருந்து குருதிக் குழாய்களை அடைகின்றது. இரைப்பையில் உணவு இருந்தாலும் அல்லது கள்ளுடன் சேர்த்து உணவருந்தினுலும் கள்ளின் வேதி மாறுதல் தாமதப்படுகின்றது. வெறும் வயிற்றில் கள் அருந்தியவன் குதி குதி என்று குதிப்பதற்கும் நிறைய உண்டபின் கள் குடிப்பவன் 'சாது'போலக் கிடப்பதற்கும் இதுதான் காரணம். கள் வகைகளில் உணவுச் சத்துடைய பீர், ஒயின் போன்றவை குருதியைச் சென்றடையத் தாமதம் ஆவதற்கும் இதுவே காரணம். பிராந்தி, ரம், விஸ்கி போன்றவை விரைவில் குருதிக் குழாய்களை அடையக்கூடியவை.

குருதிக் குழாய்களில் வந்து சேர்ந்தவுடன் உடலில் உள்ள ஏனைய எல்லா நீரிப் பொருள் (திரவங்)களிலும் கள் கலந்து விடுகின்றது. பின்னர்ப் படிப்படியே கள் ஆற்றலாக மாற்றப்படுகின்றது. இறுதியில் கரியமில வாயுவாகவும், நீராகவும் கள் மாறிவிடுகின்றது; இதனுடன் கள்ளின் ஆற்றல் அழிகின்றது. ஒரு மணி நேரத்தில் ⅜ அவுன்ஸ் இவ்வாறு பிரிக்கப்படமுடியும். எனவே, ஒரு மணி நேரத்துக்கு ஒருமுறை ⅜ அவுன்ஸ் கள்ளை ஒருவன் எத்தனை தடவை அருந்தினுலும் 'போதை' ஏற்படாது.

ஷாம்ப்பெய்ன் என்ற கள் நேராகத் தலைக்கு ஏறுகிறது என்று மேற்கு நாடுகளிலே நெடுங்காலமாக நம்பி வருகிறார்கள். இந்த நம்பிக்கை ஒரு வகையில் பொருத்தமானதே என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். ஷாம்ப்பெய்னில் கலந்து கரைந்துள்ள வாயு இரைப்பையில் கொப்புளித்து வெளியேறுகின்றது; அந்த வாயுவின் விரைந்த அழுத்தமானது ஷாம்ப்பெயினை மற்றக் கள் வகைகளைவிடக் குருதிக் குழாய்களில் ஏற்றிவிடுகின்றது. கள்ளைப் பொறுத்த வரையில் நெடுங்காலமாக நிலவிவரும் நம்பிக்கைளில் இந்த ஷாம்ப்பெய்ன் 'கதை' ஒன்றே மருத்துவ விஞ்ஞானிகளின் ஆராய்ச்சியால் உண்மையானது என ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

உடலுக்குவேண்டிய உலோகச் சத்துகள் :

இரும்பு, சுண்ணும்பு (கால்ஷியம்) ஆகிய இரண்டும் நம் உணவின் இன்றியமையாத் தேவைகள் என்பது நம்மில் பலர்க்குத் தெரியும். இவை இரணடு மட்டும் போதா; நம் உடலுக்கு வேண்டிய பதினைந்து பொருள்களின் பட்டியல் இதோ: சுண்ணும்பு, ஃபாஸ்ஃபரஸ், மெக்னீஷியம், சோடியம், பொட்டாசியம், க்ளோரின், கந்தகம், இரும்பு, செம்பு, கோபால்டு, ஐயோடின், மாங்கனீஸ், துத்தநாகம், ஃப்ளூரின், மாலிப்டெனம்.

இவற்றுள் முதலி லுள்ள ஏழும் மிகுந்த அளவில் நமக்குத் தேவைப்படும் மூலப் பொருள்களாகும். அடுத்துள்ள ஆறும் மிகச் சிறு சிறு அளவில் இருந்தால் போதும், சிறு அளவே போதும் என்பதால் அவற்றைப் பற்றி 'மெத்தனமாக' இருந்துவிட முடியாது. குருதி ஊறுதல், உயிர்த்தல், நுண்கூடு (cell) களி லிருந்து ஆற்றலை வெளியிடுதல் முதலான சிறப்பமைந்த கடமைகளைக் கட்டுப்படுத்துவது இந்த மூலப்பொருள்களே யாகும்.

பல் கெட்டுப்போகாமல் பாதுகாக்கவல்லது ஃப்ளூரின். ஈரல் முதலான உறுப்புக்களின் வேலைகள் நன்கு நடைபெற மாலிப்டெனம் சிறந்த ஊக்கியாக அமைகின்றது. எலும்பு, பல் ஆகியவை வலிமைபெறச் சுண்ணும்பும் ஃபாஸ்ஃபரசும் கட்டாயம் தேவைப்படுவன. நுண்கூடுகளி லிருந்தும்; திசுக்களி லிருந்தும் திரவப் பொருள்கள் உள்ளும் புறமுமாக இயங்கும் இயக்கத்தைச் சாதாரண உப்பாகிய சோடியம் ஒரே சீராகக் கட்டுப்படுத்துகின்றது.

உள்ளத்தின் உண்மை

திரு. T. E. சண்முகம். M.A., M.Litt.

குறிப்பு:- மனிதன் குறைபாடுகள் பல. நன்கு ஆராய்ந்தால் இக் குறைகள் பலவற்றிற்கு உள்ளமே காரணமாக அமைந்திருக்கின்றது என்பது புலனாகும். உள்ளத்தைப்பற்றிய கேள்விகளுக்கு உள நூல் ஆசிரியர் திரு. தா. ஏ. சண்முகம் அவர்கள் இப்பகுதியில் தக்க விடையளிக்க அன்புடன் இசைந்துள்ளார்கள். அன்பர்கள் கேள்விகளை எழுதி உள்ளத்தின் உண்மையை உணரலாம்.

கேள்விகள் சுருக்கமாக இருத்தல் வேண்டும். கேள்விகளை எழுதி அனுப்புவோர் பெயர்கள் வெளியிடப் பெறா. எனினும் கேள்விகளோடு அவர்களுடைய பெயரையும், முழு முகவரியையும் குறித்து "ஆசிரியர், கலைக்கதிர், பூளைமேடு, கோயமுத்தூர் என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்."

சென்ற ஆண்டு கலைக்கதிர் இதழ் ஒன்றில் 100 வினாக்களைக் கொண்ட ஆளுமைச் சோதனை ஒன்றை வெளியிட்டிருந்ததை கலைக்கதிர் நேயர்கள் அறிவர். அந்த ஆளுமைச் சோதனை ஒருவன் உள்ளம் சிறந்த வலிவுடன் இருக்கிறதா அல்லது பிறழ்வான நிலையில் இருக்கிறதா என்று அறியப் பயன்படுவதாகும். அந்தச் சோதனையைக் கொண்டு சென்னையிலே தாழ்ந்த பொருளாதார நிலையிலுள்ள சிறுவர்களுக்குக் கொடுத்து அவர்களது உள்ள நிலையை ஆராய்ந்தபோது, பல உண்மைகள் வெளிப்பட்டன. அவைகளில் ஒன்றை இவ்விதழில் வெளியிடுகிறோம். இங்கே சோதனையிலுள்ள ஒவ்வொரு வினவுக்கும் எதிரே எவ்வளவுபேர் பிறழ்வான உள்ள நிலையைக் குறிக்கும் விடையை அளித்தார்கள் என்று குறித்திருக்கிறோம். அந்த சோதனையைப் பார்க்கும் வாய்ப்பு இல்லாதவர்களுக்காக அதிலுள்ள வினாக்கள் இங்குச் சுருக்கமாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு வினவிற்கும் எதிரே பிறழ்வான விடைகளை அளித்தவர்களின் எண் சதவிகிதத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது:

1. குழந்தையாக இருக்கும்போது தனியாகவே விளையாடும் வழக்கம் 15·45%

2. தாயுடன் உறவு சிறந்த முறையில் இல்லை 5·91

3. தத்தி தத்தி பேசும் வழக்கம் உண்டு 12·73

4. ஏதாவது ஆபத்து ஏற்பட்டால் பிரமித்து நின்றுவிடும் வழக்கம் உண்டு 57·27

5. சுலபமாக சிரிக்க முடியாது 20·91

6. வாழ்க்கையில் நடக்கமுடியாத காரியங்களையே பகற் கனவு கண்டு கொண்டிருப்பது 44·01

7. பிறரோடு இருந்தபோதிலும் தனியாகவே இருப்பதுபோன்ற எண்ணம் 17·27

8. தந்தையை விட தாயின்மேல் அதிகம் அன்பு வைத்திருத்தல் 75·00

9. பலபொருள்களைக் கண்டு அஞ்சுவது 52·26

10. இரவில் தூங்கும்போது பல எண்ணங்களால் தூக்கம் கலைக்கப்படுவது 46·36

11. அஜீர்ணத்தினால் அவதியுறுவது வழக்கம் 20·00

12. தான் வெறுக்கப்படுபவர்கள் பலர் இருக்கிறார்கள் 30·45

13. பிறரை நம்பும் வழக்கம் இல்லை 27·72

14. முன்கோபம் அதிகம் 39·09

15. தன் தாயிடம் உற்சாகமாக இருக்கும் இயல்பு கிடையாது 19·09
16. காலையில் எழுந்தவுடன் கைகால் அயர்ச்சி உண்டு 31·36
17. தூக்கத்தில் பேசும் வழக்கம் உண்டு. 23·63
18. காரணமின்றி மனது உற்சாகத்திற்கும் கவலைக்கும் மாறுவது உண்டு 61·36
19. பாரிச வாயுவால் அவதிப்பட்டது உண்டு 22·71
20. அதிகம் வெட்கம் உடையர் 63·18
21. பயித்தியம் பிடித்து விடுமோ என்ற பயம் 10·45
22. கடவுளைக் கண்ணால் நேராகக் கண்டது உண்டு 0·45
23. நடு இரவில் அடிக்கடி பயப்படுவது உண்டு 34·54
24. யாரோ ஒருவர் தீங்கிழைக்க இருக்கிறார்கள் 42·27
25. பெற்றோர்கள் சகோதர சகோதரிகளுடன் ஒருதலை சார்பாக இருந்தார்கள் 46·36
26. தற்கொலை செய்துகொள்ள வேண்டும் என்ற எண்ணம் உண்டு 2·00
27. அடிக்கடி பகற் கனவில் ஈடுபடுவது உண்டு 30·45
28. குழந்தைப் பருவத்தை இன்பமாகக் கழிக்கவில்லை 10·45
29. மயக்கம் அடிக்கடி வந்தது உண்டு 38·18
30. ஏதாவது ஒன்றைச் சொல்லிவிட்டுப் பிறகு அதை ஏன் சொன்னேம் என்று வருத்தப்படுவது உண்டு 83·54
31. தந்தையினுடன் உறவு சிறந்த முறையில் இல்லை 53·18
32. தலைவலியால் அடிக்கடி அவதிப்படுவது உண்டு 36·81
33. வீட்டைவிட்டு ஓடிவிட வேண்டும் என்ற எண்ணம் அடிக்கடி ஏற்படுவது உண்டு 35·45
34. வலிவந்தது உண்டு 10·00
35. எந்த வலியையும் பொறுத்துக் கொள்ள முடியாது 51·81
36. தனியாகவே இருக்க வேண்டும் என்ற ஆசை உண்டு 24·09
37. சுலபமாக அழுதுவிடுவது உண்டு 34·54
38. பாம்பைக் கண்டால் அதிக பயம் 53·18
39. பொறுப்பு எடுத்துக்கொள்ள விரும்புவது இல்லை 12·73
40. பிறர் தன்னை மயக்கித் தனது எண்ணத்திற்கு மாறாக நடக்கவைக்க முயல்கிறார்கள் என்று எண்ணுவது உண்டு 18·18
41. பிறர் குற்றம் குறை கூறினால் பொறுத்துக் கொள்ள முடியாது 46·81
42. பிறரிடம் சிநேகம் செய்து கொள்வதில் கஷ்டம் 40·91
43. எதையாவது கொளுத்திவிட வேண்டும் என்ற எண்ணம் உண்டு 15·91
44. குடும்பத்தில் பயித்தியம் பிடித்தவர்களோ, வயதுக்கேற்ற அறிவு இல்லாதவர்களோ அடிக்கடி வலிவருவதால் அவதியுறுபவர்களோ இருக்கிறார்கள் 17·27
45. துன்பத்தையே பகற் கனவாகக் காணுவது வழக்கம் 46·36
46. தற்போது வாழ்க்கையில் உற்சாகமாக இல்லை 41·81
47. ஏதாவது காரியத்தைச் செய்துகொண்டிருந்தால் அதைவிட்டு மனது வேறு எங்கேயாவது செல்லுவது 34·09
48. தூக்கத்தில் விழுந்துவிடுவது போன்ற உணர்ச்சி உண்டு 42·72
49. கண்களில் அடிக்கடி வலி ஏற்படுவது உண்டு 31·36
50. தூக்கத்தில் நடக்கும் வழக்கம் உண்டு 30·00
51. நெருப்பைக் கண்டால் அதிகம் பயப்படுவது உண்டு 42·72
52. பிறர் தன்னுடைய எண்ணத்தைத் தெரிந்து கொள்ளுகிறார்கள் என்று வருத்தப்படுவது 31·36
53. பிறரை மறுத்துப் பேசும் வழக்கம் உண்டு 30·91

54. பெற்றோர்கள் இன்பமாக வாழவில்லை 50·90

55. பிறர் தன்னை விபரீதமாக எண்ணுகிறார்கள் என்ற எண்ணம் 39·09

56. இறப்பைப் பற்றி எண்ணி வருத்தப்படுவது 54·54

57. நண்பர்கள் தனக்கு எதிராக நடந்து கொள்ளுகிறார்கள் 53·63

58. சிறிது காலம் பாதி குருடாகவோ, செவிடாகவோ, ஊமையாகவோ இருந்தது உண்டு 7·73

59. நண்பர்களைவிட உடல் வலிமையில் மிகக் குறைந்தவன் என்ற எண்ணம் 50·45

60. குடும்பத்தில் தற்கொலை செய்து கொண்டவர்கள் உண்டு 7·27

61. உடல் வலுவுக் குறைவினால் துன்பப்படுவது உண்டு 37·72

62. எப்போதும் தன் உள்ளம் கிளர்ச்சி அடைந்திருக்கும் 43·63

63. எதிரில் வருபவர் பார்க்காமல் இருப்பதற்காக தெருவில் ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கம் போகும் வழக்கம் உண்டு 45·90

64. இரத்தத்தைப் பார்த்து சகிக்க முடியாது 50·00

66. எப்போதும் உற்சாகமாக இருப்பது கிடையாது 18·18

66. பிறர் தம்மை அதிகம் ஏளனம் செய்கிறார்கள் என்ற எண்ணம் உண்டு 36·91

67. வாந்தியால் அவதியுறுவது உண்டு 28·63

68. தன் அம்மா வாழ்க்கையில் விருப்பமற்று இருக்கிறார்கள் 36·81

69. தன்னையும் அறியாது தான் செய்யும் காரியங்கள் எல்லாம் தவறாகப் போவது உண்டு 61·36

70. தான் பழைய மனிதன் இல்லை, மாறி விட்டேன் என்ற எண்ணம் 34·54

71. தான் குழந்தையாக இருக்கும் போது பிறர் குழந்தை தன்னை விபரீதமாக நினைத்தது உண்டு 14·54

72. பயங்கரமான கனவினால் அடிக்கடி அவதியுறுவது உண்டு 35·45

73. சிறந்த உடல்வலிவுடன் இருப்பதில்லை 45·90

74. சரியாக இரவில் தூங்குவது இல்லை 30·45

75. கழுத்தையோ தோளையோ அடிக்கடி கோணலாகச் செய்துகொள்ளும் பழக்கம் உண்டு 15·91

76. தனியாகவே இருப்பது போன்ற உணர்ச்சி அடிக்கடி ஏற்படுகிறது 23·63

77. தன்னைவிட உயர்ந்த அந்தஸ்த்தில் இருப்பவர்கள் நடுவில் இருந்தால் தான் தாழ்ந்தவன் என்ற எண்ணம் அடிக்கடி வருவது உண்டு 52·7

78. பிறரோடு இருந்தால் அதில் வெறுப்படைவது 26·82

79. தனம்பிக்கை கிடையாது 15·45

80. இரவில் தன்னை யாரோ பின்தொடர்கிறார்கள் என்ற எண்ணத்தில் அவதியுறுவது உண்டு 39·09

81. தான் அதிர்ஷ்டம் இல்லாதவன் என்று நினைப்பது 61·86

82. தலைக் குத்தலினால் அடிக்கடி அவதியுறுவது 34·09

83. உடம்பில் ஏதாவது ஒரு பாகத்தில் ஏதேனும் வலியினால் எப்போதும் வேதனைப்படுவது 42·72

84. ஏதாவது நோய் வந்துவிடுமோ என்ற அச்சம் 41·81

85. ஆற்றின் மேலுள்ள பாலத்தைக் கடப்பதற்குப் பயம் 33·63

86. மின்னலுக்குப் பயப்படுவது 33·63

87. ஒரு காரியத்தைப் பலதடவை செய்தால்தான் திருப்தி அடைவதுண்டு 71·81

88. தாழ்மை உணர்ச்சியினால் அவதியுறுவது உண்டு 32·72

89. மாரடைப்பது போன்ற உணர்ச்சி அடிக்கடி ஏற்படுவது உண்டு 16·36

90. ஏதாவது உடலில் குறைகள் உண்டு 10·91

91. கோபத்தை எளிதில் வெளியிட்டு விடுவது 50·45

92. கண்கள் அடிக்கடி மங்கலாகப் போவது உண்டு 54·08

93. பசி சரியாக எடுப்பதில்லை 50·00

94. சுய அறிவு இன்றி சிறிதுகாலம் இருந்தது உண்டு 29·09

95. தன்னுடைய வீட்டு சூழ்நிலை சிறந்தது அன்று 38·18

96. தன்னுடைய குடும்பம் தன்னைச் சிறந்த முறையில் நடத்தவில்லை 25·91

97. ஐந்து வயதுக்குப் பிறகு படுக்கையில் சிறுநீர் கழிப்பது உண்டு 40·91

98. கூட்டத்தில் தன்னை நசுக்கிவிடுவார்கள் என்று பயப்படுவது உண்டு 44·01

99. பெண்களை ஏறெடுத்துப் பார்ப்பது கிடையாது 25·91

100. பெண்களை வெறுத்துப் பேசுதல் உண்டு 14·54

மேலே குறிப்பிட்ட நூறு விடைகளினின்றும் முக்கியமாக அதிகம் பிறழ்வான விடைகளை உடைய முதல் 25 வினாக்களைக் குறிப்போம். அந்த வினாக்களின் விடைகளே பொதுவாகக் குமரப் பருவத்துப் பையன்களிடம் காணப்படும் அறிகுறிகளாகும். அவைகள் பின்வருமாறு:—

30. ஏதாவது சொல்லி விட்டு பிறகு அதை ஏன் சொன்னேம் என்று வருந்துதல் 83·54

8. தந்தையை விட தாயை அதிகம் நேசித்தல் 75·00

87. ஏதாவது வேலையை பல தடவை செய்தால்தான் திருப்தி 71·81

20. வெட்கத்தினுல்அவதியுறுதல் 63·18

81. தான் அதிர்ஷ்டம் இல்லாதவன் என நினைத்தல் 61·81

18. உற்சாகத்திற்கும் துன்பத்திற்கும் ஒரு காரண மின்றி உள்ள நிலை மாறுதல் 61·36

69. தன்னையும் அறியாது தவறிழைத்தல் 61·36

4. ஆபத்தான நிலையில் பிரமித்து போய் விடுதல் 57·27

56. சாவைப் பற்றிய எண்ணங்களினுல் அவதியுறுதல் 54·54

92. கண்கள் அடிக்கடி மங்கலாகப் போகுதல் 54·08

57. நண்பர்கள் அடிக்கடி தன்னிடம் மாறுபடுதல் 53·63

31. தந்தையோடு சிறந்த உறவு கொள்ளாமை 53.18

38. பாம்பைக் கண்டு நடுங்குதல் 53·18

77. பெரியோர்களின் முன்னே தனது தாழ்மை நிலைமையை எண்ணி வருந்துவது 52·70

9. பல பொருள்களைக் கண்டு நடுங்குவது 52·26

35. வலியை பொறுக்க முடியாமை 51·86

54. பெற்றோர்கள் உற்சாகமாக வாழ்க்கை நடத்தாமை 50·90

59. நண்பர்களைவிட உடல் வலிமையில் குறைந்தவன் என்ற எண்ணம் 50·45

91. முன்கோபம் 50·45

93. இரத்தத்தைக் காண சகிப்பதில்லை 50·00

41. பிறர் குற்றம் கூறினுல் வருத்தப் படுவது 46·86

10. தூங்கும்போது பல எண்ணங்களால் தூக்கம் அடிக்கடி கலைக்கப்படுவது 46·36

காதல் படும் பாடு

திரு. தா. ஏ. ஞானமூர்த்தி. M.A.

தொடர் கதை :

42. மருத்துவர் சஞ்சீவி

சிவராமனைச் சிறைப்படுத்திப் பத்து நாட்கள் கழிந்தன. புருஷோத்தமன் ஒரு நாள் காலை படை நிலையத்திலிருந்து பூந்த மல்லிக்கு வந்தான். அவன் அடிக்கடி செங்கற்பட்டிலுள்ள தன் படைநிலையத்தி லிருந்து பூந்தமல்லிக்கு வருவதுண்டு. அவன் அன்று தன் மாளிகைக்குள் நுழைந்த போது, முன் அறையில் அவ னுடைய தந்தையும், தாயும், அத்தை குண வதியும் அமர்ந்திருந்தார்கள்.

தன் மகனைக் கண்டதும் பரசுராம நாயக் கர் அவனுடைய உடல்நலம், தொழில் நலம் முதலியவைகளைப் பற்றி விசாரித்தார்; பிறகு அவர் ''அந்தப் பையன் சிவராமன் மீது படையதிகாரிகள் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டார்கள்?'' என்று கேட் டார்.

''அதுவா? அந்த வழக்கு நேற்றுதான் எடுத்துக்கொள்ளப்பட்டது'' அந்தக் கய வனுக்கு முடிவு நெருங்கிவிட்டது'' என்று புருஷோத்தமன் அலட்சியமாகக் கூறி ஞன்.''

'நம்முடைய புருஷோத்தமனை அவன் எப்பொழுதும் பகைக்கிறுன். அக் கொடி யவன் ஒழிய வேண்டும். அந்த வழக்கைப் பற்றி விவரமாகச் சொல் புருஷோத்தமா'' என்ருள் பரசுராம நாயக்கர் மனைவி.

''அந்த மடையன் சிவராமன் ஏதேதோ சொல்லித் தப்பித்துக்கொள்ள முயன்ருன்; படை நிலையத்தில் அவனுக்குப் பல கொடு மைகள் இழைக்கப்படுகின்றனவாம்; அவற் றைப்பற்றி ஒரு சொற்பொழிவே செய்து விட்டான். அவையெல்லாம் வழக்குக்குப் பொருந்தாதவை. அடுத்து நீலகண்டன் நிகழ்ந்த உண்மைகளை உரைத்தான். நீலகண்டன் வீதி வழியே போய்க்கொண் டிருந்தபோது சிவராமன் வேண்டுமென்றே அவன்மீது வந்துமோதினுன். அதற்காக நீலகண்டன் அவனைச் சிறிது கடிந்துரைத் தான். உடனே சிவராமன் தன் வாயில் வந்தவாறு தாறுமாருக நீலகண்டனை ஏசி ஞன். அதற்கு நீலகண்டன் சிவராமனை அன்போடு நோக்கி, ''அப்பா சிவராமா, நீ இப்போது குடிவெறியில் மூழ்கியுள்ளாய், உன்னைத் துன்பத்திற்குள்ளாக்க நான் விரும்பவில்லை. நீ உடனே நேராக உன் அறைக்குச் சென்று அமைதியாகப் படுத் துக்கொள'' என்று அறிவுரை கூறினுன். நீலகண்டன் எவ்வளவு அன்புடையவன் பாருங்கள்!'' என்ருன் புருஷோத்தமன்.

''இவையெல்லாம் நீலகண்டன் சொன் னவைதானே! அவன் உண்மை தவருத வன்போலப் பேசுகிருயே!'' என்று அத்தை குணவதி கடுமையான குரலில் கூறினுள்.

''நீலகண்டன் உண்மை தவருதவன் தான். சிவராமன் நீலகண்டனைத் தாறுமாருய்த் திட்டிக்கொண்டிருந்தபோது

தற்செயலாய் நான் அங்குச் சென்றேன். அப்போது சிவராமன் சொற்கள் என் செவிகளில் விழுந்தன. அந்தப் படுபாவி நீலகண்டனை எவ்வளவு இழிவாகப் பேசினான் தெரியுமா...?''

அவன் நீலகண்டனைப் பேசியது குற்றமாகிவிட்டது! வேறு யாரையாவது ஏசியிருந்தால் அது உங்களுக்குக் குற்றமாகப் பட்டிருக்காது அல்லவா?'' என்று குணவதி கூறிப் புருஷோத்தமனை ஊறுத்து நோக்கினாள்.

''நீங்கள் இங்கு ஒன்றும் உளருதீர்கள்'' என்று மிக்க வெறுப்போடு பதிலுரைத்தான் புருஷோத்தமன்.

''நீங்கள் ஏன் இப்படி அவனை உறுத்துப் பார்க்கிறீர்கள்? உங்கள் பார்வை எனக்கு அச்சமாயிருக்கிறது'' என்று புருஷோத்தமனின் தாய் குணவதியை நோக்கிக் கூறினாள்.

''குணவதியிடம் நீங்கள் யாரும் ஒன்றும் பேசாதீர்கள். அவள் சொற்களை நீங்கள் பொருட்படுத்த வேண்டாம்...'' என்றார் பரசுராம நாயக்கர். பிறகு அவர் புருஷோத்தமனை நோக்கி நீலகண்டனைச் சிவராமன் திட்டிக்கொண்டிருந்தபோது அங்குச் சென்றாய்...பிறகு?'' என்று கேட்டார்.

''ஆம், அந்த அறிவிலி சிவராமன் நீலகண்டனை, 'அரக்கன், கொடியவன்' முட்டாள், உலோபி' என்றிப்படி வாயில் வந்தவாறு திட்டினான். ஒரு கூலிப் போர் வீரன் இவ்வளவு ஒழுங்கீனமாக நடந்து கொள்வதை என்னால் பொறுக்க முடியவில்லை.எனவே நான் குறிக்கிட்டேன். நான் சிவராமனை 'பிச்சைககாரப் பேய்!' என்று குறிப்பிட்டது உண்மை. என்னைப் போன்ற உயர்தர படையதிகாரிகள் கூலிப்போர்வீரர்களை இப்படி அழைப்பது சாதாரணமாக உண்டு. உடனே சிவராமன் தன் கையால் என்னை ஓங்கிக் குத்தினான். நான் அடியைத் தாங்கமுடியாமல் கீழே விழுந்தேன். அடுத்துத் தன் துப்பாக்கி நுனியிலுள்ள ஈட்டியால் அவன் நீலகண்டனைத் தாக்கினான். அதற்குள் மற்ற போர்வீரர்கள் அங்கு வராமலிருந்திருந்தால் அப்பாவி நீலகண்டனைக் கொலைசெய்திருப்பான். அவனுக்கு எத்தகைய தண்டனை கொடுத்தாலும் தகும்'' என்று ஆத்திரத்தோடு புருஷோத்தமன் கூறினான்.

''ஆம், அவனைக் கொலைசெய்ய நீ உன்னால் இயன்றளவு செய்துள்ளாய்'' என்றாள் குணவதி.

''அவனைக் கொலைசெய்ய நான் இயன்றதைச் செய்திருக்கிறேனா? என்ன பேசுகிறீர்கள்?'' என்றான் புருஷோத்தமன்.

''அவள் சொல்வதை நீ கவனிக்க வேண்டாம். அது அவளுடைய இயல்பு. சரி, நீலகண்டனுக்குப் பலத்த காயமா?'' என்றார் பரசுராம நாயக்கர்,

''பலத்த காயமில்லை. அவனுடைய தோள் சதைக்குள் ஈட்டி சிறிது தூரம் மட்டுமே ஊடுருவிச் சென்றிருக்கிறது'' என்று பதில் கூறினான் புருஷோத்தமன்.

''அந்த ஈட்டி அவன் இதயத்திற்குள் ஊடுருவிச் சென்றிருந்தால் நன்றாயிருந்திருக்கும். மேலும் அது அவனோடிருந்த மற்றொருவன் இதயத்திற்குள்ளும் பாய்ந்திருக்க வேண்டும்'' என்று குணவதி கூறினாள்.

இதைக் கேட்டதும் பரசுராம நாயக்கர் பொறுமை இழந்தார். அவர் தம் தங்கையை நோக்கி ''குணவதி இப்படி எல்லாம் நீ பேசுவது தவறு. நீ இப்படிப் பேசுவதை நான் பொறுக்க மாட்டேன்'' என்றார்.

''நீங்கள் பொறுத்தால் என்ன? பொறுக்காமற்போனால் என்ன? அதைப்பற்றி எனக்குக் கவலை இல்லை'' என்றாள் குணவதி. அவள் பார்வையில் கடுமை நிறைந்திருந்தது.

''அப்பா, அத்தைக்குப் பயித்தியம் பிடித்துவிட்டது; சந்தேகமே இல்லை'' என்று புருஷோத்தமன் கூறினான்.

''புருஷோத்தமா, என்ன உளறுகிறாய்? பேசாமல் இரு...... குணவதி, உனக்கு உடல் நலமில்லைபோல் தெரிகிறது. நீ உன் அறைக்குச் சென்று ஓய்வெடுத்துக் கொள்'' என்றார் பரசுராம நாயக்கர்.

''என் உடம்புக்கு ஒன்றுமில்லை. என் உடல் நலத்தைக் குலைப்பது எது தெரியுமா? இங்கு இருப்பவர்களில் யாருக்கும் தெரியாது. எனக்கு மட்டும் தெரியும்; இன்னொருவரும் அதை அறிவார். அனால் அவர் இப்போது இங்கில்லை'' என்றாள் குணவதி. அவளுடைய பார்வை, போக்கு இவைகள் பார்ப்பதற்கு பயமாய் இருந்தன.

இத் தருணத்தில் அருளானந்த அடிகள் அங்கு வந்தார். அவர் அறை வாயிலின் கண் வந்ததும் அவருடைய பார்வை குணவதிமீது பட்டது. அங்கு ஏதோ விபரீதம் நடந்திருப்பதாக எவர் உடனே உணர்ந்து கொண்டார். அவர் உள்ளத்தில் கலவரம்

ஏற்பட்டது. அவர் அறைக்குள் நுழையத் தயங்கினர்; பிறகு தன்மனதைத் தேற்றிக் கொண்டு தாம் உள்ளே வரலாமா என்று பரசுராம நாயக்கரை அனுமதி கேட்டார்.

''தாங்கள் எங்களுக்கு அன்னியர்போல அனுமதி கேட்கிறீர்களே!'' என்ருர் பரசுராம நாயக்கர்.

''அத்தையின் பார்வை அடிகளாரை அச்சுறுத்தி யிருக்கும்'' என்று புருஷோத்தமன் கூறினன்.

குணவதிக்குச் சீற்றம் பொங்கியது. ''புருஷோத்தமா, என்னை அவமதித்துப் பேச உனக்கு எவ்வளவு துணிவடா?'' என்ருள். பிறகு அவள் அடிகளாரை நோக்கி, ''என்னுடைய உடல் நிலையைப்பற்றி நாங்கள் சற்றுமுன் பேசிக்கொண்டிருந்தோம். என்னுடைய உடல் நிலையைப்பற்றி இவர்களுக்கெல்லாம் என்ன தெரியும்? அது தங்களுக்குத்தானே தெரியும்! தாங்கள் தானே எனக்கு ஞானசிரியர்!'' என்று உரத்துச் சிரித்தாள். அவள் சிரிப்பு மாளிகை எங்கும் ஒலித்தது;

''இவளுக்கு உண்மையாகவே பயித்தியம்தான். நம் புருஷோத்தமன் சொன்னது சரி'' என்று பரசுராம நாயக்கர் தம் மனைவியிடம் தனியாகக் கூறினர்.

''என்னைப்பற்றியா அண்ணு நீங்கள் பேசுகிறீர்கள்? அப்படியானல் உரத்து வெளிப்படையாகப் பேசுங்கள். அடிகளாரும் அதைக் கேட்கட்டும்! நீங்கள் என்ன பேசினலும் பேசுங்கள். ஆனல் உங்கள் பேச்சில் புருஷோத்தமன் குறுக்கிடுவதை நான் பொறுக்க மாட்டேன். மீண்டும் அவன் என்னை அவமதித்தால் அந்த அற்பனை நான் கொன்று விடுவேன்'' என்று குணவதி சீற்றத்தால் தன் கண்களை உருட்டி விழித்து நோக்கினள்.

புருஷோத்தமனுக்கு அச்சமேற்பட்டது. அவன் தன் தந்தையை நோக்கி ''இனி என்னல் பொறுக்க முடியாது. அத்தையால் நமக்கு ஆபத்து நேரும்போல் தெரிகிறது'' என்று சொல்லி வெளியே செல்ல எழுந்தான்.

அவன் தாய் காமாட்சி, ''போகாதே புருஷோத்தமா. நீ இன்று முழுதும் எங்களோடேயே இருக்கவேண்டும்'' என்ருள். அதற்குள் குணவதி சீற்றம் தணிந்து அமைதியோடு அமர்ந்திருந்தாள். அதைக் கண்டதும் காமாட்சி ''நீ இன்னும் அந்த அற்பனுடைய கதையை முடிக்கவில்லையே! அவனுடைய பெயர் என்ன? மறந்துவிட்டேன்'' என்று தன் மகனை நோக்கிக் கூறினள்.

''சிவராமனைப்பற்றிக் கேட்கிறீர்களா?'' என்று கூறிக்கொண்டே புருஷோத்தமன் மீண்டும் தன்னிடத்தில் அமர்ந்தான். பிறகு அவன் அடிகளாரை நோக்கி, அடிகளாரே, உங்களுக்கு அந்தச் செய்தி தெரியுமா?'' என்று கேட்டான்.

''தெரியும்...... கேள்விப்பட்டேன்...... அவன்... அவன்...அவனுக்குப் பாவம்...''

''கொலைதண்டனை விதிக்கபபட்டுள்ளது'' என்று புருஷோத்தமன் அடிகளார் வாக்கியத்தை முடித்தான. அடிகளாருக்கு அதைச் சொல்ல நா எழவில்லை. சொற்களுக்குத் தடுமாறினர்.

புருஷோத்தமன் இதைச் சொல்லி முடிப்பதற்குள் குணவதி தன் இருப்பிடத்திலிருந்து குதித்தெழுந்தாள்; ஓ...வென்று பயங்கரமான குரலில் அலறினள்; புருஷோத்தமனை நோக்கி நான்கடி நடந்தாள்; அதற்குள் உணர்விழந்து திடீரெனக் கீழே விழுந்தாள். உடனே பரசுராம நாயக்கர் ஓடி அவளைத் தூக்கினர். குணவதியைக் கவனிப்பவர் அக் குடும்பத்திலேயே அவர் ஒருவர்தான். அவர் மனைவி காமாட்சி பணியாட்களை அழைத்தாள்.

பரசுராம நாயக்கர் குணவதியைத் தூக்கிச் சென்று படுக்கைமீது கிடத்தினர். ''இவள் உயிர் போய்விடும்போல் தெரிகிறது. காமாட்சி, இங்கே வந்து இவளைக் கவனித்துக்கொள். புருஷோத்தமா, கொஞ்சம் தண்ணீர் கொண்டுவா. அடிகளாரே, அந்த மருந்துச் சீசாவை எடுங்கள்.'' இங்ஙனம் அவர் பரபரப்புடன் பேசினர்.

அடிகளார் தாம் அமர்திருந்த இடத்தை விட்டு அசையவில்லை. அவர் முகத்தில் அச்சமும் கவலையும் நிறைந்திருந்தன. அவர் குணவதியின் முகத்தை உற்றுநோக்கினர். அதற்குள் பணியாட்கள் பலர் வந்துவிட்டார்கள். குணவதியின் வேலைக்காரி ஓடிவந்து தன் தலைவியின் நிலையைக் கண்டாள். அவள் உடனே பரசுராம நாயக்கரை நோக்கி ''மருத்துவரை அழைத்து வரச் சொல்லுங்கள்'' என்று வேண்டினள். பிறகு அவளும் மற்ருெரு வேலைக்காரியும் சேர்ந்து குணவதியின் மூச்சைத் தெளிவிக்கத் தங்களால் இயன்றதைச் செய்தார்கள். ஆனல் பயனில்லை. பிறகு அவளை அவளுடைய அறைக்குத் தூக்கிச் சென்று அங்குப் படுக்கையில் கிடத்தி, மேலும் தங்களுக்குத் தெரிந்த

சிகிச்சைகளைச் செய்யத் தொடங்கினார்கள். மீண்டும் அவ் வேலைக்காரி மருத்துவரை அழைத்துவர வேண்டும் என்று பரசுராம நாயக்கரை வேண்டினாள்.

''ஆம், மருத்துவரை அழைத்துத்தான் வரவேண்டும்'' என்று சொல்லி, ''அடே இராமா ஊருக்குள் ஓடிப்போய் மருத்துவர் சஞ்சீவியை அழைத்து வா'' என்று தம் பணியாளன் ஒருவனுக்குக் கட்டளை யிட்டார் பரசுராம நாயக்கர்.

''சஞ்சீவியையா அழைத்து வரச் சொல்கிறீர்கள்?'' என்று காமாட்சி கூறிக் கொண்டே தன் மகனை நோக்கினாள். பொன்னம்பலத்தின் இரண்டாம் மனைவி மீனாட்சி சஞ்சீவியினுடைய மகள். ஆகையால்தான் காமாட்சி தன் மகன் முகத்தை நோக்கினாள். ''தக்க மருத்துவ உதவியில்லாமல் என் தங்கை துன்பப்படக் கூடாது. சஞ்சீவியை அழைத்து வருவதால் தவறில்லை. இராமா... ஓடு. உடனே சஞ்சீவியை அழைத்துவா'' என்றார் பரசுராம நாயக்கர்.

மருத்துவரை அழைத்துவர இராமன் ஓடினான். மற்ற பணியாட்களும் அறையை விட்டு நீங்கினர். கவலைதோய்ந்த அடிகளார் முகத்தைப் பரசுராம நாயக்கர் கண்ணுற்றார். அடிகளார் தம் அச்சத்தையும் கவலையையும் மறைக்க முயன்றார். ஆனால் அவர் முகம் உண்மையை வெளிப்படுத்தியது.

'அடிகளார் அவர்களே தங்களுக்கும் உடம்பு நலமில்லையா'? என்ன? தங்கள் முகம் மெலிந்து வெளுத்துத் தோன்றுகிறதே!'' என்றார் பரசுராம நாயக்கர்.

''குணவதியின் போக்கு எப்படிப் பட்ட வரையும் அச்சுறுத்துமே! அதைக் கண்டு அடிகளார் திகைப்படைந் துள்ளார் என்பதில் ஐயமில்லை. என் உடலும் உள்ளமும் இன்னும் நடுங்குகின்றன''என்றி கூறினாள் காமாட்சி.

'அத்தையின் போக்கு பேயையும் நடுங்கவைக்கும். நான் வெளியே போய் வருகிறேன் அம்மா. அந்த மருத்துவன் சஞ்சீவியைச் சந்திக்க விருப்பமில்லை. அவனுடைய மகள் மீனாட்சி என்னைப் பொறுத்த மட்டில் குற்றமற்றவள் என்று எடுத்துரைத்தும் அவன் என்னை நம்பவில்லை. மீனாட்சிக்கு நேர்ந்த தொல்லைகளுக்கெல்லாம் நானே காரணம் என்றெண்ணி என்னை அம் மருத்துவன் சஞ்சீவி வெறுக்கிறான். எனவே நான் வெளியில் செல்கிறேன்'' என்று புருஷோத்தமன் சொல்லிவிட்டு அவ்விடத்தி னின்றும் அகன்று தோட்டத்திற்குச் சென்று உலாவிக்கொண் டிருந்தான்.

சஞ்சீவி, பரசுராம நாயக்கரின் குடும்ப மருத்துவர் அல்லர். அக் குடும்பத்தவர் அவரைச் சாதாரணமாக அழைப்பதில்லை. அவர்களுக்கு மருத்துவ உதவி தேவையானபோது செங்கற்பட்டிலிருந்து மருத்துவரை அழைத்து வருவார்கள். பரசுராம நாயக்கரின் பணியாட்கள் சில சமயம் நோய்வாய்ப்பட் டிருந்தபோது அவர்களுக்காகச் சஞ்சீவி அழைக்கப் பட்டார். இப்படிப்பட்ட தருணங்களில் சஞ்சீவி பரசுராம நாயக்கரின் மாளிகைக்கு வர நேர்ந்தபோது அச் செல்வக் குடும்பத்தினர் அவரைச் சிறிதும் மதிப்பதில்லை.

இராமன் ஓடிச்சென்று சஞ்சீவி வீட்டை அடைந்தான். அப்போது சஞ்சீவி தம் குதிரை வண்டியில் வெளியே புறப்பட்டுக் கொண்டிருந்தார். இராமன் பரபரப்புடன் குணவதியின் நிலையைக்கூறி, சஞ்சீவியை உடனே வரும்படியாக அழைத்தான். சஞ்சீவி பரசுராம நாயக்கர் மாளிகைக்குச் செல்லத் தயங்கினார்.

''ஐயா, நான் சொல்வது உண்மை. குணவதி அம்மாள் ஆபத்தான நிலையில் கிடக்கிறார்கள். உடனே புறப்படுங்கள்'' என்று இராமன் வேண்டினான்.

சஞ்சீவி சிறிது நேரம் சிந்தித்தார். பிறகு, ''சரி, வருகிறேன்; வண்டியில் ஏறிக்கொள்'' என்று இராமனிடம் கூறினார்.

சஞ்சீவி புருஷோத்தமனை மனமாரவெறுத்தார். தன் மகள் மீனாட்சி அடைந்த அவமானத்திற்கு முழுக் காரணம் புருஷோத்தமனே என்று அவர் உறுதியாக நம்பினார். மேலும் அவர் பரசுராம நாயக்கர் குடும்பத்தவரைச் சிறிதும் விரும்பவில்லை. எனினும் தம் வெறுப்பை அவர் வெளிப்படுத்தவில்லை. ஏனென்றால் பரசுராம நாயக்கரின் அதிகாரம் அவ்வூர் முழுதும் செல்லும். அவர் அதிகாரத்திற்கு முன் சஞ்சீவி நிற்க முடியாது. எனவே எப்போதாவது சஞ்சீவி அவருடைய மாளிகைக்குப் போகநேர்ந்தால் அவருக்கு மிக்க மரியாதை காட்டுபவர்போல நடந்துகொள்வார். பரசுராம நாயக்கரும் அவர் மனைவியும் அவரைச் சற்றும் பொருட்படுத்த மாட்டார்கள். அவர் மகள் மீனாட்சிபற்றிய வழக்குத் தொடங்கியதிலிருந்து பரசுராம நாயக்கரின் குடும்பத்தவர் அவரோடு எவ்விதத் தொடர்பும் வைத்துக்கொள்ளவில்லை.

எப்போதாவது அவரைச் சந்திக்க நேர்ந்தால் அவர்கள் அவரை அறவே புறக்கணித்தார்கள்.

இராமன் சஞ்சீவியை அழைத்தபோது அவர் செல்லத் தயங்கியதன் காரணம் இதுவே. ஆனால் சிறிது நேரத்திற்குள் அவர் செல்ல உடன்பட்டது இரக்கத்தினால் அன்று. அவருக்குப் பரசுராம நாயக்கர் குடும்பத்தவரில் ஒருவர் மீதும் இரக்கம் கிடையாது. அவர் போக இசைந்ததன் காரணம் இரண்டு; ஒன்று பரசுராம நாயக்கரை அவர் வெளிப்படையாகப் பகைத்துக்கொள்ள விரும்பவில்லை; மற்றொன்று, எவ்வளவுதான் பரசுராம நாயக்கர் குடும்பத்தவர் உயர்ந்தவர்களாக இருந்தாலும் அவசர நிலையில் தம்முடைய உதவியை அவர்கள் நாடியே ஆகவேண்டும் என்ற எண்ணம் அவருக்கு மனநிறைவை உண்டாக்கியது.

இதிலிருந்து சஞ்சீவி இரக்கமும் பரந்த மனப்பான்மையும் உடையவர் அல்லர் என்று உணரலாம். அவர் சுயநலமிக்கவர். தம்மை அவமதிப்போரை வெளிப்படையாகப் பகைக்காமல் இருப்பதன் காரணம் அவர்தம் சுயநலமேயாம்.

சஞ்சீவி பரசுராம நாயக்கர் மாளிகையை அடைந்ததும் இராமன் அவரை மாளிகைக்குள்ளே அழைத்துச் சென்றான். அவரைக் கண்டதும் பரசுராம நாயக்கர், "வாருங்கள், சஞ்சீவி. என் தங்கை குணவதி மிகவும் நோய்வாய்ப்பட்டிருக்கிறாள். அவள் மயங்கிக் கீழே விழுந்துவிட்டாள்; சுமார் முக்கால்மணி நேரமாக உணர்விழந்திருக்கிறாள். அவளுடைய பணிப்பெண்கள் ஏதோ சிகிச்சை செய்தார்கள். ஆனால் இன்னும் உணர்ச்சிபெற வில்லை...... காமாட்சி, நீ மருத்துவரைக் குணவதியிடம் அழைத்துச் செல்" என்றார்.

சஞ்சீவியைக் குணவதியிடம் அழைத்துச் செல்லக் காமாட்சிக்கு மனமில்லை. எனினும், மறுத்தால் தான் இரக்க மற்றவள் என்று பழிப்பார்களே என்றஞ்சி அவள் உடன்பட்டாள்.

சஞ்சீவி அங்கு அடிகளாரைக் கண்டு அன்புடன் அவருக்கு வணக்கம் செலுத்தினார். அடிகளாரும் தம் வணக்கம் மூலமாகச் சஞ்சீவிக்குத் தம் அன்பைத் தெரிவித்தார். இதைக் கண்ட பரசுராம நாயக்கர் சஞ்சீவி சென்ற பிறகு அடிகளாரை நோக்கித் "தாங்கள் சஞ்சீவி மீது இவ்வளவு அன்புடையவர்கள் என்பது எனக்குத் தெரியாது" என்றார்.

"இவ்வூரிலுள்ள எல்லோரிடத்தும் நான் அன்பாக இருக்கவேண்டுவது என்னுடைய கடமை அல்லவா" என்று அடிகளார் பதிலுரைத்தார்.

பிறகு பரசுராம நாயக்கர் சஞ்சீவி மகள் மீனாட்சியைப்பற்றி விசாரிக்கலானார். அவரும் அடிகளாரும் முன்னறையில் அமர்ந்து இங்ஙனம் உரையாடிக்கொண்டிருந்தனர்.

சஞ்சீவி மிடுக்காக முன்சென்ற காமாட்சியைப் பின்தொடர்ந்துசென்று குணவதியின் அறைக்குள் நுழைந்தார். அவ்வறை மேல்மாடியில் நீண்ட தாழ்வாரத்தின் முடிவில் இருந்தது. அவ்வறையின் சன்னல்கள் தோட்டத்துப் பக்கமாக அமைந்திருந்தன. மாளிகையின் அப் பகுதியில் கீழே செல்லும் மற்றொரு படிவழியும் இருந்தது. அவ் வழி பணியாளர் இருப்பிடத்தைச் சார்ந்துள்ள ஒரு சிறு அறைக்குச் சென்றது. அவ்வறையின் கதவு வழியாகச் சென்றால் தோட்டத்துச் சுவர்ப் பக்கத்தேயுள்ள சிறு வெளியிடத்தை அடையலாம்.

சஞ்சீவி அவ்வறையின் வாயிலின்கண் அடிவைத்ததும் சற்றுத் திடுக்கிட்டார். அவருடைய கண்கள் மிகவும் உன்னிப்பாக அவ்வறையைப் பார்வையிட்டன. இது மிக விரைவில் நடந்தேறியது ஆகையால் இதைக் காமாட்சியோ அல்லது அவ்வறையில் இருந்த குணவதியின் பணிப்பெண்ணோ கவனிக்கவில்லை. குணவதி இன்னும் உணர்வு பெறாமல் அசைவின்றிப் படுக்கையில் கிடந்தாள்.

குணவதிக்கு மயக்கம் ஏற்பட்ட விதம் முதலானவைகளைப் பற்றிச் சஞ்சீவி பணிப்பெண்ணை வினவினார். பணிப்பெண் பதில் கூறிக்கொண்டிருக்கும்போது சஞ்சீவியின் உள்ளம் ஏதோ ஆழ்ந்து சிந்தித்துக்கொண்டிருந்தது. காமாட்சியும் பணிப்பெண்ணும் அவர் போக்கைக் கவனித்தார்கள். ஆனால் அது அவர் தொழிலின் பாவனைபோலும் என்று அவர்கள் கருதினார்கள். இரண்டு அல்லது மூன்றுமுறை சஞ்சீவியின் கண்கள் அவ்வறையைச் சுற்றிப் பார்வையிட்டன. அவர் குணவதியின் கையைப் பிடித்து நாடியைப் பரிசோதித்துக்கொண்டிருந்தபோதுகூட அவர் கண்கள் அவ்வறையைச் சுற்றி உலாவி அங்கிருந்த பொருள்களை ஆராய்ந்தன.

"அஞ்சுவதற்கு ஒன்றுமில்லை. குணவதிக்கு ஏதோ சிறிது திகைப்பு ஏற்பட்டிருக்கிறது. அவ்வளவுதான்" என்று முடிவில் சஞ்சீவி கூறினார்.

அவர் மொழிகளில் காமாட்சிககு நம்பிக்கையில்லை.

"குணவதிக்கு எப்படித் திடீரென உணர்ச்சி போய்விடும் என்பது எனக்குப் புரியவில்லை. என்னுடைய மகன் புருஷோத்தமன் தன் படைநிலையத்தில் நடந்த போர் வீரனின் வழக்கைப் பற்றிச் சொல்லிக்கொண்டிருந்தான்......" என்று காமாட்சி சொல்லித் தன் பேச்சை முடிப்பதற்குள் பணிப்பெண், "அப் போர் வீரனின் பெயர் சிவராமன். அவன் படையில் சேர்வதற்கு முன்பு இவ்வூரிலேயேதான் இருந்தான். தங்களுக்கு நினைவு இருக்கலாம்" என்று சஞ்சீவியை நோக்கிக் கூறினாள்.

சஞ்சீவி பதிலுரைக்கவில்லை. அவர் குணவதியின் முகத்தை உற்று நோக்கிக்கொண்டிருந்தார். அவளுடைய கண்கள் நன்கு திறந்திருந்தன.

சஞ்சீவி திடீரென எழுந்தார். அவருடைய கண்கள் மீண்டும் அறையைச் சுற்றி உலாவின.

"நான் போய் மருந்து அனுப்புகிறேன். குணவதி அமைதியான இடத்தில் இருக்க வேண்டும்" என்றார் அவர்.

காமாட்சி மிக்க செருக்கோடு, "இதையெல்லாம் தாங்கள் சொல்லவேண்டியதில்லை. குணவதியை எப்படிக் கவனித்துக்கொள்ளவேண்டுமென்பது எங்களுக்குத் தெரியும். செங்கற்பட்டிலிருந்து எங்கள் குடும்ப மருத்துவரை அழைத்து வருவதே நல்லது" என்றாள்.

அவளுடைய செருக்கு மிகுந்த இம்மொழிகளைச் சஞ்சீவி செவியேற்க வில்லை. மீண்டும் ஒருமுறை இளைத்து, மெலிந்து, வெளுத்துத் தோன்றும் குணவதியின் முகத்தை அவர் உற்று நோக்கினார்; பிறகு அங்கிருந்து விரைந்து புறப்பட்டார். காமாட்சியை அவர் பொருட்படுத்த இல்லை.

"இவரை மதித்து இங்கே அழைக்கவே இவருக்குக் கர்வம் தலைக்கேறி விட்டது" என்றாள் காமாட்சி. ஆனால் சஞ்சீவி அவள் சொற்களைப் பொருட்படுத்தவில்லை; அறையினின்று வெளியே வந்து விரைந்து நடந்தார். காமாட்சி அவரைப் பின் தொடர்ந்தாள்.

(தொடரும்)

நூல் அரங்கு

(மதிப்புரைக்கு இரண்டு பிரதிகள் அனுப்ப வேண்டும்)

பொய்யாமொழி:— ஆசிரியர்: திரு. பி. எஸ். ஜி. ஜி. கோவிந்தசாமி அவர்கள்— வெளியிட்டோர்: புதுமலர் நிலையம், திருச்சி ரோடு, கோவை — பக்கம்: 100 - விலை ரூபாய் 1—8—0.

திருக்குறளிடத்து ஆர்வமும் அறிவும் மிகுதியாகப் பெருகிவருகின்ற காலம் நம் காலம். பல புது உரைகள்; பல புது விளக்கங்கள். எத்துணை உரைகளும் விளக்கங்களும் எழுந்தாலும் திருக்குறள் மேலும் சுரங்க மாகவே பொலிந்துவருகின்றது. நண்பர் கோவிந்தசாமி அவர்கள் தமிழ் மொழிபால் மாசற்ற காதலுடையவர்; உரிய முறையில் தெளிவாகக் கற்றறியும் முயற்சியுடையவர். பெருந்திருவுடையர்; அதே சமயத்தில் தெள்ளியராய்த் திகழும் சிறப்பும் பெற்றவர். அவர் திருக்குறள் பற்றி ஒரு கட்டுரைத் தொகுதி வெளியிட்டிருப்பதைக் காண உள்ளம் மகிழ்கின்றது.

'பரிமேலழகரா, அவர்க்கு என்ன தெரியும்' என்ற மனப்பான்மை முனைப்புடன் வீறுகொண் டெழுந்து கூத்தாடும் இக் காலத்திலும் 'பரிமேலழகர் தம் உரையினை மறுத்தற்கு எளியேன் ஏற்றவ னல்லன்' என அடக்கமாக எழுதும் மனப்பான்மை ஆசிரியரின் மாண்பினைப் புலப்படுத்து கின்றது. இவ்வாறு எழுதுவதால் நண்பர் கோவிந்தசாமி பரிமேலழகரையே பின் பற்றுகின்றார் என எண்ணுதல் வேண்டா. கட்சிப் பூசலுக்கும் சமயச் சழக்குகட்கும் இரையாகித் தவிக்கும் வள்ளுவரை இந் நூலாசிரியர் தம் தெளிவு கொண்டே காணுகின்றார். தமக்கு நேர்மையெனத் தோன்றுகின்ற கருத்துக்களையே எடுத்துரைத்துச் செல்கின்றார்.

பொருளின் இன்றியமையாமை, பொருளை அறநெறிப்பட ஈட்டி அருட் செல்வம் சிறக்கவும் அறம் தழைக்கவும் வாழ்தல் முதலான கருத்துக்களை முதற் கண் உள்ள கட்டுரைகள் தெளிவுறுத்து கின்றன. வள்ளுவர் வகுத்த அறம் என்னும் கட்டுரை பொதுவுடைமைக் கருத்து வழிப்பட நிற்கின்றது. வன்முறை யற்றதாய் அருள் நெறியும் அமைதிச் சார்பும் கொண்ட பொதுவுடைமையே வள்ளுவர் வகுத்த அறம் என்ற விளக்கம் அடுத்துக் காணுகின்றோம். இல்வாழ்க்கை, வள்ளுவரின் அரசியல், வெகுளாமை, சான்றாண்மை முதலான கட்டுரைகள் தம் கட்டுரைத் தலைப்புக்கு ஏற்ற குறள் மணிகளின் விளக்கங்களைத் தம்பால் கொண்டு இலங்குகின்றன. இறைவழிபாடு, வள்ளுவர் தம் ஊழ்க்கொள்கை என்ற இரண்டு கட்டுரைகளும் வாசகர்களின் சிந்தனையைத் தூண்டுகின்றன. இறுதிக் கட்டுரை திருக்குறள் எக்காலத்தும் பொய்யாமொழியாக இலங்குவதைச் சுருக்கமாக விளக்கு கின்றது.

''மனிதனின் வாழ்நாளில் கடந்து செல்லும் பல பருவங்களே 'பிறவிகள்' எனக் கருதப்படும்'' என்னும் போது பிறவி பற்றிய ஆசிரியரின் கருத்தும், ''ஊழ் என்பது சூழ்நிலை என்னும் பொருளில்தான் திருக்குறளில் கையாளப் பெற்றிருத்தல் கூடும்'' என்னும்போது ஊழ்பற்றிய ஆசிரியரின் தீர்ப்பும் நீள நினைந்து தோயும் ஆராய்ச்சியைத் தூண்டிவிடுகின்றன. சமயச் சிமிழுக்குள் வள்ளுவரைச் சிக்க வைக்கும் சமய வெறியரையும், நாத்திக வாதத்தில் வள்ளுவரை வலைவீசிப் பிடிக்க முயலும் வீணரையும் சாடுமிடத்து நூலாசிரியரின் துணிவுற்ற தெளிநிலை சிறப்பாகப் பொலிகின்றது. ''உரிமை உரிமை என்று பேசுகின்றோமே, எங்கே உரிமை? அரசியலில் உரிமை இருந்தால் மக்கள் இன்று அல்லல்பட மாட்டார்களே? சமூகத் துறையிலே உரிமை இருந்தால் சோதிடம் ஒழிந்திருக்கவேண்டுமே? தமிழகமே, நீ என்று தான் பழஞ்சிறப்பை அடையப் போகிறாய்? அதற்கும் சோதிடம் பார்த்துக் கெட்டொழியப் போகிறாய்! — என்று வரையுங்கால்ஆசிரியரின் நாட்டுப் பற்றும் சீர்திருத்தச் சிந்தையும் புலப்படுகின்றன.

நூல் முழுவதும் சிறப்புற அமைந்துள்ளது; தமிழகத்துக்குப் புதிய ஓர் எழுத்தாளர் அறிமுகமாகியுள்ளார்.

* * *

சமணமும் தமிழும்:—ஆசிரியர்: திரு. சீனி. வேங்கடசாமி அவர்கள் — வெளியிட்டோர்: சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், பிராட்வே, சென்னை—பக்கம்: 236 விலை ரூபாய் 2—8—0.

கிறித்தவமும் தமிழும், பௌத்தமும் தமிழும் ஆகிய சிறந்த நூல்களைத் தமிழுலகுக்கு உதவிய திரு. சீனி. வேங்கடசாமி அவர்கள் பல ஆண்டுகள் ஆராய்ந்து சமணமும் தமிழும் என்ற நூலை வரைந்துள்ளார். இப்போது வெளிவந்துள்ளது இந்நூலின் முதற் பகுதியாகும். சமண சமயத் தத்துவங்களைத் தெளிவாக விளக்குவது இந்த நூல். மேலும் அச்சமயம் தமிழகத்துக்கு வந்த வரலாறும், தமிழகத்தில் தன்னை நிலை நாட்டிக்கொண்ட வகையும் முதலான செய்திகள் தமிழ் மொழி வரலாறு தமிழக வரலாறு ஆகிய வற்றோடு இயைபுற விரிவாக விளக்கப் பெற்றுள்ளன. பயன் தரும் ஆராய்ச்சி நூல்கள் எழுதுவோர் மிகச் சிலர்; அவருள்ளும் விருப்பு வெறுப்புக்களை இயன்ற அளவு நீக்கிப் பொறுமை காத்து எழுதுவோர் மிகச் சிலர். நம் மதிப்புரைக்கு வந்துள்ள இந் நூலைப் படிக்கும்போது, திரு. வேங்கடசாமி அவர்கள் அருகிவரும் பின்னைய குழுவினருள் ஒருவர் என்பது தெளிவாகத் தெரிகின்றது. 'உண்மையாக உழைத்து ஆராய்ச்சி நூல் எழுதும் உழைப்பாளிகளுக்குத் தமிழ் நாட்டிலே இடம் இல்லை' என மனம் தளர்ந்து எழுதும் ஆசிரியரைத் தமிழகம் இனியேனும் பேராதரவு தந்து ஊக்குவிக்க வேண்டுமென விழைகின்றோம். இந்நூலின் அடுத்த பகுதியும், ஏனைய சமயத் தொடர்புடைய ஆராய்ச்சி நூல்களும் இவ்வாசிரியர் வாயிலாக விரைவில் வெளிவரும் நாளைத் தமிழ்ப் பற்றுடையோர் ஆவலுடன் எதிர்பார்ப்பர்.

இது செய்தி

ஏப் 15: வங்காளப் புத்தாண்டுப் பிறப்பான இன்று அங்கு 162 ஆண்டுகளாக இருந்துவந்த சமீன் முறை சாய்ந்தது.

ஏப் 16: ஆசிய - ஆப்பிரிக்க மாநாட்டில் கலந்துகொள்ள திரு. நேரு இந்தோனேழ்சியாவை அடைந்தார். ஆசிய ஆஃபிரிக்க மக்கள் தம் தலைவிதியைத் தாங்களே வகுத்துக்கொள்ள வழி உண்டாக்கும் பாண்டுங் மாநாட்டுக்கு இரழ்சிய அரசு வாழ்த்து அனுப்பியது.

எப் 17: மக்கள் சீன அய். நா. வில் சேர்வதைத் தாம் விரும்புவதாகப் பாகித்தான் முதல் அமைச்சர் திரு. முகமதாலி கூறினார்.

ஏப். 18: இன்று காலை உலகப் புகழ்பெற்ற பருப் பொருள் விஞ்ஞானி ஈன்சுடீன் உலகிலிருந்து மறைந்தார்.

இந்தோனேழ்சியாவில் பாண்டுங் என்ற இடத்தில் ஆசிய-ஆஃபிரிக்க மாநாடு துவங்கியது. இதில் 29 நாடுகள் பங்குகொண்டன.

ஏப் 19: 'தமிழ் இன்பம்' நூல் எழுதி இந்திய அரசுப் பரிசைப்பெற்ற சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் திரு. சேதுப் பிள்ளை பொன்னுடை போர்த்திப் பாராட்டப்பட்டார்.

ஏப். 20: மொழித் துறையில் கட்டாயமாக இந்தியைத் திணிப்பதால் மக்கள் இடையே வெறுப்புணர்வே பெருகும் என்றும், கன்னித் தமிழுக்கு இந்தி இணையில்லை என்றும் திரு. இராசகோபாலாச்சாரியார் கூறினார்.

ஏப். 25: இசை அரசர் திரு. எம். எம். தண்டபாணி தேசிகர் அண்ணாமலைப் பல்கலைக் கழக இசைத்துறைப் பேராசிரியராக ஏற்படுத்தப்பட்டார்.

ஏப். 28: தென் வியட்நாம் கோநகர் சைகானில் உள்நாட்டுப் போர் மூண்டு பல பகுதிகள் தீக்கிரை ஆயின. நூற்றுக் கணக்கான மக்கள் உயிர் இழந்தனர்.

ஏப். 30: இறந்துபோன டாக்டர் ஈன்சுடீனின் விருப்பமுறி (உயில்) இன்று வெளியிடப்பட்டது.

மே 1: உலக மெங்கும் உள்ள தொழிலாளர்கள் தமக்குப் பல்வேறு உரிமைகள் தேடித்தந்த மே நாள் விழாவைச் சிறப்புறக் கொண்டாடினர்.

மே 3: சட்ட மூலம் நாட்டில் பொதுமொழி ஏற்படுத்த இயலாது என்றும், எல்லா இந்திய மொழி கட்கும் பொதுவரி வடிவம் இருத்தல் நலம் என்றும் சென்னையில் திரு கிருட்டின மேனன் கூறினார்.

மே 7: இந்தி மொழி நாட்டு மொழியாக்கப் பட உள்ள காலவரையறை போதாதென்றும், மொழிச் சிக்கல்களைத் தீர்க்க பொறுமையும் அமைதியும் வேண்டும் என்றும் சென்னை முதல் அமைச்சர் திரு. காமராசர் கூறினார்.

மே 9: எல்லாக் கோயில்களிலும் தமிழிலேயே வழிபாடு செய்தல் வேண்டும் என்ற கோரிக்கைகளுக்குத் தென் இந்திய பூசாரியர் கழகச் செயற்குழு எதிர்ப்புத் தெரிவித்தது.

மே 10: இந்தியாவில் அடுத்த பொதுத் தேர்தல் 1957-ஆம் ஆண்டின் தொடக்கத்திலேயே நடைபெறவேண்டும் என்று ச்ரீநகரில் கூடிய தேர்தல் பொறுப்பு ஆணையாளரின் மாநாடு முடிவு செய்தது.

மே 11: ஒத்து வாழ்தலே இரழ்சியாவின் நிலையான வெளி நாட்டுக் கொள்கை என்று இரழ்சிய முதல் அமைச்சர் திரு. நிகோலாய் புல்கானின் கூறினார்.

மே 13: திருக்குறளுக்குப் புத்துரை கண்ட திரு. நாமக்கல் கவிஞருக்குச் சென்னை கவர்னர் திரு. ச்ரீபிரகாசா கோவையில் பொன்னுடை போர்த்திச் சிறப்பித்தார்.

மே 14: இந்தியப் படைத் தலைவர் திரு. இரேசேந்திரசிங்சி வேலையிலிருந்து ஒய்வு பெற்றார்; திரு. சிரீநகேழ்சி என்பவர் புதுப்படைத் தலைவரானார்.

கலைக்கதிர் அச்சகம்

டெலிபோன் நெ. 201

அச்சகத்தின் கோட்பாடு :

"செய்வன திருந்தச் செய்"

முதல்தரமான அச்சுப் பொறிகள்!	உயர்தரமான அச்செழுத்துக்கள்!

முத்துக் கோத்தன்ன

அச்சுக் கோப்பு

சித்தத்தைத் தொடும்

செயல் திறன்!

★

மன நிறைவான வேலைப்பாடு!

★

அன்பர்கள் பேராதரவை அச்சகம் வேண்டுகிறது

கலைக்கதிர் அச்சகம்,

6/256-B, அவனுசி ரோடு, பாப்பநாயக்கன்பாளையம், கோயமுத்தூர்.

இலக்கிய ரசிகர்களுக்கு!

சாந்தி

ஆசிரியர்: ரகுநாதன்

(தலைசிறந்த கலை இலக்கிய மாத இதழ்)

* கண்ணைக் கவரும் ஆர்ட் அட்டைப் படம்.
* பிரபல எழுத்தாளர்களின் சிறந்த சிறுகதைகள், கவிதைகள், சினிமா, நாடக விமர்சனங்கள், கட்டுரைகளுடன் வெளிவருவது.
* அமோகமான ஆதரவையும், பாராட்டையும் பெற்றுவருவது.

தனிப் பிரதி: 0–4–0 வருட சந்தா: 3–0–0

எல்லா இடங்களிலும் ஏஜண்டுகள் தேவை.

: விவரங்களுக்கு :

சாந்தி,

81, ஹைரோடு, திருநெல்வேலி ஜங்ஷன்.

தந்தி: "கெங்கா—கோயமுத்தூர்" டெலிபோன்: 616.

ஸ்ரீ கார்த்திகேயா ஸ்பின்னிங் & வீவிங் மில்ஸ் லிமிடெட்

தபால் பெட்டி நெ. 18,
சிங்காநல்லூர் போஸ்ட், கோயமுத்தூர்.

○ ● ○

ரிங் கதிர்கள் :	17048
டபிளிங் :	760
கோனிங் :	120

ரிஜிஸ்டர்டு டிரேட் மார்க்.

உயர்ந்த ரக 40, 60, 80, ஒற்றை, இரட்டை, முறுக்கு நூல்கள் தயார் செய்கிறேம். 40^{s} ஸ்டேப்பிள் நூல் கிடைக்கும்.

○ ● ○

விபரங்களுக்கு:

G. ராமசாமி நாயுடு,
கவர்னிங் டைரக்டர்,
விலாசத்திற்கு எழுதவும்.

டெலிபோன்: நெ. 17. தந்தி: ''ரங்க விலாஸ்''

ஸ்ரீ ரங்க விலாஸ் ஜின்னிங், ஸ்பின்னிங்

அண்டு

வீவிங் மில்ஸ் லிமிடெட்.

*

(ஸ்தாபிதம்: 1922-ல்)

ரிஜிஸ்தர் ஆபீஸ்: பூளைமேடு, கோயமுத்தூர்.

மூலதனம்	...	ரூ. 16,00,000
வெளியிடப்பட்டு வசூலான		ரூ. 15,02,500
வேலைசெய்யும் மொத்த கதிர்கள்:		30,000

20 நெ. முதல் 100 நெ. வரை ஜவுளி நூல் தினுசுகள், பனியன் வகையருக்களுக்கு உபயோகப்படும் கோன் நூல் தினுசுகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

இன்னும் அதிக யந்திரங்களை வைப்பதற்கு கட்டிடங்கள் தயாராயிருக்கின்றன.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
21742
சென்னை 600

*

மானேஜிங் ஏஜண்டஸ் அண்டு பாங்கர்ஸ்:

பி. எஸ். கோவிந்தசாமி நாயுடு அண்டு சன்ஸ்,

பூளைமேடு, —::— கோயமுத்தூர்.

*

இந்திய மூலதனம், இந்தியக் கைத்தொழிலாகிய இந்த சுதேசித் தொழிலை ஆதரியுங்கள்.

நல்ல விதைப் பருத்தி விதையும், மாட்டுத் தீவனத்திற்குப் பருத்தி விதையும், குடியானவர்களுக்கும், வியாபாரிகளுக்கும் நியாயமான விலைகளில் சப்ளை செய்கிறோம்.

உரத்திற்கும், மாட்டு உணவிற்கும் ஏற்ற எக்ஸ்பெல்லர் கடலைப் புண்ணாக்கு சரசமான விலைக்கு விவசாயிகளுக்கும் தாராளமாய்க் கொடுக்கப்படும்.

நவீன முறையில் தயார் செய்து சுத்தம் செய்யப்பட்ட திடமான கடலெண்ணெய் நம் தேசம் பூராவிற்கும் சப்ளை செய்வதுமல்லாமல், அயல் நாடுகளின் தேவைக்கும் கனிசமான முறையில் குறித்த காலத்தில் ஏற்றுமதி செய்கிறோம். இதர விபரங்களுக்கு கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்

உணவு தானியம், கரும்பு, பருத்தி ஆகிய வைகளின் உற்பத்திப் பெருக்கத்திற்கு மிக அத்யாவசியமாய் வேண்டப்படும் உரமாகிய எக்ஸ்பெல்லர் நிலக்கடலைப் புண்ணாக்கு தயார் செய்கிறோம். கனிசமான அளவில் எல்லோருக்கும் சப்ளை செய்ய ஏற்பாடு செய்கிறோம்.



ஸ்ரீ ரங்கவிலாஸ் ஜின்னிங் & ஆயில் மில்ஸ்

பாப்பநாய்க்கன்பாளையம்

போன் நெ. 51 தந்தி "ஆயில்மில்ஸ்"

தபால் பெட்டி நெ. 151 கோயமுத்தூர்

SRI RAMAJAYAM

Telegram: "PIONEER" Telephone No: 160

THE
COIMBATORE PIONEER MILLS LTD.,

P. B. No. 4,

PEELAMEDU, COIMBATORE.

Started in 1935 with 12,320 Spindles. ★ At Present 23,738 Spin[illegible]es

Founder Partners: Messrs. P. S. G. & SONS.

The Firm has been started with the only object of Manufacturing Superior Quality Yarns.

✱

"B" Mills under construction at Perianaickenpalayam for Spinning Low and Medium Counts.

✱

Practical Training being given to Diploma Students in L. T. M., L. M. E. and L. E. E.

✱

Manufacturing:

40s Carded Yarn—Single—Doubled—Hanks, Cone, Cheese.
60s Carded Yarn— " — " — " " "
100s Combed Yarn—Single—Hanks.
2/60s – 100% Staple Fibre —Hanks.

✱

Authorised Capital	**Rs. 25,00,000**
Issued, Subscribed and Paid-up Capital ...	**Rs. 21,00,000**

MANAGING AGENTS & SECRETARIES:

Messrs. T. R. Narayanaswamy Naidu & Co.,

PEELAMEDU, COIMBATORE.

Printed at Kalaikathir Achchagam, Avanashi Road, Pappanaickenpalayam, Coimbatore